பக்கங்கள்: 20

விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | மாசி 23 புதன்கிழமை 07.03.2018 | கதிர் 122

## வன்முறைகளுக்கு எதிராக அரசு உடனடி நடவடிக்கை

**சபையில் கூறினார் பிரதமர்**

கொழும்பு, மார்ச் 07

கண்டியில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுக்கு எதிரான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வதற்குப் பணித்துள்ளார் எனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கண்டி வன்முறை தொடர்பில் நாடாளுமன்றத்தில் பக்கம் 18

# தீர்வைத் தரக் கூடியோருடன்தான் தமிழரின் தலைமை பேசவேண்டும்

## மஹிந்த ராஜபக்ஷ ஆலோசனை 'காலைக்கதிருக்கு' விசேட செவ்வி



கொழும்பு, மார்ச் 07

"தீர்வைத் தரக் கூடியோருடன்தான் – அந்தத் தீர்வை நடைமுறைப்படுத்தும் வல்லமையுடையோருடன்தான் – தமிழரின் தலைமை பேச வேண்டும். அந்தத் தெரிவில் சம்பந்தன் தலைமையிலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தவறிழைத்துவிட்டது. மைத்திரி – ரணில் தரப்பினால் நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் உகந்த ஒரு தீர்வை எட்டவும் முடியாது, எட்டிய தீர்வை நடைமுறைப்படுத்தவும் முடியாது. அதற்கான அரசியல் திராணி அந்தத் தலைமைக்கு இல்லை."

– இவ்வாறு கூறினார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கொழும்பு விஜேராம மாவத்தையில் உள்ள தமது உத்தியோகபூர்வ இல்லத்தில் வைத்து நேற்று முன்தினம் மாலையில் 'காலைக்கதிர்' நாளிதழுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். பக்கம் 03

## கண்ணிவெடியகற்றும் பணியை நேரில் பார்த்தார் ஐ.நா. தூதுவர்!

**முகமாலைக்கு அவர் களப் பயணம்**



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 07

கண்ணிவெடிகளைத் தடை செய்யும் பிரகடனத்தின் ஐ.நா. சிறப்புத் தூதுவர் இளவரசர் மிரெட் ராட் செயிட் அல்ஹூசைன் முகமாலைப் பகுதிக்கு நேற்றுக்காலை நேரடிப் பயண பக்கம் 18

## புலிகளின் மிதிவெடிகளை பார்த்து வியந்த ஹூசைன்!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 07

தமிழீழ விடுதலைப் புலிகளால் தயாரிக்கப்பட்ட உள்ளூர்க் கண்ணி பக்கம் 18

## அமைச்சர்கள் குழு கண்டிக்குப் பயணம்!

கொழும்பு, மார்ச் 07

நாடாளுமன்ற அமர்வுகளைத் தொடர்ந்து, சிரேஷ்ட அமைச்சர்கள் குழுவொன்று நேற்றுக் கண்டி நோக்கிப் புறப்பட்டது.

திகண மற்றும் தெல்தெனிய சம்பவங்கள் தொடர் பக்கம் 18

## சட்டம் தன் கடமையை செய்யத் தவறிவிட்டது!

**கண்டி வன்முறை குறித்து சம்பந்தன் குற்றச்சாட்டு**



கொழும்பு, மார்ச் 07

கண்டி – திகண, தெல்தெனிய மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களின்போது பக்கம் 18

# அவசர காலச் சட்டம் உடன் நடைமுறைக்கு

**திகண சம்பவத்தை அடுத்து மைத்திரி அரசு பிரகடனம்**

கொழும்பு, மார்ச் 07

உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் நாடு முழுவதும் அவசரகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது ஒரு வாரத்துக்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. பக்கம் 18

## இனி அது ரகசியம் அல்ல!

அரசியல் தலைவர்களைச் சந்திப்பது பத்திரிகையாளர்களின் பணியில் ஒன்று. அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை அவரது இல்லத்தில் நேற்று முன் பக்கம் 03

## இன மோதல்களை உடன் நிறுத்துங்கள்

**இலங்கை அரசிடம் பிரிட்டன் வலியுறுத்து**




கொழும்பு, மார்ச் 07

இன மோதல்கள் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் சமய, சமூக மற்றும் அரசியல் தலைவர்கள் செயற்படவேண்டும் என இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டாரீஸ் பக்கம் 18

## ஆயுதங்கள் தாங்கிய படையினர் களத்தில்!



கொழும்பு, மார்ச் 07

இலங்கையில் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர், ஆயுதம் தாங்கிய பாதுகாப் பக்கம் 03

## பௌத்த நாடு என்பதை புரிந்து செயற்படுங்கள்

**சிங்கள மக்களுக்கு மைத்திரி அறிவுரை**



கொழும்பு, மார்ச் 07

பௌத்த நாடு என்ற வகையில் 'குரோதத்தால் குரோதம் தணியாது, 'பழிதீர்ப்பதால் பகைமை தீராது என்ற பௌத்த சிந்தனையை அறிந்தவர்கள் என்ற வகையில், பக்கம் 04

## பிரதமர் ரணிலை வீழ்த்தும் பிரேரணை தள்ளிப்போனது

**மஹிந்த அணி அறிவிப்பு**

கொழும்பு, மார்ச் 07

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சபாநாய பக்கம் 18

## கண்டியில் வன்முறைகளை வழிநடத்தினரா பிக்குகள்?



கொழும்பு, மார்ச் 07

கண்டியில் வன்முறைகள் வெடித்ததன் பின்னணியில் பொதுபல சேனாவின் பொதுச்செய பக்கம் 18

## 2 உடல்கள் மீட்கப்பட்டதால் கண்டியில் மீண்டும் பதற்றம்!

**ஊரடங்கு மீளவும் நடைமுறைக்கு**

கண்டி, மார்ச் 07

கண்டியில் இடம்பெற்ற வன்முறைகளில் உயிரிழந்தனர் எனக் கூறப்படும் இருவரின் சடலங்கள் பக்கம் 18

## திகண விசாரணைக்கு சி.ஐ.டி. சிறப்புக் குழு

கொழும்பு, மார்ச் 07

கண்டி – திகண பகுதிக்குக் குற்றப்புலனாய்வுப் பிரிவின் பக்கம் 18

காலைக்கதிர் Kalaikkathir


# முகமாலையில் மிதிவெடி அகற்றும் செயற்பாடுகளை நேரில் பார்வையிட்டார் ஐ.நா. தூதுவர் அல் ஹுசைன்


















# சிறிதரன் எம்.பியின் உரைக்கு இடையூறு

கொழும்பு, மார்ச் 07

சபையில் ஏற்பட்ட கூச்சல், குழப்பநிலையைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தனது உரையை இடைநடுவே நிறுத்திக்கொண்டார்.

நாடாளுமன்ற நேற்றைய அமர்வின்போது, கண்டியில் ஏற்பட்டிருந்த அசாதாரண நிலை குறித்து விவாதம் நடத்தப்பட்டது.

இதன்போது உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், கண்டியில் ஏற்பட்டிருந்த அசாதாரண நிலை தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை ஞாபகப்படுத்தியிருந்தது. எனவே, யாரோ ஒரு சிலர் ஏற்படுத்தியிருந்த குழப்பத்திற்காக அந்த இனத்தின் மீது வன்முறை கட்டவிழ்த்து விடப்படக்கூடாது.

அத்துடன், இவ்வாறான பிரச்சினைகள் ஏற்படுவதைக் கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.

இதன்போது சபையில் இருந்தவர்கள் கூச்சலிட்டனர். இதனால் சிறிதரன் எம்.பி தொடர்ந்தும் பேசுவதில் இடையூறுகள் ஏற்பட்டிருந்தன.

இதனையடுத்து, சபைக்குத் தலைமை தாங்கிய குழுக்களில் பிரதி தலைவர் செல்வம் அடைக்கலநாதன், அமைதிகாக்கும்படியும், தொடர்ந்து இடையூறு ஏற்படுத்தப்பட்டால் சபை ஒத்திவைக்கப்படும் எனவும் கூறியிருந்தார்.

எனினும், கூச்சலும், இடையூறுகளும் தொடர்ந்த நிலையில், தான் உரையாற்றுவதை நிறுத்திக் கொள்வதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தெரிவித்தார். (ஐ)

# கொழும்பிலும் குழப்பம்

கொழும்பு, மார்ச் 07

கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்திற்கு அருகில் நேற்று மாலை அசாதாரண சூழ்நிலை ஒன்று ஏற்பட்டுள்ளது.

இந்தியா மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையில் சுதந்திரக் கிண்ணக் கிரிக்கெட் போட்டி தற்போது நடைபெற்று வருகிறது.

இந்தப் போட்டி ஆரம்பிப்பதற்கு முன்னர் கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானத்திற்கு அருகில் குழப்பமான நிலைமை ஒன்று ஏற்பட்டுள்ளது. மைதானத்துக்கு அருகில் தவிஹித் ஜமாத் அமைப்பினால் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்ட நிலையில் இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

தெல்தெனிய பிரதேசத்தில் இடம்பெற்ற சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இதனால் மைதானத்துக்கு அருகில் கடுமையான பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

மைதானத்திற்கு உள்ளேயும் வெளியேயும் தீவிர பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

## தீர்வைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தச் செவ்வியின் போது அவர் கூறிய முக்கிய விடயங்கள் வருமாறு:-

இப்போது மைத்திரி – ரணில் – சம்பந்தன் கூட்டு எடுத்திருக்கும் புதிய அரசமைப்பு முயற்சி வெற்றி பெறப்போவதில்லை. இந்த உத்தேச அரசமைப்புக்கு ஆதரவாகக் கையைத் தூக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்னர் தங்கள் தொகுதிப் பக்கம் தலை காட்ட முடியாத நிலைமையே ஏற்படும். அது அவர்களுக்குத் தெரியும்.

எந்தத் தீர்வைக் எட்டினாலும் அதனை வெற்றிகரமாக நாட்டு மக்களிடம் எடுத்துச்சென்று நடைமுறைப்படுத்தவேண்டும். அப்படிச் செய்யகூடிய தலைமைத்துவத்தை அடையாளம் காண்பதில் சம்பந்தன் தவறிழைத்துவிட்டார் என்றே நினைக்கிறேன். யுத்தம் முடிவுற்ற பின்னரும் ஐந்தரை வருடங்கள் நான் ஆட்சியில் இருந்தேன். அச்சமயத்தில் என்னுடன் பேசி ஓர் இணக்க ஏற்பாட்டுக்கு வந்திருந்தால் அதை நான் வெற்றிகர மாக நடைமுறைப்படுத்தியிருக்கலாம்.

யுத்தம் முடிந்ததும், அந்த யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் நான் அரசியல் செய்ய விரும்பவில்லை. குறுகிய அரசியல் லாபம் தேட முனையவில்லை. பாதிக்கப்பட்ட அந்த மக்களை இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பச் செய்வதே எனது முதற்பணி – அவர்கள் மத்தியில் அரசியல் லாபம் தேடுவதை விட என்று எண்ணி நான் செயற்பட்டேன்.

அதனால் அந்த மக்களுக்குரிய கட்டுமாணப் பணியை நான் விரைந்து வழங்கினேன். ரயில் பாதை அமைப்பு, புதிய வீதிகள் செப்பனிடல் என்று அதிலேயே முழு மூச்சாக ஈடுபட்டேன். இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வந்து விட்டு , பிறகு அவர்கள் மத்தியில் அரசியல் செய்யலாம் என்று நினைத்தேன்.

ஆனால் நிலைமை மாறி விட்டது. இப்போது அந்த மக்களுக்கு புதிய அபிவிருத்தித் திட்டங்கள் ஏதும் இல்லை. அரசியல் ரீதியாகவும் அவர்கள் நிலைமை மேம்படவில்லை. – என்றார்.

கேள்வி :- அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் உங்கள் தரப்பில் யாரை நிறுத்தப் போகின்றீர்கள்? முடிவு செய்து விட்டீர்களா? கோட்டாபய ராஜபக்ஷ நிறுத்தப்படுவாரா?

பதில் :- அரசமைப்புச் சட்டப்படி நான் போட்டியிட முடியாது. அதனால் வேறு ஒருவரை யோசிக்கிறோம். கோட்டாபய உட்படப் பலரின் பெயர்களைச் சிந்திக்கின்றோம். நம்பிக்கையானவர் அவசியம். அந்தப் பதவிக்கு யார் வந்தாலும் அந்தப் பதவி ஆளையே மாற்றிவிடக்கூடியது.

நான் முன்னர் சொல்லியபடி எட்டப்பட்ட ஒரு முடிவை நடைமுறைப்படுத்தக்கூடிய திராணி கோட்டாபயவிடம் உண்டு. அவர் நாட்டைக் கூறு போடக்கூடிய எந்தத் தீர்வையும் முன்னெடுக்க மாட்டார் என்று நாட்டு மக்கள் நம்புவதால், எடுக்கப்படும் முடிவை அவரால் வெற்றிகரமாக நடை முறைப்படுத்த முடியும் என நான் நினைக்கிறேன்.

கேள்வி:- தீர்வு தொடர்பில் உங்கள் திட்டம் என்ன?

பதில் :- முதலில் பரஸ்பரம் நம்பிக்கையைக் கட்டி வளர்க்க வேண்டும். அதன் மீது கட்டப்படும் தீர்வு தான் நின்று, நிலைத்து, நீடிக்கும். முதலில் நம்பிக்கையை கட்டி வளர்ப்போம்.

கேள்வி:- 13 ஆவது திருத்த நடைமுறையாக்கம் குறித்து உங்கள் நிலைப்பாடு...?

பதில்:- சட்டத்தில் இருக்கும் விடயங்களை நடைமுறைப்படுத்தலாம். காணி விவகாரம் சற்று உணர்வுபூர்வமானது. அதுகுறித்து பேசி, கலந்துரையாடி முடிவெடுக்க வேண்டும். மாகாணங்களுக்குப் பொலிஸ் அதிகாரம் என்ற பேச்சே இருக்கக்கூடாது. லண்டனில், ஜப்பானில் உள்ளமை போல சிறு சிறு நகரங்களுக்குரிய 'சமூக பொலிஸ்'(Community Police) முறைமையை நடைமுறைப்படுத்தலாம். அந்தந்த நகரத்துக்கு, கிராமத்துக்கு ஒரு பொலிஸ் இருக்கும். 'ஷெரீப்' போன்ற ஒருவர் தலைமை வகிப் பார். இத்தகைய 'சமூக பொலிஸ்' முறைமையை நடைமுறைப்படுத்தும் எண்ணத்தில் தான் கோட்டாபய ராஜபக்ஷ இருந்தார். அது சரிவர முன்னர் அரசியல் நிலைமை மாறிவிட்டது.

முன்னர் – பழைய காலத்தில் –அத்தகைய ஒரு முறைமைதானே நமது நாட்டில் இருந்தது? 'கிராமத் தலைவர் ( Village Headman) இருந்தார். கிராமத்தில் நடக்கும் ஒவ்வொரு அசைவும் அவருக்குத் தெரிந்திருந்தது. அவர் பொலிஸ் சீருடை தரிக்காத பொலிஸ் போன்று இருந்தார். அத்தகைய முறைமையை நாம் நடைமுறைப்படுத்தலாம்.

மாகாண முதலமைச்சர்களுக்கு பொலிஸ் அதிகாரத்தை அளித்தால் நான் கூட எனது சொந்த ஊரான அம்பாந்தோட்டைக்கு போகமுடியாத நெருக்கடி எனக்கே வரலாம்.

ஆகவே, பொலிஸ் அதிகாரம் மாகாணங்களுக்குப் பகிரப்பட முடியாதது. அதுபற்றிய கேள்விக்கே இடமில்லை.

கேள்வி :- பிரதமர் ரணிலுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை குறித்து... ?

பதில் :- அது ஐக்கிய தேசியக் கட்சிக்குள் இருந்து வரவேண்டும். அப்படி வரும் போது நாம் ஆதரிப்பது வேறு. எதிரணியில் இருந்து கொண்டு வரும்போது போதிய ஆதரவைத் திரட்டுவது கஷ்டமாக இருக்கும்.

எங்களில் பலருக்கு அரசியலில் எப்படிக் காய் நகர்த்துவது என்பது புரியவில்லை.

கேள்வி:- நீங்கள் அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தீர்கள் என்று ஒரு செய்தி சிங்களப் பத்திரிகையில் வந்துள்ளதே...?

பதில் :- நான் எப்பவோ ஜனாதிபதி மைத்திரியைச் சந்தித்திருந்தேன். அண்மைக் காலத்தில் நான் அவரைச் சந்திக்கவில்லை. கடைசியாக அவரை எப்போது கண்டேன் என்பதைக் கூட மறந்து விட்டேன். அப்படி நான் அவரைச் சந்தித்தேன் என்ற செய்தி சில தரப்புகளின் அரசியல் ஆதாயத்துக்காக வேண்டுமென்றே விதைக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியை ஒட்டி ஒரு சம்பவத்தை உங்களுக்கு கூற வேண்டும். இந்தச் செய்தியை வாசித்தவுடன் அநுராதபுரம் பக்கத்திலிருந்து ஓர் இளம் பெண் எனக்கு தொலைபேசி எடுத்தார்.

"ஸேர், அப்பம் சாப்பிடவா இந்தச் சந்திப்பு?" – என்று என்னிடம் அவர் கேட்டார்.

(இதைக் கூறியதும் மஹிந்த ராஜபக்ஷ பெரிதாகச் சிரித்தார். முதல்நாள் இரவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன், அவரது அமைச்சராக அமர்ந்திருந்து அவரது அலரி மாளிகை இல்லத்தில் சேர்ந்து அப்பம் சாப்பிட்டு விட்டு, அடுத்த நாள் காலையிலேயே மஹிந்த ராஜபக்ஷ வுக்கு எதிராக ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராகத் தான் களமிறங்கப்போகும் அறிவிப்பை மைத்திரிபால சிறிசேன விடுத்தார். இதனை *'அப்பம் சாப்பிடும் இராஜ தந்திரம்'* என்று விமர்சிக்கும் நிலையிலேயே மீண்டும், மஹிந்த – மைத்திரி சந்திப்பு அப்பம் சாப்பிடுவதற்கா என மேற்படி இளம் பெண் கேள்வி எழுப்பியிருக்கின்றார்.)

## ஆயுதங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புப் படையினரும் பொலிஸாரும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வன்முறையைத் தூண்டும் வகையில் செயற்படுபவர்களை உடன் கைதுசெய்யும் உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் கடந்த 7 வருடங்களின் பின்னர் முதற் தடவையாக நேற்று அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்பட்டது.

கண்டியில் ஏற்பட்ட வன்முறைச் சம்பவங்களைத் தொடர்ந்தே அவசரகால நிலை பிரகடனப் படுத்தப்பட்டது.

வன்முறைகள் இடம்பெற்ற பகுதிகளில் விசேட அதிரடிப்படையினர், ராணுவத்தினர் மற்றும் பெருமளவான பொலிஸார் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை, இதுவரை வெளியான தகவல்களின் பிரகாரம், 37 வீடுகள், 46 கடைகள் மற்றும் 35 வாகனங்கள் வன்முறையின்போது சேதமாக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினமும் மாலை சந்தித்து நீண்ட நேரம் அரசியல் பேசிக் கொண்டிருந்தேன். அவரது இல்லத்தின் ஒரு பக்க வரவேற்பு அறையில் சாகவசமாக இந்தச் சந்திப்பு இடம் பெற்றது.

அவரது வீட்டுக்குள் நுழைந்த சமயம், சிவில் அதிகாரிகள் போல் தோற்றமளித்த ஒரு குழுவினர் வீட்டின் வெளிப்புறத்தில் அளவீடுகளை மேற்கொண்டபடி இருந்தமையைக் கண்டேன். அந்த இரட்டை மாடி வீட்டுக்கு 'லிப்ட்' ஒன்று பூட்ட ஆயத்தங்கள் நடக்கின்றன என்று அங்குள்ள உதவியாளர் மூலம் அறிந்து கொண்டேன்.

நான் முன்னாள் ஜனாதிபதியுடன் பேசிக் கொண்டிருந்த போது, அந்த அதிகாரிகளில் இரண்டு, மூன்று பேர் வெளி வராந்தாவில் வந்து நின்றமையை அவதானித்த மஹிந்த ராஜபக்ஷ, அவர்களை உள்ளே வரவேற்பு அறைக்குள் வருமாறு அழைத்தார்.

"எல்லாம் பார்த்தீர்களா? பொருத்தலாமா?" – என்று கேட்டார் மஹிந்தர்.

"ஆம். ஸேர்" – என்று ஆங்கிலத்தில் பதிலளித்த அந்தக் குழுவின் தலைவர் தாங்கள் பூட்டவிருக்கும் 'லிப்ட்' பற்றிய விவரணத்தைக் கூறத்தொடங்கினார். ஒருகட்டத்தில் அது ஜேர்மன் தயாரிப்பு லிப்ட் என்றதும், 'அப்போ... ஓவ்...!' எனத் துள்ளிக் குதித்தார் மஹிந்த ராஜபக்ஷ.

"ஜேர்மன் லிப்டில் எனக்கு மிக மோசமான அனுபவம் உண்டு" – என்று கூறியபடி, என் பக்கம் திரும்பி அந்தச் சம்பவத்தை விபரித்தார்.

*"ஜேர்மனியில் உயர்ந்த ஆஸ்பத்திரிக் கட்டடம் ஒன்றில் லிப்டில் செல்ல வேண்டியிருந்தது. என்னுடன் பேராசிரியர் ஜி.எல். பீரிஸும் இன்னும் ஓரிருவரும், ஜேர்மன் பாதுகாப்பு அதிகாரியும் இருந்தனர். எதிர்பாராத விதமாக 'லிப்ட்' இடைநடுவில் செயலிழந்து தொங்கி விட்டது. சுவாசிக்க முடியாத அளவுக்கு காற்றோட்டம் இல்லாமல் நெருக்கடி. காற்று வரக்கூடிய ஒரு சிறு இடைவெளிக்குள் நான் சுவாசிக்கக் கூடியதாக என்னை நிலைப்படுத்தித் தான் திணறிக் கொண்டிருந்தார் அந்த ஜேர்மன் பாதுகாப்பு அதிகாரி. ஏதோ ஒரு வகையில் இடித்துத்தள்ளி உள்ளே ஒட்சிசன் குழாயைச் செலுத்தினார். நாங்கள் திணறிப் போனோம்."* – என்றார் முன்னாள் ஜனாதிபதி.

*"ஒரு பத்து நிமிடத்துக்குள் விரைந்து வந்து உங்களை மீட்டிருப்பார்களா?"* – என்று கேட்டேன்.

*"பத்து நிமிடமா? அரை மணி நேரத்துக்கு மேல், சுமார் நாற்பத்தியைந்து நிமிட நேரம் இருந்திருப்போம். 'லிப்ட்' செயலிழந்த உடனேயே பாதுகாப்பு அதிகாரி உஷார்ப்படுத்த, வெளியில் இருந்த எல்லோரும் 'அலேர்ட்' ஆகிவிட்டார்கள். ஆனால் இடைநடுவில் சிக்கிய லிப்டில் இருந்து ஆள்களை மீட்பது சுலப மான காரியமா? பெரிய கஷ்டப்பட்டுத்தான் வெளியே வந்தோம். மிக மோசமான அனுபவம் அது."* – என்றார் அவர்.

"இந்தச் செய்தி வெளியில் வரவில்லையே...?" – என்றேன் நான்.

என்னை ஏளனமாகப் பார்த்தார் மஹிந்தர்.

*"இவ்வளவும் நான் ஜனாதிபதியாக இருக்கும் போது நடந்தவை. நாட்டின் ஜனாதிபதி, ஜேர்மனியில் 'லிப்ட்'டுக்குள் மாட்டிக் கொண்டு அந்தரப்பட்டார் என்று செய்தி வெளியிடுவதா? எனது ஆட்சிக் காலத்தில் மறைக்கப்பட்ட தகவல்களில் இதுவும் ஒன்று"* – என்றார் அவர்.

*"இப்படி உங்களின் ஆட்சிக் காலத்தில் மறைக்கப்பட்ட விடயங்கள் குறித்து ஊடகவியலாளர் என்ற முறையில் எங்களுக்குப் பலதும் தெரியும்."* – என்ற கூற்று எனது வாய் வரை வந்தது. ஆனாலும் அதிகப்பிரசங்கித்தனமாக நடந்து கொள்ளாமல் என்னை நானே அடக்கிக் கொண்டேன்.

அரசியல் விடயங்கள் குறித்து, ஒரு மூத்த தமிழ் ஊடகவியலாளர் என்று மதிப்புக் கொடுத்து என்னோடு அவ்வப்போது கருத்துப் பரிமாறிக் கொள்ளும் அந்த உறவு நிலையைக் கெடுத்துக் கொள்ள நான் விரும்பவில்லை.

இந்தச் சந்திப்புத் தொடர்பில் கொசுறுத் தகவல் ஒன்று. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தரப்புடன் இயைந்து, நெருங்கிச் செயற்படுபவர் போல் அண்மைக் காலத்தில் காட்டி வரும் – கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த – முன்னாள் அமைச்சரான – முஸ்லிம் அரசியல்வாதி ஒருவரும் சத்தம் சந்தடியின்றித் தனியாக வந்து, எனக்கு ஒதுக்கப்பட்ட நேரத்துக்குப் பின்னர் மஹிந்த ராஜபக்ஷவைச் சந்திக்க காத்திருந்தார். அவர்களுக்கு என்ன? இந்தப் பக்கம் ஒரு கால்; அந்தப் பக்கம் ஒருகால்! அரசியல் பிழைப்பு அமோகமாக நடக்கும். எங்கள் தரப்பு அரசியல்வாதிகள் பலருக்கும் இந்தத் தந்திரம் விளங்குவதில்லை.

- மின்னல் -

டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி
பிளாஸ்ரிக் உற்பத்தி, பிளாஸ்ரிக் திருத்த வேலை, பிளாஸ்ரிக் மீள் சுழற்சி என்பன சிறந்த முறையில் செய்து தரப்படும்.
108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 8680
077 592 5088

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இனியும் பொறுத்துப் போவதா?

இன்று தமிழர்கள் தங்களுக்குள் எழுப்பும் கேள்வி ஒன்றுதான். அது , இனி என்ன?

இனப் பிரச்சினைக்கான நியாயத் தீர்வையும் உள்ளடக்கியதாக புதிய அரசமைப்பு ஒன்றை உருவாக்குதல் எனும் அரசியல் செயற்றிட்டத்துடன், தமிழர்களும் சேர்ந்து ஆட்சிக் கட்டுக்குக் கொண்டு வந்த நல்லாட்சி அரசு, தடுமாறத் தொடங்கி விட்டது. நல்லாட்சி அரசுக்காக தென்னலங்கைத் தரப்பில் ஒன்றிணைந்த அரசியல் சக்திகள் இப்போது ஒன்றை ஒன்று கால்வாரும் அரசியல் சர்ச்சைக்குள் இறங்கி விட்டமையால், அரசியல் தீர்வு முயற்சி இத்தோடு காலாவதியாகி விட்டது என்பது வெளிப்படை.

'2016 இல் தீர்வு', '2017 இல் தீர்வு' - என்றெல்லாம் நம்பிக்கையுடன் எதிர்வு கூறி வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன் இனிமேல் எதிர்வு கூறமுடியாத நிலைக்குச் சென்று விட்டார். இந்த ஜனாதிபதியையும், இந்த நல்லாட்சி அரசையும் தமிழர்களும் சேர்ந்து ஆட்சிக் கட்டுக்கு ஏன் கொண்டு வந்தார்கள் என்ற காரணத்தை அவ்வப்போது - அல்லது அடிக்கடி - எடுத்துக் கூறி ஆட்சியாளர்களுக்கு அதை நினைவூட்டுகின்றமையைத் தவிர சம்பந்தனினால் இப்போது இதற்கு மேல் செய்யக்கூடியவை ஏதும் இருப்பதாக எமக்குத் தெரியவில்லை.

ஏற்பட்டுள்ள இந்த நிலைமைக்காக சம்பந்தனிலும் அதிகம் குறை கூறுவதிலும் அர்த்தம் இல்லை என்றே தோன்றுகின்றது.

இந்த வரலாற்றுக் கட்டத்தில் தம் மீது சுமத்தப்பட்ட பொறுப்பை உரிய முறையில் நிறைவு செய்வதற்காக அவர் அப்படி நடக்க வேண்டியவரானார். இந்த முயற்சி மூலமாவது தமிழர்களுக்கு நியாயமான ஒரு தீர்வு கிட்டாதா என்ற சிறு ஒளிக்கீற்றுப் போல நம்பிக்கை தென்பட்டதால் இந்த முயற்சியில் அவர் இறங்கினார்.

"நாம் நம்பி நடக்கவில்லை. நம்ப நடக்கின்றோம்."- என்று ஆரம்பத்திலேயே அவர் தெளிவு படுத்தியிருந்தார்.

"அமைதி வழியில்- பேச்சு மூலம் - நல்லிணக்கத்துடன் - சமாதானத் தீர்வை எட்டுவதற்கு தமிழர் தரப்பு ஒத்துழைக்கும். அதற்கு அவர்கள் குந்தகமாக இருக்க மாட்டார்கள். நல்லிணக்கத் தீர்வுக்கு தமிழர்கள் எதிரானவர்கள் அல்லர் என்பது சர்வதேச சமூகத்துக்குக் காட்டப்பட வேண்டியிருந்தது. அதனால் அந்த வழியில் பயணித்தோம்" - என்று சம்பந்தன் கூறுகின்றமையைக் கூட படித்த அரசியல் தலைவர் ஒருவரின் பொறுப்பான பேச்சாகவே - கருத்தாகவே- தமிழர் சமூகம் கருதுகின்றது.

ஆகவே, இன்றைய இக்கட்டு நிலைக்காக சம்பந்தனை மட்டும் குறைகூறி - அவர் மீதும் அவர் தளபதியான சுமந்திரன் மீதும் மட்டும் குற்றத்தைச் சுமத்தி தென்னிலங்கையிடம் ஏமாந்து விட்டார்கள் என்று குற்றப்பத்திரம் வாசிப்பதற்கு நாமும் தயாரில்லை; தமிழ் மக்களும் விரும்பவில்லை.

ஆனால், தென்னிலங்கையின் காலாதி காலப் போக்கை - பரவணிப் பண்பியல்பை - நன்கு புரிந்து அறிந்து வைத்துள்ள சம்பந்தன், இது போன்ற இக்கட்டு - ஏமாற்று- நிலையில்தான் விவகாரம் போய் முடியும் என்று எதிர்பார்த்து, அதற்கேற்ப ஆரம்பத்திலேயே சில காய் நகர்த்தல்களை முன்னெச்சரிக்கையாகச் செய்திருக்கலாம், செய்திருக்க வேண்டும் என்பதுதான் பலரின் ஆதங்கம்.

ஆரம்பம் தொட்டே ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிறேமச்சந்திரன், படித்துப் படித்து இந்த விடயத்தில் முன்னெச்சரிக்கை வெளியிட்டு வந்தார் என்பதும் மறக்கற்பாலதல்ல.

எத்தகைய தீர்வு என்பது குறித்து தென்னிலங்கையின் மூத்த அரசியல் தலைமைகளுடன் பேசி, ஒரு தீர்க்கமான முடிவுக்கு வந்து, அதனை எழுத்தில் ஓர் உடன்பாட்டு ஆவணமாக்கி விட்டு, அதனடிப்படையில் சமரச முயற்சிகளை முன்கொண்டு செல்லுங்கள் என்று திரும்பத் திரும்ப சுரேஷ் பிறேமச்சந்திரன் கூறி வந்தமை, இன்றைய நிலையில் பார்க்கும்போது கட்டாயம் பின்பற்றியிருக்க வேண்டிய ஒன்றாகவேதோன்றுகின்றது.

சரி, நடந்தவை நடந்து விட்டன. இனி என்ன என்பதுதான் கேள்வி.

தமிழர் தரப்பு நம்பி நடக்காவிட்டாலும் நம்ப நடந்தமை ஏன்? இவ்விவகாரத்தில் பார்வையாளராகவும் பங்காளரகாவும் இருக்கும் சர்வதேச சமூகத்தின் முன் நாங்கள் நீதியானவர்கள் என்பதைக் காட்ட வேண்டிய அவசியம் கருதித்தானே அப்படி நடந்தோம்.

நாங்கள் நீதியாக – நேர்மையாக – இதய சுத்தியுடன் நடந்தோம். தென்னிலங்கை அரசுத் தரப்புத்தான் எதுவும் செய்யாமல் எங்களை ஏமாற்றிவிட்டது என்பதை சர்வதேச சமூகத்துக்கு - உலக நாடுகளுக்கு - காட்ட வேண்டிய வேளை வந்துவிட்டது.

நம்பி ஏமாந்து விட்டோம் என்பதை வெளிப்படுத்துவதில் கூட நாம் மெத்தனம் காட்டத் தேவையில்லை.

இணக்கத் தீர்வுக்கான விடயங்களை உள்ளடக்கிய புதிய அரசமைப்பு முயற்சிகள் இனி முன்நகரப் போவதில்லை என்பது அரசியலில் அரிச்சுவடிப் பாடத்தைக் கற்றவருக்குக் கூட விளங்கக்கூடிய நிலைமைதான் இன்றுள்ளது.

அதனைப் புரிந்துகொண்டு அடுத்த கட்ட அரசியல் காய் நகர்த்தலுக்கு செல்ல வேண்டிய முக்கிய படி நிலையில் இன்று தமிழினம் உள்ளது.

அழுத்தமாகவும், ஆக்ரோஷமாகவும், ஒன்றுபட்டும் காலதாமதமின்றியும் இந்தப் பணியில் தமிழினம் இறங்க வேண்டும்.

கடந்த எழுபது ஆண்டு காலத்தில் தென்னிலங்கையுடன் இணங்கிப் போய் ஒரு சமரசத் தீர்வை எட்டுவதற்குத் தமிழர் தரப்பில் ஆகக் கீழ் மட்டம் வரை இறங்கிப் போய் - விட்டுக் கொடுத்து - வளைந்து கொடுத்து - முயன்ற தலைமை எதுவென்றால், அது இப்போது இருக்கும் சம்பந்தனின் தலைமைதான். இதற்கு மேலும் பொறுத்திருப்பதும், பொருந்திப் போகப் பார்த்திருப்பதும். தமிழ்த் தலைமைக்கு பொருத்தமான ஒன்றாக இருக்காது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

# ஒன்பது மாதக் குழந்தை சாவு

வவுனியா, மார்ச் 07

வவுனியா காமினி மகாவித்தியாலயத்துக்கு அண்மையில் வசிக்கும் இளம் குடும்பம் ஒன்றின் ஒன்பது மாத ஆண் குழந்தை சுகவீனம் காரணமாக நேற்று உயிரிழந்தது.

குழந்தைக்குச் சுகவீனம் காரணமாக நேற்றுக் காலை வவுனியா ஹொரவப்பொத்தானை வீதியில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனையில் மருந்து எடுக்கப்பட்டது. அங்கு வழங்கப்பட்ட பாணி மருந்தை நேற்று இரண்டு தடவை குழந்தைக்குப் பெற்றோர் வழங்கியுள்ளனர்.

இதனை தொடர்ந்து குழந்தைக்கு அதிக வயிற்றோட்டம் ஏற்பட்டது. மீண்டும் அதே தனியார் மருத்துவமனைக்கு குழந்தையைப் பெற்றோர் கொண்டு சென்றனர். அங்கிருந்த வைத்தியர் தனது கடிதம் ஒன்றுடன் வவுனியா பொதுவைத்திய சாலைக்குக் கொண்டு செல்லுமாறு கூறியுள்ளார்.

பொது வைத்தியசாலைக்குக் குழந்தையைக் கொண்டு சென்றதும் வைத்தியர்கள் இரத்தப் பரிசோதனை செய்து சிகிச்சை வழங்கினர். ஆயினும் சிகிச்சை பலனின்றி குழந்தை பரிதாபகரமாக உயிரிழந்தது. (ஐ–100)

## பௌத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவிதமான துன்புறுத்தல்களிலோ வன்முறைகளிலோ ஈடுபடுவதன் மூலம் எமது நாட்டுக்கே அவப்பெயரும் களங்கமும் ஏற்படும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். அதேபோன்று இந்து, இஸ்லாம் மதத்தவர்களும் தத்தமது மத போதனைகளை மதித்துச் செயற்படவேண்டும்

இவ்வாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தியுள்ளார்.

கண்டி வன்முறை குறித்து நேற்றுமுன்தினம்திங்கட்கிழமை மாலை ஊடகங்களுக்கு விடுத்துள்ளசிறப்புஅறிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:

கடந்த சில தினங்களாக நாட்டின் சில பிரதேசங்களில் இடம்பெற்ற இனங்களுக்கிடையில் வேற்றுமையையும் மோதல்களையும் ஏற்படுத்தும், ஒற்றுமையைச் சீர்குலைக்கும் மிகவும்கவலைக்குரிய சம்பவங்கள் காரணமாக நாட்டில் ஏற்பட்டிருக்கும் பதற்ற நிலையைக் கவனத்தில் கொண்டே நான் இந்தச் சிறப்பு அறிக்கையை வெளியிடுகிறேன்.

வரலாற்றுக் காலம்தொட்டே நாம் நமது நாட்டின் உள்நாட்டு மோதல்கள் பற்றியும் பிற ஆக்கிரமிப்புக்கள் பற்றியும் நீண்ட அனுபவத்தைக் கொண்டிருக்கும் ஓர் இனமாவோம்.

குறிப்பாகக் கடந்த பல தசாப்தங்களாக நமது நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம், மலே, பேகர் ஆகிய அனைத்து இனங்களும்அமைதியுடனும்ஒற்றுமையுடனும் வாழ்ந்து வந்தார்கள்.

1940களை நோக்கிச் செல்வோமாயின் பிரிட்டன் ஆட்சியிலிருந்த நமது நாட்டுக்கு விடுதலையைப் பெற்றுக்கொள்வதற்காக சிங்கள, தமிழ், முஸ்லிம் ஆகிய அனைத்து இனத்தவர்களும் சகோதரத்துவத்துடன் ஒன்றுபட்டுப் போராடித் தேசிய சுதந்திரத்தைப் பெற்றுக் கொண்டோம்.

இருப்பினும், பிற்காலத்தில் ஏற்பட்ட இனங்களுக்கிடையிலான மோதல் நிலை எம்மை நீண்டகாலப் போரை நோக்கி இட்டுச் சென்றது மட்டுமல்லாது, அதன் விளைவாகப் பெரும் அவலங்களுக்கு முகங்கொடுக்க நேர்ந்ததுடன், நாம் மனம் வருந்தத்தக்க நிலைக்கும் தள்ளப்பட்டோம்.

இருப்பினும் கடந்த மூன்று ஆண்டுகளாக நாம் இந்த நாட்டின் தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் ஆகியவற்றை ஏற்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் அரசு என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

இந்தப் பின்னணியில் கடந்த சில தினங்களாக அம்பாறை, கண்டி ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் உயிர்ச் சேதங்களையும் பொருள் சேதங்களையும் ஏற்படுத்தியிருப்பதுடன் அந்தப் பிரதேசங்களில் ஏற்பட்ட பதற்ற நிலை காரணமாக, நாட்டில், குறிப்பாக மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்படுகின்ற ஒரு சூழல் உருவாகியிருக்கின்றது.

இந்தச் சம்பவங்கள் காரணமாக உயிரிழப்புக்களுக்கும் பொருள் இழப்புக்களுக்கும் முகம்கொடுத்த அனைத்துக் குடும்பங்களுக்கும் அவர்களது உறவுகளுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதுடன், மேற்கொள்ளப்பட்ட அனைத்து வன்முறைச் சம்பவங்களையும் இந்தச் சந்தர்ப்பத்தில் நான் மிக வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அந்த அசம்பாவிதங்களைக் கண்டிக்கின்ற அதேவேளை அந்தச் செயல்களில் ஈடுபட்ட தனிமனிதர்கள், அமைப்புக்கள், குழுக்கள் ஆகிய அனைத்து தரப்புக்களுக்கும் எதிராகச் சட்டத்தை மிக நேர்த்தியாகச் செயற்படுத்தவேண்டுமென நான் பொலிஸ்துறைக்கு ஆலோசனை வழங்கியிருக்கிறேன்.

அதேபோல் ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமையைச் சாந்தப்படுத்துவதற்கும், இந்தப் பதற்றத்தைப் போக்குவதற்கும், அந்தப் பிரதேசங்களின் அமைதியை ஏற்படுத்தி நாட்டின் அனைவருக்கும் சுதந்திரமாகவும், அமைதியாகவும் மகிழ்ச்சியாகவும் வாழக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவதற்கு பொலிஸ், சிறப்பு அதிரடிப்படை, இராணுவம் மற்றும் அரச அதிகாரிகள், பிரதேச அரசியல்வாதிகள் ஆகியோரை ஒன்றிணைந்து அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு ஆலோசனை வழங்கியிருக்கிறேன்.

அதேபோன்று ஏற்பட்டிருக்கும் இந்த நிலைமையைக் கருத்தில் கொண்டு நாம் நமது நாட்டினுள் மிகத் தெளிவாக ஏற்படுத்த வேண்டிய தேசிய ஒற்றுமை, நல்லிணக்கம் மற்றும் அந்நியோன்னிய புரிந்துணர்வு, இனங்களுக்கிடையிலான நட்பு ஆகியவற்றை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு ஓர் அரசு என்ற வகையில் எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை நான் இங்கே கூறவிரும்புகிறேன்.

வணக்கத்துக்குரிய மகாநாயக்கர்கள் உள்ளிட்ட மகா சங்கத்தினரதும், இந்து, இஸ்லாம் கிறிஸ்தவ மதத் தலைவர்களினதும் வழிகாட்டலும் பங்களிப்பும் இந்தச் சமயத்தில் மிக முக்கியமாகத் தேவைப்படுகின்றது என்பதை மிகுந்த கௌரவத்துடன் வலியுறுத்துகின்ற அதே வேளை, பிரதேச அரசியல்தலைமைகளுக்கு இந்த மோதல்களைத் தடுப்பதற்கும், பதற்றத்தைத் தணிப்பதற்கும் தேவையான வழிகாட்டல்களையும் ஆலோசனைகளையும் பெற்றுக் கொடுக்குமாறு நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் பொலிஸ், இராணுவம் மற்றும் சிறப்பு அதிரடிப் படை, 24 மணித்தியாலங்களும் தொடர்ச்சியாகச் செயற்படுவதன் மூலம் இந்தப் பிரதேசங்களில் அமைதியை ஏற்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டுமெனநான்ஆலோசனைகளை வழங்கியிருக்கிறேன்.

ஏற்பட்டுள்ள இந்த நிலைமையைப்பற்றி கலந்தாலோசிப்பதற்காக சிறப்பு தேசிய பாதுகாப்பு சபை கூட்டமொன்றை நடத்தி தேவையான தீர்மானங்களை எடுத்திருப்பதுடன், பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவையுடன் கலந்தாலோசித்து எதிர்காலத்துக்குத் தேவையான முறையான திட்டத்தையும் வகுத்திருக்கின்றோம்.

அதனால் அனைவரும் அமைதியாக வாழ முயற்சிக்கும் அதேவேளை, குறிப்பாக, பௌத்த நாடு என்ற வகையில் 'குரோதத்தால் குரோதம் தணியாது, 'பழிதீர்ப்பதால் பகைமை தீராது' என்ற பௌத்த சிந்தனையை அறிந்தவர்கள் என்ற வகையில், எந்தவிதமான துன்புறுத்தல்களிலோ வன்முறைகளிலோ ஈடுபடுவதன் மூலம் எமது நாட்டுக்கே அவப்பெயரும் களங்கமும் ஏற்படும் என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

அதேபோன்று இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைச் சேர்ந்த நம்நாட்டவர்கள் தத்தமது மதங்களின் வழிகாட்டல்களுக்கமைய அமைதியுடனும் சகவாழ்வுடனும் வாழ்வதன் மூலம் உருவாக்கப்பட்டிருக்கின்ற இந்தச் சுதந்திரமான சூழலை மென்மேலும் பலப்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை மேலோங்கச் செய்து, நம் நாட்டின் எதிர்கால நடவடிக்கைகளை ஐக்கியத்துடன் ஒன்றுபட்டு அமைதியான முறையில் முன்னெடுப்போம் என்ற வேண்டுகோளை விடுக்கின்றேன்.

நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்துவதற்கும் ஒற்றுமையைப் பலப்படுத்தவும், இனங்களுக்கிடையில் ஐக்கியம், அமைதி, நல்லிணக்கம் ஆகிய–வற்றை ஏற்படுத்தவும் ஓர் அரசு என்றவகையில் எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் முன்னெடுத்து, வன்முறையில் ஈடுபடும் தரப்பினருக்கு எதிராக எடுக்கப்படக்கூடிய அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என்பதை இங்கு நான் கூறி வைக்க விரும்புகிறேன்.

அத்தோடு பல்வேறு வதந்திகளையும் கட்டுக்கதைகளையும் சமூக ஊடகங்கள், இணையத்தளங்கள், தொலைபேசி ஆகியவற்றின் ஊடாகப் பரப்பி, மிக மோசமாக மக்கள் மத்தியிலும் நாட்டினுள்ளும் அமைதியைச் சீர்குலைக்க முயலும் சில தரப்பினர் இருப்பது என்பது தெரிய வந்திருக்கின்றது.

அவ்வாறானவர்களுக்கு எதிராக மிக உறுதியான முறையில் சட்டத்தை நடைமுறைப் படுத்தி, அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்தக் கொள்கிறேன்.

சுதந்திரமான சுமுகமான சூழலில் மகிழ்ச்சியுடன் வாழக்கூடிய எமது தாய்நாட்டைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் அரசு என்ற வகையிலும் அரச தலைவர் என்றவகையில் அனைத்து நடவடிக்கைகளும் எடுப்பேன் என்பதை உங்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காக இதனை நான் வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்கிறேன் – என்றுள்ளது. (ஐ)

### நாளை

08.03.2018
வியாழக்கிழமை
நட்சத்திரம் : அனுசம் பி.இ 3.26 வரை
திதி: ஸப்தமி முழுவதும்
சுபநேரம் : 7.54 – 9.24 வரை
இராகுகாலம் : 1.54 – 3.24 வரை

# அமைதியை சீர்குலைத்து குழப்பத்தை ஏற்படுத்திய சம்பவங்களை இலங்கை அரசு கடுமையாகவும் முற்றாகவும் கண்டிக்கிறது

## அரச தகவல் திணைக்களம் அறிக்கை

கொழும்பு, மார்ச் 07

மதவழிபாட்டு தலங்கள் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்களுக்கு சேத மேற்படுத்தப்பட்ட அம்பாறை மற்றும் திகன பிரதேசத்தில் சமீபத்தில் இடம்பெற்ற அமைதியை சீர்குலைத்து குழப்பத்தை ஏற்படுத்திய சம்பவங்களை இலங்கை அரசு கடுமையாகவும் முற்றா கவும் கண்டித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பில் அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

சமூக ஐக்கியத்திற்கு தடையேற்படுத்தும் மற்றும் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு தெளிவான நிலைப்பாடு முஸ்லிம் மற்றும் ஏனைய சமூகங்களுக்கு இடையில் விசேடமாக ஊடக வலைப்பின்னல் மற்றும் இணையத்தளங்கள் மூலம் சிலரினால் மேற்கொள்ளப் படும் தவறாக வழிநடத்தும் சிறிய தகவல்கள் மற்றும் குரோதத்தன்மையுடனான வேறுபாடுகளை முன்னெடுப்பதற்கான முயற்சிகளை அரசு கடுமையாக கண்டித்துள்ளது.

இவ்வாறான வெறுக்கத்தக்க மற்றும் உண்மைக்கு புறம்பான தகவல்களை முன்னெடுக்க வேண்டாம் என்று இலங்கையிலுள்ள அனைத்து பிரஜைகளிடமும் அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

மூன்று தசாப்தகாலங்களில் குழப்பத்தினால் பாதிக்கப்பட்ட நாடு மற்றும் நாட்டவர் என்ற ரீதியில் நாம் இவ்வாறானவற்றிற்கு இடமளிக்கக் கூடாது.

இவ்வாறான வெறுக்கத்தக்க மற்றும் உண்மைக்கு புறம்பான தகவல்களினால் ஏமாந்துவிடக்கூடாதென்று இலங்கையிலுள்ள அனைத்து பிரஜைகளிடமும் அரசு கேட்டுக் கொண்டுள்ளது.

மூன்றுதசாப்தகாலத்திற்குள் குழப்பநிலையின் காரணமாக பாதிக்கப்பட்ட நாடு , இனத்தவர் என்ற ரீதியில் நாம் மீண்டும் மீண்டும் இவ்வாறானவற்றிற்கு இடமளிக்காது ஒதுங்கியிருக்கவேண்டும். குற்றங்களை புரிவோர் சட்டம் மற்றும் சமாதானத்தை சீர்குலைப்போருக்கு எதிராக நிலையான மற்றும் கடுமையான சட்டத்தை முன்னெடுப்பதற்கு அரசு பின்வாங்காது.

அனைத்து பிரஜைகளுக்குமான உரிமையை பாதுகாத்து அனைத்து சுதந்திரத்திற்கான சந்தர்ப்பத்தையும் அனைவரும் அனுபவிக்கக் கூடிய மற்றும் ஒழுக்கங்களை மதிக்கும் நிலையான சமாதான மற்றும் முற்போக்கு சமூகத்தை கட்டியெழுப்புதவற்கு அனைத்து பிரஜைகளினதும் ஒத்துழைப்பையும் புரிந்துணர்வையும் இனமத பேதங்களுக்கு அப்பால் அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

சமூக கட்சிகள், அரசியல் வாதிகள், சமூகத்தலைவர்கள், சிவில் சமூகம் மற்றும் ஊடகத்தை கொண்ட இலங்கையில் உள்ள அனைத்து பிரஜைகளும் எத்தகைய குழப்ப நிலையையும் நிராகரித்து சமாதானம் மற்றும் ஐக்கியத்தின் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

*அம்பாறை மற்றும் தெல்தெனிய மோதல்கள்:*

# உடனடித் தீர்வு காணப்படாமையே நிலைமை மோசமாவதற்கு காரணம்

## அமைச்ச சம்பிக்க கூறுகின்றார்



அம்பாறை மற்றும் தெல்தெனிய மோதல் நிலைமைகளுக்கு முக்கிய காரணம் அவை ஏற்பட்டவுடனேயே அவற்றுக்கு தீர்வு காணப்படாமை ஆகும்.

கடந்த வாரம் அம்பாறையிலும், நேற்று முன்தினம் தெல்தெனியவிலும் இடம்பெற்ற சம்பவங்களில் வெளிப்படும் தெளிவான உண்மை ஒன்று உள்ளது.

அதுதான் நாட்டில் இனவாத, மதவாத மோதல் நிலை யொன்று உருவாகி வருகின்றது என்பதாகும். இதற்குப் பிரதான காரணம் பிரச்சினையின் ஆரம்பத்திலேயே சட்டம் ஒழுங்கு மற்றும் பொலிஸ் பிரிவு என்பன தலையீடு செய்து தீர்க்க முன் வராமையே ஆகும் என்று நகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சரும் ஜாதிக ஹெல உறுமய கட்சியின் பொதுச் செயலாளருமான பாட்டளி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

கண்டி தெல்தெனிய திகன பிரதேசத்தில் தற்பொழுதுவரை ஏற்பட்டுள்ள வன்முறைச் சம்பவம் தொடர்பில் பாட்டளி சம்பிக்க ரணவக்க தனது முகநூல் பக்கத்தில் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

அம்பாறையில் உணவகத்தில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பொலிஸார் உடனடியாக தலையிட்டு விசாரணை செய்து சம்பவத்துடன் தொடர்புபட்ட இரு தரப்பின ரையும் கைது செய்திருந்தால், அந்தப் பிரச்சினை வெகு தூரம் சென்றிருக்காது.

அதேபோன்று, தெல்தெனியவில் இடம்பெற்ற மரணம் தொடர்பிலும் 3 தினங்களாக ஊடகங்களில் புகைந்து புகைந்து, வன்முறையான ஒரு சூழல் உருவானது. இந்த வேளையிலும், சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து, குறித்த மரணச் சடங்கை அமைதியான முறையில் நிறைவேற்ற சட்டம் ஒழுங்கு மற்றும் பொலிஸ் துறை செயற்பட்டிருந்தால், இந்த நிலைமை அங்கு ஏற்பட்டிருக்காது.

இந்தச் சம்பவங்களின் ஊடாக சிங்கள சமூகம் பாதுகாப்பாக இருப்பதாக யாராவது கூறுவார்களாயின் அது போலியானது. விசேடமாக தற்பொழுது எமது இராணுவம் மற்றும் சிங்கள சமூகம் என்பவற்றுக்கு எதிராக ஜெனீவாவில் மனித உரிமைகள் ஆணைக் குழுவில் தவறான கருத்தை உறுதி செய்ய முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நாம் இன அழிப்பை மேற்கொள்பவர்கள் என தெரிவித்து எமது நாட்டை நெருக்கடிக்குள் தள்ள சர்வதேச ரீதியில் சில அமைப்புக்களினால் சதிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நாட்டில் நடந்து வரும் இந்த சம்பவங்கள் கூட அவர்களின் அம்முயற்சிகளைப் பலப்படுத்தும் வகையிலேயே அமைந் துள்ளன. சிங்கள சமூகத்தைப் பாதுகாப்பதற்கு சிங்களவராக இருந்து நல்ல பெறுமானமுள்ள நடவடிக்கைகளைக் காட்டு வதும், சகவாழ்வுடன் நடந்து கொள்வதுமே வழியாகும். மாறாக, ஆவேசமான, பண்பாடற்ற செயற்பாடுகளினால் அல்ல.

மறுபுறத்தில் முஸ்லிம் எதிர்ப்புணர்வு உலகம் முழுவதும் பரவி வருகின்றது. இந்தியாவிலும், ஆப்கானிஸ் தானிலும், சிரியாவிலும், ஈராக்கிலும் இடம்பெறும் நிகழ்வுகள் மட்டும் தான் எமக்கு பொதுவாக தென்பட்டாலும் கூட, மேலைத்தேய நாடுகள் ஒவ்வொன்றிலும் தினமும் முஸ்லிம் எதிர்ப்பு மோதல் இடம்பெறுகின்றன.

அண்மைக்காலத்தில், ஜேர்மன், ஒஸ்ரியா மற்றும் இத்தாலி போன்ற நாடுகளில் இடம்பெற்ற தேர்தல்களிலும், சுவீடன், பிரான்ஸ், பிரித்தானியா, நோர்வே போன்ற நாடுகளின் தேர்தல்களிலும் இஸ்லாம் எதிர்ப்புப் போக்குள்ள கட்சிகளுக்கே அதிகாரம் கிடைக்கப்பெற்றது.

இலங்கையிலும், சிங்கள மக்களுக்கு மத்தியில் முஸ்லிம் மக்களின் வளர்ச்சி தொடர்பில் பாரிய அச்சம் ஏற்பட்டுள்ளது என்பது மறைப்பதற்குரிய விடயமல்ல. அத்துடன், மிகச் சிறிய அடிப்படைவாத இஸ்லாமியர்கள் குழு, சிங்களவர்கள் மத்தியில் மாத்திரமல்ல இந்துக்கள், கிறிஸ்தவர்கள் இடையேயும் பெரும் அச்சம் ஏற்படக் கூடியவாறு வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் செயற்பட்டு வருகின்றது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலில் கூட சில பகுதிகளில் தேர்தலில் போட்டியிட்ட முஸ்லிம் பெண் வேட்பாளர்களை, அவர்கள் முஸ்லிம்கள் அல்லர் என சில அடிப்படை வாதிகள் அறிக்கை விடுத்திருந்தனர். இதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட பதிலும், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாத குறைபாடும் வெளிப்படையாகவே காணக்கூடியதாக இருந்தன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நோர்வூட் பகுதியில் சில மாணவர்கள் திடீரென வைத்தியசாலையில் சேர்ப்பு

இலங்கையின் மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தின் நோர்வூட் பகுதியில் சில மாணவர்கள் திடீரென வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட டிக்கோயா நிவ்வெளி பகுதியில் உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற்று வந்த ஆறு மணவர்ககளே இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்கள் டிக்கோயா கிளங்கன் மாவட்ட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 09.30 மணி அளவில் இடம்பெற்றுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிநுட்ப பயிற்சி நிலையத்தின் வளாகத்தில் யூரியா உரத்தை தோட்ட மக்கள் கொண்டுவந்து கொட்டியுள்ளனர். இதன் காரணத்தால் தொழில்நுட்ப பயிற்சிநிலையத் தில் பயிற்சி பெற்ற மாணவர்களுக்கு அரிப்புத் தன்மை மற்றும் கண்வலி ஆகிய ஒவ்வாமைத் தன்மைகள் ஏற்பட்டன என கூறப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பில் 12மாணவர்கள் வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்ட போதும் அவர்களில் ஆறு மாணவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதோடு ஏனையோர் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுக் கொண்டு வீடு திரும்பினர் என தொழிற்பயிற்சி நிலை யத்தின் அதிபர் திருமதி சந்ராகுமாரி பெல்ஜிமன் தெரிவித்துள்ளார்.



**தவக்கால சிந்தனை**

# இலக்கு நோக்கி ஓடுதல்

"கடந்ததை மறந்துவிட்டு முன்னிருப்பதைக் கண்முன்கொண்டு பரிசு பெறவேண்டிய இலக்கை நோக்கித் தொடர்ந்து ஓடுகின்றேன். கிறிஸ்து இயேசுவின்மூலம் கடவுள் எனக்கு மேலிருந்து விடுவிக்கும் அழைப்பே அப்பரிசாகும்" (பிலி 3:13-14)

பழைய பாவ வாழ்க்கையை விட்டுப் புதிய புனிதமான வாழ்வினை முன் வைத்து நகருவதே எமது இலக்காக அமையவேண்டும். கிறிஸ்துவுக்குள் வாழும் வாழ்வைத் தனது புது வாழ்வாக ஏற்றுக் கொண்ட புனித பவுல் மனமாற்றத்தின் பின்னர் சாகுமட்டும் இயேசுவோடு வாழ்வதையே தனது இலக்காகக் கொண்டு வெற்றிக் கண்டார். சோர்ந்து போகாது, உலகு பக்கம் சார்ந்து போகாது அவர் இயேசுவோடு இரண்டறக் கலந்தார்.

எமது வாழ்க்கைப் பயணம் இயேசுவாக, இயேசுவுக்குள் வாழ்வதையே இலக்காகக் கொண்டு அமையவேண்டும். இயேசுவுக்குப் புறம்பாகச் சிந்திப்பது, செயற்படுவது பாவத்திற்கே இட்டுச் செல்லும். இறைவனின் சாயலில் படைக்கப்பட்ட மனிதன் படைத்த பரம்பொருளோடு இணையவே அழைக்கப்பட்டுள்ளான். சாத்தானின் லீலைகளை இலகுவில் வெல்லுவதற்கு இயேசுவினால் பயிற்றுவிக்கப்பட்டு மோட்ச இராட்சியத்தைப் பரிசாகச் சுவீகரித்துக்கொள்வான்.

அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அ.ம.தி

# நெல்லின் விலையை விவசாயிகள் தீர்மானிக்க வேண்டும்

### மட்டு. அரசாங்க அதிபர் உதயகுமார் தெரிவிப்பு



மட்டக்களப்பு,மார்ச் 07

நெல்லின் விலையை தீர் மானிக்க கூடியவர்களாக விவ சாயிகள் மாறவேண்டும். இதன் மூலமே இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். என்று மட்டக் களப்பு மாவட்ட அரசாங்க அதி பர் மா.உதயகுமார் தெரிவித் துள்ளார்.

மண்முனை தென்மேற்கு பிரதேசத்திற்கான ஆரம்ப கூட் டம் கொக்கட்டிச்சோலை கலா சார மண்டபத்தில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் மா.உதயகுமார் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்ப கல் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் அரசாங்க அதிபர் தொடர்ந்தும் குறிப்பிடு கையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தில் நெல்உற்பத்தி செய்யப்பட்டாலும், அதற்கான விலையை தீர்மா னிப்பவர்களாக தரகர்களே இருக் கின்றனர். இதனால் தரகர்கள் அதிக இலாபத்தைப் பெற்றுக் கொள்கின்றனர். விவசாயிகள் இலாபத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமல் திண்டாடுகின்றனர்.

அரசாங்கத்தினால் தீர்மா னிக்கப்படும் விலைக்கேற்ப நெல்லை விற்பதற்கு எமது மாவட்டத்தில் நெல்உற்பத்தி இருப்பதும் இல்லை. இதற்கு நெல்லை உலரவைப்பதற்கான வசதியின்மையும் பிரச்சினை யாக இருக்கின்றது என விவசா யிகள் தெரிவித்துள்ளனர்.

அதற்கமைய நெல்லை உலர விடுவதற்கான வசதிகளை ஏற் படுத்துவதற்கான முன்மொழிவு களையும் சமர்ப்பித்திருக்கின் றோம். அவை சாத்தியமாகின்ற போது, இப்பிரச்சினைக்குத் தீர்வு கிடைக்கப்பெறும்.

அரசாங்கத்தின் அதிகாரி களாக மக்களுக்கு சேவை செய் வதற்காகவே நாம் இருக்கின் றோம். உங்கள் பிரச்சினைகள் தொடர்பில் எமக்கு குறிப்பிடு கின்றவேளை அவற்றை நாம் தீர்த்துவைக்ககூடிய வழிவகை களை தேடுவோம். விவசாயத்தி னூடாக எவ்வாறு வருமானத்தை ஈட்டமுடியுமோ அதற்கான வழி வகைகளையும் நாம் அனைவ ரும் இணைந்து மேற்கொள்ள வேண்டும்.

வனவள பாதுகாப்பினர் இருக்கின்ற வனங்களை பாது காப்பதோடு மட்டும் நிறுத்திவிடா மல் புதிய வனங்களையும் உரு வாக்க வேண்டும். வீடுகளிலும் மரங்களை நடுவதற்கேற்ற வேலைத்திட்டங்களை மேற் கொள்ள வேண்டும் என்று குறிப் பிட்டார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பி னர் ஞா.சிறிநேசன், அதிகாரிகள் உள்ளிட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

(ப)

### முஸ்லிம் பகுதிகளில் பதற்றம்

# பூரண ஹர்த்தாலால் ஸ்தம்பித்தது கிழக்கு









அம்பாறை,மார்ச் 07

இலங்கையின் கிழக்கே அம்பாறை மாவட்டத்தின் பல பகுதிகளிலும் முஸ் லிம் மக்களால் நேற்று பூரண ஹர்த்தால் கடைப்பிடிக்கப்பட்டது.

நாடளாவிய ரீதியில் முஸ்லிம்களுக்கு எதிராக இடம்பெற்றுவரும் வன்முறை களை எதிர்த்தும், கடும் கண்டனம் தெரி வித்தும் அம்பாறை மாவட்டத்திலுள்ள அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று, பாலமுனை, ஒலுவில், கல்முனை, சாய்ந்தமருது, மருதமுனை மற்றும் முஸ்லிம்கள் வாழும் பல பிரதேசங் களிலும் இந்த எதிர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன்படி கடைகள் அடைக்கப்பட்டு வீதிகளில் ரயர் போட்டு தடையேற்படுத் தப்பட்டுள்ளன. இதனால் மக்கள் மத்தி யில் அச்சநிலை காணப்பட்டது.

இதனால் குறிப்பிட்ட பிரதேசங்களி லுள்ள பாடசாலைகள், வங்கிகள், எரி பொருள் நிரப்பும் நிலையங்கள், கடை கள் போன்றன மூடப்பட்டும், வைத் தியசாலைகள், அரச நிறுவனங்கள் ஸ்தம்பிதம் அடைந்தும் காணப்பட்டன.

(ப)

### அட்டப்பள்ளம் இந்து மயான விவகாரம்!

# கைதாகிய 21 பேருக்கும் பிணை

மட்டக்களப்பு,மார்ச் 07

அட்டப்பள்ள இந்துமயான விவகார ஆர்ப்பாட்டத்தின்போது விசாரணைக் குட்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 21பேரும் நேற்று முன்தினம் பிணையில் விடுவிக்கப் பட்டனர்.

சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றில் நேற்று முன்தினம் அந்த மக்கள் சார்பில் சட்டத்தரணிகளான சந்திரமணி சிவரஞ் சித் ஜெகநாதன் ரமணா, மற்றும் ஆர்த் திகா உள்ளிட்ட அறுவர் ஆஜராகி முன் நகர்வு மனுவை சமர்ப்பித்து வாதாடினர்.

அந்த முன்நகர்வுமனுவை ஏற்றுக் கொண்ட நீதிவான் 14நாள் விளக்கம றியல் தீர்க்கப்பட்டிருந்த 21பேரையும் பிணையில் விடுதலைசெய்ய உத்தரவு பிறப்பித்தார்.

எதிர்வரும் 16ஆம் திகதி 23பேரும் மன்றில் ஆஜராகவேண்டுமென தவ ணைத்திகதியையும் அவர் அறிவித்தார்.

கடந்த 27 ஆம் திகதி அம்பாறை மாவட்டத்திலுள்ள நிந்தவூர்ப்பிரதேசத் துக்குட்பட்ட அட்டப்பள்ளம் இந்து மயா னத்தை ஒரு நபர் ஆக்கிரமிக்க நடவ டிக்கை மேற்கொள்ளப்பட்டபோது மக் கள் கிளர்ந்தெழுந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடு பட்டமையால் அங்கு பதற்றம் நிலவியது.

அந்த ஆர்ப்பாட்டத்தின்போது உதவிப் பிரதேச செயலாளரும் கிராம சேவையா ளரும் தாக்கப்பட்டனர்.

இந்த நிலையில் ஆர்ப்பாட்டத்தின் போது தாக்குதலில் ஈடுபட்டனரென்ற சந்தேகத்தின்பேரில் 23பேரின் பெயர் கள் பொலிஸாரிடம் சமர்ப்பிக்கப்பட்ட தன் பிரகாரம் அவர்கள் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு பெண்கள் இருவ ரைத் தவிர ஏனைய 21பேரும் 14நாள் விளக்கமறியலில் தீர்க்கபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு. தாழங்குடாவில் இளம்தாய் ஒரே சூலில் 3 சிசுக்கள் பிரசவிப்பு



தாழங்குடா கிராமத்தைச் சேர்ந்த பிரேம்குமார் காயத்திரி என்ற (வயது 26) என்ற பெண் தலைபிரசவத்தில் ஒரே சூலில் மூன்று குழந்தைகளை நேற்று முன்தினம் பிரசவித்துள்ளார் என மட் டக்களப்பு போதனா வைத்தியசாலை வைத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு போதனா வைத்திய சாலையில் கர்ப்பிணித் தாய்க்கு மேற் கொண்ட அறுவை சிகிச்சை மூலம் இந்த மூன்று குழந்தைகளை பிரசவித்துள்ளார் என வைத்தியர்கள் தெரிவித்தனர்.

மூன்று குழந்தைகளில் முதல் பெண் குழந்தை 2 கிலோ 100 கிராம் எடையுட னும், இரண்டாவது ஆண் குழந்தை 1 கிலோ 800 கிராம் எடையுடனும், மூன் றாவது ஆண் குழந்தை 1 கிலோ 540 கிராம் எடையுடனும் பிறந்துள்ளன.

தாயும் மூன்று குழந்தைகளும் சிறந்த ஆரோக்கியத்துடன் உள்ளார்கள் என வைத்தியசாலை விடுதி வைத்திய அதி காரிகள் தெரிவிக்கின்றனர்.




# இலங்கையில் வருடாந்தம் 1,700 சிசு மரணங்கள்!

கொழும்பு, மார்ச் 07

இலங்கையில் வருடாந்தம் 1,700 சிசு மரணங்கள் சம்பவிக்கின்றன. இவை தாயின் கருவறையில் சிசு உருவாகி 28 வாரங்களின் பின் ஏற்படக் கூடிய கருச் சிதைவினால் ஏற்படக்கூடியனவாகும்.

குழந்தை பிறந்து முதல் வாரத்திற்குள் 1550 சிசு மரணங்கள் சம்பவிக்கின்றன என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் அனில் யாசிங்க தெரிவித்தார்.

சுகாதார பணிமனையில் உலக பிறவி குறைபாடுகள் தினத்தை முன்னிட்டு இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தாய் அல்லது தந்தையின் பரம்பரையில் காணப்படும் குறைபாடுகளே சிசு மரணங்களுக்கு பிரதான காரணங்களாகின்றன. ஆரோக்கியமற்ற, வலது குறைந்த குழந்தைகள் பிறக்க கர்ப்பிணியின் சூழல், தாயிடம் காணப்படும் நோய்கள், மனநிலை, பாவிக்கும் மருந்து வகை களின் தாக்கம் என்பன காரணமாகின்றன.

அதேவேளை, 35 சதவீதமான சிசு மரணங்கள் ஏற்படுவதற்கான காரணங்கள் இதுவரையில் கண்டறியப்படவில்லை. இத்தகைய கருச்சிதைவானது ஆண்டுக்கு சுமார் ஒரு லட்சம் கர்ப்பிணி தாய்மாருக்கிடையே நிகழ்கின்றது.

கருவுற்ற தாய் தனது குழந்தையின் பிரசவம் தொடர்பில் அக்கறையுடன் இருக்க வேண்டும். இதில் பெரும்பாலான தாய்மார் தனது உடல் ஆரோக்கியம் குறித்து அக்கறை காட்டும் அதே வேளை தனது உள ஆரோக்கியம் தொடர்பில் அக்கறை கொள்வதில்லை.

இதனால், பிறக்கும் குழந்தை ஆரோக்கியமற்றதாகவும் உடல் உபாதைகளுக்கு ஆளான குழந்தையாகவும் பிறக்கின்றன. சில தாய்மார்கள் மது அருந்தும் பழக்கமுடையவர்களாயின் பிறக்கும் குழந்தை கண்கள் ஒடுங்கிய வாறும் வாயின் மேலுதடு சற்று தூக்கிய நிலையிலும் பிறக்க வாய்ப்புண்டு. ஆனால் இத்தகைய குழந்தைகள் ஆரோக்கியமானவர்கள் என நினைக்கின்றார்கள். ஆனால் அவையும் ஒருவித குறைபாடுகளாகும் எனப் பலருக்குத் தெரிவதில்லை.

மேலும், பரம்பரையில் ஏதேனும் ஒரு குழந்தை பிறந்து சில நாள்களில் இறக்குமாயின் அல்லது ஏதேனும் குறைபாடுகளோடு பிறந்து இறக்குமாயின் அவ்வாறு இறந்த குழந்தைகளை கட்டாயம் மரபணு சோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

ஆனால், பொது மக்கள் அதை விரும்புவதில்லை. மூடநம்பிக்கைகளினால் தனது அடுத்த பிரசவத்தையும் முறையாக செய்ய முடியாமல் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றெடுக்க தவறுகின்றனர். மரபணு சோதனை செய்வதனூடாக குழந்தை இறக்க காரணம் என்ன, அடுத்த குழந்தைக்கும் அதே மாதிரியான பிரச்சினைகள் ஏற்படுமா போன்ற பல கேள்விகளுக்கான தீர்வினை கண்டறியலாம்.

எனவே குழந்தை பிறப்பு தொடர்பில் தாய், தந்தை விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(சு)

## பொறிமுறை காலாட் படையணியின் 11ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு





கொழும்பு, மார்ச் 07

தம்புள்ள பிரதேசத்தில் அமைந்திருக்கும் பொறிமுறை காலாட் படையணியின் தலைமையகத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வு சமய சம்பிரதாயங்களுடன் நடைபெற்றன.

இந்த ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு சமய சம்பிரதாய நிகழ்வுகள் கதிர்காமம் கிரிவெஹரவிகாரை, கதிர்காம ஆலயம், தலதாமாளிகை மற்றும் மஹா போதியவில் இடம்பெற்றன.

மேலும் வஹாகொட்டே றோமன் கத்தோலிக்க தேவாலயத்திலும், கலேவெல இந்துக் கோயிலிலும் மற்றும் புவக்பிடிய முஸ்லிம் பள்ளி வாசலில் இந்த சமய ஆசீர்வாத நிகழ்வுகள் நடைபெற்றன.

தலைமையகத்தில் இடம்பெற்ற வருடாந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாக வருகைதந்த பொறிமுறை காலாட் படை அணியின் படைத் தளபதி மேஜர் ஜெனரல் ருவன் குலதுங்கவிற்கு இராணுவ அணி வகுப்பு மரியாதை வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வுகள் அனைத்தும் பொறிமுறை காலாட் படைய ணியின் கட்டளைத் தளபதி கேர்ணல் எச்.எம்.யூ ஹேரத்தின் பூரண ஒத்துழைப்புடன் இடம்பெற்றன.

## வளலாய் பாடசாலை மெய்வன்மைப் போட்டி

அச்சுவேலி, மார்ச் 07

யாழ். வளலாய் அ.மி.த.க. பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை வியாழக்கிழமை பிற்பகல் 1.10 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் க.ரவீந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் கோட்டக்கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். வலய ஆசிரிய ஆலோசகர் திருமதி எஸ்.செல்வரட்ணம், சி.சி.எச்.நிறைவேற்றுப் பணிப்பாளர் ரி.ரி.மயூரன், துரைரட்ணம் சுரேந்திரகுமார் (ஆஸ்ரேலியா) ஆகியோரும் கௌரவ விருந்தினராக தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் கு.திருச் செல்வம் ஆகியோர் கலந்து கொள்வர்.

(இ)

## பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் சட்டவரைபு மீது இன்று விவாதம்

கொழும்பு, மார்ச் 07

பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் சட்ட வரைவு மீதான விவாதம், இன்று நாடாளுமன்றத்தில் நடைபெறவுள்ளது.

இந்தச் சட்டவரைபு மீதான விவாதம் கடந்த ஆண்டு ஜூலை 5 ஆம் திகதி நடை பெறும் என்று அறிவிக்கப்பட்டு பிற்போடப்பட்டது. மீண்டும் செப்ரெம்பர் 19 ஆம் திகதியும் இந்த விவாதம் பிற்போடப்பட்டது.

பல்வேறு தரப்புகளினதும் எதிர்ப்புகளால் அரசால் பிற்போடப்பட்ட இந்த சட்ட வரைபு மீதான விவாதத்தை இன்று நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கை அரசு பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் ஐ.நாவின் சர்வதேச பிரகடனத்தில் கடந்த 2015 ஆம் ஆண்டு டிசெம்பரில் கையெழுத்திட்டது.



அதற்கு அமையவே, பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பு அளிக்கும் சட்ட வரைபு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டவரைவு இலங்கைப் படையினருக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் என்று கூட்டு எதிரணி எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சிமெந்து விலை அதிகரிப்பை அரசு ரத்து செய்ய வேண்டும்

### தேசிய நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கான இயக்கம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 07

சிமெந்து விலை 30 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளது என அரசு விடுத்துள்ள கோரிக்கையை விரைந்து ரத்து செய்யவேண்டும் என்று தேசிய நுகர்வோர் உரிமைகளை பாதுகாப்பதற்கான தேசிய இயக்கத்தின் தலைவர் ரஞ்சித் விதானகே தெரிவித்துள்ளார்.

சிமெந்து விலை அதிகரிப்பு தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:-

இலங்கையில் சிமெந்து தயாரிப்பு நிறுவனங்களாக இரு பிரதான நிறுவனங்கள் செயற்பட்டு வருகின்றன. அதே சந்தர்ப்பத்தில் மேலதிகமாக 24 சிமெந்து நிறுவனங்களும் இயங்கி வருகின்றன. வருடத்திற்கு சிறப்பான வருமானங்களை ஈட்டுபவையாகவும் இந்தச் சிமெந்து நிறுவனங்கள் காணப்படுகின்றன.

கடந்த 2003 ஆம் ஆண்டு நுகர்வோர் தொடர்பான சட்டத்தின் அடிப்படையில் நோக்கும்போது சிமெந்து விலை அதிகரிப்பதற்கான நுகர்வோர் விவகாரங்கள் தொடர்பான ஆணையகத்தில் தனது அனுமதியைக் கோரவேண்டும்.

ஆனால், கடந்த வாரத்தில் ஒல்சிம் சிமெந்தின் விலை 30 ரூபாவால் அதிகரித்த விலையில் விற்கப்பட்டு வருகின்றது. சிலரின் அரசியல் நோக்கத்துக்காகவே இந்த விலை உயர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒல்சிம் சிமெந்து பக்கற் ஒன்றின் விலை 930 ரூபாவாக காணப்படுகின்றது. 30 ரூபா விலை அதிகரிப்பினால் ஒல்சிம் சிமெந்து 960 ரூபா அதிக விலையில் விற்கப்படுகிறது. இது நுகர்வோரின் உரிமைகளை மீறும் வகையில் உள்ளன.

இதனால், நுகர்வோர் சிமெந்து கொள்வனவு செய்வதில் பெரும் சிக்கலினை மேற்கொண்டு வருகின்றனர். சிமெந்து விலை அதிகரிப்பு தொடர்பில் விரைந்து தீர்மானத்தை அரசு எடுக்க வேண்டும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



## ஐந்து இலங்கையர்களுக்கு எதிராக வெளிநாட்டில் நீதிமன்ற விசாரணை

கொழும்பு, மார்ச் 07

டுபாயில் ஐந்து இலங்கையர்கள் தொடர்பில் நீதிமன்ற விசாரணைகள் ஆரம்பமாகியுள்ளன என அந்த நாட்டு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

21 லட்சம் ரூபா பெறுமதியான நகைகளையும் பணத்தையும் திருடினர் என இந்த இலங்கையர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அவர்கள் 29 இற்கும் 49 வயதிற்கும் இடைப்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2016ஆம் ஆண்டில், பாதுகாப்பு பெட்டகத்தை உடைத்து அந்த பொருள்களை இலங்கையர்கள் திருடியுள்ளனர் என இந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டுள்ள ஐந்து இலங்கையர்களும் தமது குற்றங்களை ஏற்றுக் கொண்டுள்ளனர் என்றும் இந்த நிலையில் விசாரணைகள் தொடர்கின்றன எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புத்தளம் – ஆனமடுவ பிரதேசங்களில் குடிதண்ணீர் பிரச்சினைக்கு தீர்வு

கொழும்பு, மார்ச் 07

புத்தளம் ஆனமடுவ உள்ளிட்ட எட்டுத் தேர்தல் தொகுதிகளில் நிலவும் குடிதண்ணீர் பிரச்சினைக்குத் தீர்வு காண அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்கீழ் பெரியளவிலான நான்கு நீர்த்தாங்கிகள் அமைக்கப்படவுள்ளதோடு, கால்வாய்களும் நிர்மாணிக்கப்படவுள்ளன.

ஸ்பெயின் அரசு இதற்காக 8ஆயிரம் கோடி ரூபாவை வழங்கவுள்ளது.

## தினசரி ராசி பலன் (07.03.2018)

*2018ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் மாசித்திங்கள் 23ஆம் நாள் புதன்கிழமை ஷஷ்டித்திதி பி.இ.2.00 மணி வரை பின்னர் ஸப்தமி. நட்சத்திரம். விசாகம் இரவு 10.34 மணி வரை பின்னர் அனுஷம். சித்தாமிர்தயோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** – *பகல் 12.21 மணி முதல் 01.51 மணி வரை*

**சுபநேரம்** – *மாலை 4.49 மணி முதல் 6.18 மணி வரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**– *மாசி மாத தேய்பிறை ஷஷ்டி*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *விசாகம்.*

**‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி**

**மேஷம்**
மத்திம பலன்கள் காணப்படுகின்றன. பணவரவு சுமாராக இருக்கும். செலவு, அலைச்சல் அதிகரிக்கும். உடலில் உபாதைகள் உண்டாகும். வாகனத்தால் செலவு உண்டாகும்.

**ரிஷபம்**
இனிமையான நாள். பல வகையிலும் பணம் வந்து சேரும். குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும். இருந்த வீட்டை விற்று புது வீடு வாங்குவார்கள்.

**மிதுனம்**
ஆக்கபூர்வமான நாள். எதிர்பாராத பண வரவு உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்களால் மதிக்கப்படுவார்கள். வியாபாரத்தில் கூட்டுத் தொழிலால் ஆதாயம் கிட்டும்.

**கடகம்**
கவலையான நாள். தனவரவு குறையும். மன உளைச்சல் வந்து நீங்கும். உடல் நலனில் கவனம் தேவை. குடும்ப அமைதி குன்றும். வீண் செலவுகள் ஏற்பட வாய்ப்புண்டு.

**சிம்மம்**
சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். உடல் நலக் கோளாறுகள் ஏற்படும். உடன் பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். வேலைச் சுமை, களைப்பு வந்து நீங்கும்.

**கன்னி**
உயர்வான நாள். திடீர் பணவரவு உண்டாகும். குடும்ப வாழ்வு அன்புடையதாக இருக்கும். விலையுயர்ந்த ஆடை, ஆபரணம் வாங்குவார்கள். வியாபாரத்தில் லாபம் எதிர்பார்த்தபடி கிடைக்கும்.

**துலாம்**
சுபீட்சமான நாள். பணபலம் அதிகரிக்கும். குடும்பத்தில் சந்தோஷம் அதிகரிக்கும். வீட்டில் சுபகாரியங்கள் நடக்கும். சகோதர உறவு வலுவடையும். வெளிவட்டாரத்தில் செல்வாக்குக் கூடும்.

**விருச்சிகம்**
யோசனையான நாள். வருமானம் குறையும். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். உடல், உபாதை, மன உளைச்சல் வந்து விலகும். எதிர் மறை எண்ணங்கள் வந்து நீங்கும்

**தனுசு**
நன்மையான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். நீண்டகால ஆசைகள் நிறைவேறும். கடன் பிரச்சினைகள் தீரும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும்.

**மகரம்**
சம பலன்கள் காணப்படுகின்றன. பணம் எவ்வளவு வந்தாலும் செலவுகள் அதற்கேற்றபடி இருக்கும். அலைச்சல், வாகனப் பழுது வந்து நீங்கும். உடல் நலக் கோளாறு ஏற்படலாம்.

**கும்பம்**
யோகமான நாள். தனலாபம் பெருகும். புதுமுயற்சிகளில் வெற்றி கிட்டும். குடும்பத்தில் அடிப்படை வசதிகள் பெருகும். சகோதர வழியில் உதவி கிட்டும். வீடு,புது வாகனம் வாங்கும் யோகம் உண்டு.

**மீனம்**
துன்பமான நாள். பணம் பற்றாக்குறையாக இருக்கும். தொழிலில் வேலைச்சுமை அதிகரிக்கும். உத்தியோகத்தில் மறைமுக அவமானங்கள் ஏற்பட்டாலும் அனுசரித்துப் போவது நல்லது.

**சந்திராட்டமநாள்:** பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங் களில் பிறந்தோர் சுபகருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.

## ஆங்கிலமொழி கல்வித் தரத்தை மேம்படுத்த புதிய செயற்றிட்டம்



கொழும்பு, மார்ச் 07

ஆங்கிலமொழி கல்வித் தரத்தை மேம்படுத்தும் நோக்கில் புதிய செயற்றிட்டத்தை பிரிட்டிஷ் கவுன்ஸில் அறிமுகம் செய்துள்ளது.

ஆங்கில பாட ஆசிரியர்களின் திறமையை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

உயர்கல்வி கல்வித்துறையிலும் தனியார் தொழில் கல்வியிலும் மாணவர்களுக்குச் சிறந்த வாய்ப்பை ஏற்படுத்துவது இதன் நோக்கமாகும் என்று பிரிட்டிஷ் கவுன்ஸில் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டுக்குள் முன்னெடுக்கப்படவுள்ள 14 மாதங்களைக்கொண்ட திட்டங்களில் ஆங்கில மொழியை கற்பிக்கும் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

கண்டி, களுத்துறை மற்றும் யாழ்ப்பாணத்திலுள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளில் சுமார் 1000 ஆசிரியர்கள் இதன்கீழ் பயிற்றுவிக்கப்படவுள்ளனர்.

## பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்பட மாட்டாது – வசந்த சேனநாயக்க



ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்று கொண்டுவரப்படமாட்டாது என வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வசந்த சேனநாயக்க தெரிவித்துள்ளார்.

கூட்டு எதிர்க் கட்சி, பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டுவருமாக இருந்தால், ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களிலுள்ள சிலரின் ஆதரவை அதற்கு வழங்குவதா? இல்லையா? என்பதை தீர்மானிப்பது அதில் அடங்கியுள்ள விடயங்களை அவதானித்ததன் பின்னரே எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், வேறு ஒரு குழுவால் பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வருவதாயின் அதற்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் ஐ.தே.கவின் குழுவினருடன் கலந்துரையாடவும் வேண்டும் எனவும் இராஜாங்க அமைச்சர் கூறியுள்ளார்.

## கைதடியில் முன்பள்ளி விளையாட்டு விழா

கைதடி தென்கிழக்கு விநாயகர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் விநாயகர் சன சமூக நிலையத் தலைவர் செ.மயூரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் பா.கஜதீபன்,சிறப்பு விருந்தினர்களாக கைதடி விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர் நா.கருணாகரன் மற்றும் சாவகச்சேரி பிரதேச சபை பிரதம முகாமைத்துவ உதவியாளர் சி.பத்மநாதன் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக நிர்வாக கிராம உத்தியோகத்தர் வீ.சிவசுப்பிரமணியம், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி நஜீவா மற்றும் கைதடி பிரதேச முன்பள்ளி களின் இணைப்பாளர் திருமதி சு.தனபாலசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வர்.

(இ)

## மின் தடை

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழன் காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை

**யாழ் பிரதேசத்தில் -**

ஏ9 வீதியில் (புங்கன்குளத்திலிருந்து கச்சேரி நல்லூர் வீதி சந்தி வரை), பாரதி லேன், புங்கன்குளம் வீதி ரயில் கடவை வரை, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, பேரின்பநாயகம் வீதி, காட்டுக் கந்தோர் வீதி, மாவைகலட்டி, கொல்லங்கலட்டி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில் -**

பட்டானிச்சூரிலிருந்து பம்பைமடு வரை, நெளுக்குளம் தொழில்நுட்பக் கல்லூரி, தவசிக்குளம் கிராமம், சாளம்பைக்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் மின் விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

(இ

## குறும்படம், நாடக போட்டிகளுக்கு விண்ணப்பம்


யாழ்ப்பாணம், மார்ச் 07

யாழ்.மறை மாவட்ட கத்தோலிக்க இளைஞர் ஒன்றியத்தின் இளையோர் ஆண்டை முன்னிட்டு குறும்படப் போட்டி மற்றும் நாடகப் போட்டி என்பன நடத்தப்படவுள்ளன. ‘இறைதிட்டம் தேடும் இளையோர் பயணம்’ என்னும் இப்பொருளின் கீழ் தயாரிக்கப்பட்ட குறும்படம் மற்றும் நாடகப் போட்டி என்பவற்றுக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இப் போட்டிகள் மறை கோட்ட ரீதியாக தெரிவு செய்யப்பட்ட பின்பு மறை மாவட்ட ரீதியாக நடத்தப்படவுள்ளன. இப்போட்டிகளுக்கு ஆற்றுகைகள் மற்றும் படைப்புக்களைச் சமர்ப்பிக்க விரும்புவோர் அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன் இயக்குநர், இளையோர் ஆணைக்குழு, ஆயர் இல்லம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

வடக்கு மாகாண முதலமைச்சர் நீதியரசர் சி.வீ.விக்னேஸ்வரன் நேற்றையதினம் முல்லைத் தீவு மற்றும் புதுக் குடியிருப்பில் மூன்று வெவ்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டு உரை யாற்றி இருந்தார். அந்த நிகழ்வுகளில் அவர் உரையாற்றிய விட யங்கள் இங்கு தொகுத் துத் தரப்படுகின்றன.



ஆசியாவிலுள்ள மக்களை துன்புறுத்தும்

# நீரிழிவு நோய்வராமல் தடுக்க இன்றே செயலில் இறங்குவோம்!

## புதுக்குடியிருப்பு சத்திரசிகிச்சை விடுதி திறப்பு விழாவில் முதலமைச்சர் விக்கி

சுதந்திர சுகாதார சேவையை வலுப்படுத்தும் நோக்கத்தை முன் மாதிரியாகக் கொண்டு மாகாண குறித்தொதுக்கப் பட்ட அபிவிருத்தி கொடை நிதியில் (PSDG - 2016) 2 கோடியே 55 லட்சம் ரூபா செலவில் புதுக்குடியிருப்பில் ஆதார வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்பட்ட இந்த சத்திர சிகிச்சை விடுதியையும் மருத்துவ நிபுணர்களின் தங்குமிட வசதிகளுடன் கூடிய புதிய கட்டடத்தையும் திறந்து வைத்து உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன். முல்லைத்தீவு மாவட்டத்தில் பல வைத்தியசாலைகள் மற்றும் மருந்து வழங்கல் பிரிவு எனப் பல கட்டடங்களை திறந்து வைப் பதற்காக இங்கே வருகை தந்துள்ள நிலையில் முதலாவதாக புதுக்குடியிருப்பு ஆதார வைத்திய சாலையின் சத்திர சிகிச்சை விடுதி, வைத்தியர்கள் விடுதி ஆகியவற்றை முதல் கட்டமாகத் திறந்து வைத்துள்ளேன்.

முல்லைத்தீவுமாவட்டத்தைப் பொறுத்த வரையில் முல்லைத்தீவு மருத்துவமனைக்கு அடுத்தபடியாக பெரிய அளவிலான ஆதார வைத்தியசாலை புதுக் குடியிருப்பிலேயே இருக்கின்றது. இங்கு சத்திரசிகிச்சை விடுதி, வைத்தியர்கள் விடுதி ஆகியன இல்லாதமை பெருங் குறையாக இருந்தது. அதன் காரணமாகவே இப்புதிய கட்டடம் அமைக் கப்பட்டு இன்று திறந்து வைக்கப்பட் டுள்ளது. இந்த வைத்தியசாலையில் சத்திரசிகிச்சை மேற்கொள்ளக்கூடிய சத்திரசிகிச் சைக்கூடம் இல்லாத போதும் சத்திர சிகிச்சை விடுதி எதற்காக அமைக் கப்பட்டது என நீங்கள் வினவக்கூடும். சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டிய நோயாளர்களுக்கு கால் கைகளில் வெட்டுக் காயங்கள், விபத்தில் சிக்கியவர் களுக்கான முதலுதவிச் சிகிச்சைகள் ஆகியவற்றை முதற்கண் வழங்கக்கூடிய வகையிலேயே இந்த சத்திரசிகிச்சை விடுதி அமைக்கப்பட் டுள்ளது.

புதுக்குடியிருப்பு ஆதார வைத்தியசாலையில் ஒரு வைத்திய அத்தியட்சகர் தலைமையில் 04 வைத்திய நிபுணர்கள் இங்கே கடமையாற்றுகின்றனர் எனவும், இது TypeB தரத்தினாலான ஓர் ஆதார வைத்தியசாலை எனவும் தெரிவிக்கப்பட்டது. இந்த வைத்தியசாலையில் 11 தாதியர்கள் உட்பட 65 இற்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் கடமையாற்றுகின்றனர் என்றும் கூறப்பட்டது.

புதிதாக அமைக்கப்பட்ட இந்த 2 மாடிக் கட்டடத்தில் Lift வசதிகள் இல்லாத போதும் சாய்தள அமைப்பு முறையினாலான (Ramp) படிகள் அமைக் கப்பட்டிருக்கின்றமையால் நோயாளர் களை கொண்டுசெல்வதற்கு இது இலகுவாக இருக்கும். வைத்திய அதிகாரிகள் தங்கியிருந்து மருத்துவ நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு வசதியாக 10 அறைகளைக் கொண்ட மருத்துவர்களுக்கான தங்குமிட வசதிகள் இப்புதிய கட்டடத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சத்திரசிகிச்சைப் பிரிவு நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளதால் இங்கு வருகின்ற நோயாளர்கள் மருத்துவ நிபுணர்களை இலகுவில் அணுகி தமது நோய்களுக்குரிய சத்திரசிகிச்சை மருத்துவ சேவைகளை பெற்றுச் செல்வதற்கு இது இலகுவாக இருக்கும் என எண்ணுகின்றேன். இந்த அழகிய கட்டடம் கிட்டத்தட்ட இரண்டரைக் கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டு இன்று பொது மக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக் கப்படுகின்றது. இந்தக் கட்டடங்களை இவற்றின் அழகு குன்றாமலும் சுகாதார வசதிகளில் நலிவுகள் ஏற்படாத வகையிலும் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் பாவிக்க வேண்டியது இப் பகுதி மக்களின் தலையாய கடமையாகும்.

### பொதுச் சொத்துகளையும் எமது உடைமையாக நினையுங்கள்

எம்மிடையே ஒரு பிழையான நோக்கு உண்டு. அதாவது எமது தனிப்பட்ட சொத்துக்களாயின் அவற்றை மிகுந்த கவனத்துடன் எதுவித பாதிப்புக்களும் இன்றிப் பயன்படுத்துவோம்.

ஆனால், அவை அரச சொத்துக்களாக இருப்பின் எதுவித கவனமும் இன்றி கண்ட இடத்தில் எச்சில் உமிழ்வது, குப்பை கூளங்களை கண்ட இடமெல்லாம் வீசி எறிவது, மலசல கூடங்களை ஒழுங்காகப் பயன்படுத்தாது இருப்பது, அவற்றை முறையாக நீரூற்றி சுத்தப் படுத்தாது செல்வது ஆகிய பழக்கங்கள் எம்முள் எப்படியோ உள்நுழைந்து விட்டன. இவை கட்டாயமாக சீர் செய்யப்பட வேண்டியவை.

கடந்த மூன்று தசாப்தங்களாக நடைபெற்ற இன அழிப்பு நடவடிக்கைகளின் விளைவாக சொல்லொண்ணாத் துயரங்களை எமது மக்கள் அனுபவித்திருக்கின்றார்கள். இருப்பதற்கு ஒழுங்கான வீடுகள் இல்லை. மலசல கூட வசதிகள் இல்லை, தண்ணீர் அள்ளுவதற்கு கிணறுகள் இல்லை, தொழில் வசதிகள் இல்லை, வருமானம் இல்லை என்று இவ்வாறு பல்வேறுபட்ட துயரங்களில் எமது மக்கள் உழன்று கொண்டிருக்கின்றார்கள். தற்போது சற்று தலை நிமிர்கின்ற இவ் வேளையில் இவ்வாறான கட்டடங்கள் கட்ட வேண்டிய நிதிகள் எமக்குக் கிடைத்து வருகின்றன. திரும்பத் திரும்பவும் இவை எமக்கு கிடைக்கும் என உறுதி கூறமுடியாது.

ஆகவே கிடைத்த கட்டடங்கள் ஒழுங்காக பயன்படுத்தப்பட வேண்டும். பராமரிக்கப்பட வேண்டும். இதனை நிர்வாகத் தலைவர்களே உறுதி செய்ய வேண்டும்.

### மீண்டும் தலைதூக்கும் மலேரியா நோய்

இலங்கையில் மலேரியா நோய்த் தாக்கம் முற்று முழுதாக அழித்தொழிக் கப்பட்டுவிட்ட நிலையில் மீண்டும் தற்போது அங்கொன்றும் இங்கொன்றுமாக நோயாளிகள் இனம் காணப்பட் டுள்ளனர். இவ்வாறான நோய்த் தாக்கங்களுக்கு உள்ளானவர்கள் இந்த நோயை இலங்கைக்கு வெளியிலிருந்து கொண்டு வந்தவர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். சில காலங்களுக்கு முன்பு 'சிக்கின் கூனியா' என்ற ஒரு வகை நோய்த் தாக்கம் எம்மில் பலரை ஆட்டிப் படைத்தது. அந்த நோய்த் தாக்கத்தால் பல நூற்றுக்கணக்கான மக்கள் அழிந் தொழிந்து போனதும் பல்லாயிரக் கணக்கானவர்கள் அந்த நோய்த் தாக் கத்தின் பக்க விளைவுகள் காரணமாக கால் வருத்தம், மூட்டு வருத்தங்கள், தீராத உடல் உபாதைகள் எனப் பல்வேறு பட்ட நிரந்தர குறைபாடுகளுடன் எம்மிடையே இன்றும் காணப்படுகின்றனர்.

எனவே சுத்தம் சுகாதாரத்துடன் கூடிய நோயற்ற வாழ்வை வாழ்வதற்கு நாம எம்மை தயாராக்கிக் கொள்ள வேண்டும். நாம் பின்பற்ற வேண்டிய அடிப்படை சுகாதாரப் பழக்க வழக்கங்களில் இருந்து மறுகின்ற போதே இவ்வாறான நோயக் கிருமிகளும், தொற்று நோய்க் கிருமிகள், தொற்றா நோய்க் கிருமிகள் என அனைத்தும் தம் பங்கிற்கு எமது உடல்களில் தாக்கத்தை விளைவிக்க முனைகின்றன. நாம் ஆரோக்கியமாக இருந்தால் எமது சுற்றுச் சூழல் ஆரோக்கியமாக இருந்தால் நாம் உண்ணுகின்ற உணவு குடிக்கின்ற தண்ணீர் சுகாதாரமாக இருந்தால் எமது உணவுப் பழக்கவழக்கங்கள் சுகாதாரமாகவும், நியமனங்களை மீறாத வகையிலும் அமையுமாயின் நோய் நொடியற்ற நீண்ட ஆயுளை அனுபவிக்க முடியும்.

இன்று ஆசியாவில் உள்ள மக்களை நீரிழிவு நோய் மிகவும் துன்புறுத்து கின்றது. எமக்கு இப்போது நீரிழிவு நோய் இல்லைத் தானே வந்த பின்னர் சீனி பாவிப்பதை குறைத்துக் கொள்வோம் அல்லது நிறுத்துவோம் என நினைப் பவர்கள் நிச்சயமாக கூடிய விரைவில் இந்த நோய்த் தாக்கத்திற்கு உள்ளாவர்கள் என்று எதிர்பார்க்கலாம். இதனை உணர்ந்து கொண்டு நாம் சுத்திகரிக்கப் பட்ட வெள்ளைச் சீனி, வெள்ளை உப்பு, வெள்ளை அரிசி, வெள்ளை மாவு ஆகியவற்றைத் தவிர்க்க முன்வர வேண்டும்.

எமது பாரம்பரிய உணவுகளும் உணவு முறைகளும் தேக ஆரோக்கியத்திற்குத் தக்கவை என்று கூறப்படுகிறது. அவற்றிலிருந்து நாம் மாறாதிருப்போமாக! இன்று நாகரிகம் என்ற போர்வையில் நாங்கள் உண்ணும் உணவும் குடிக்கும் பானமும் தேக ஆரோக்கியத்திற்கு இடையூறாகவே அமைந்து விடுகின்றன.

நான் மேலே குறிப்பிட்ட விடயங்களில் கூடிய கவனம் செலுத்தி உடற்பயிற்சியுடன் கூடிய வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வதன் மூலம் மருத்துவமனைகளில் குவிகின்ற மக்கள் எண்ணிக்கையை குறைப்பதற்கு நீங்களும் பங்காளிகளாக முன்வரவேண்டும்.- என்றார்.

## முல்லைத்தீவு மார்புநோய் சிகிச்சை நிலைய திறப்பு விழாவில்...

சுதந்திர சுகாதார சேவையை வலுப்படுத்தும் நோக்கத்தை முன்மாதிரியாகக் கொண்டு எயிட்ஸ், சயரோகம், மலேரியா நோய்களை அழித்தொழிப்பதற்கான கருத்திட்ட உலக நிதியத்தின் கீழ் GF ATM -2016 திட்டத்தின் கீழ் 2 கோடி 30 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக்கப்பட்ட மார்பு நோய் சிகிச்சை நிலையத்தை திறந்து வைத்து உங்கள் முன் உரையாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

மார்பு நோய் தொடர்பான நோயாளிகளைத் தனியாக பரிசீலனை செய்வதற்கும், அந்த நோயாளர்களின் நோய்களை Screening முறை மூலம் ஆராய்ந்து அவர்களின் நோய்களைக் கண்டறிவதற்கும் அவர்களுக்குரிய மருத்துவ சேவைகளை வழங்குவதற்கும் ஏற்ற வகையில் இந்த நிலையம் அமைக்கப் பட்டுள்ளது மகிழ்வைத்தருகிறது.

யாழ்ப்பாணத்தில் மார்பு நோய் மருத்துவ நிலையம் பண்ணை சுகாதாரக் கிராமத்தில் அமைக்கப்பட்டிருப்பது போன்று இங்கும் இந்த மார்பு நோய்ச் சிகிச்சை நிலை யம் உண்ணாப் பிலவு பகுதியில் அமைந் துள்ள RDHS காரியாலயத்திற்கு அண்மையில் அமைக்கப்பட் டுள்ளது. இந்த நிலையத்தில் உடனடிப் பயன்பாட்டிற்கான X-ray இயந்திரங்கள் இல்லாத போதும் எதிர்காலத்தில் இந்த இயந்திரங்களையும் பெற்றுக் கொண்டுசிகிச்சையளிக்கக்கூடிய முறையிலேயே இந்த மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது.

காசநோய் தொடர்பான Screening தினமும் செய்வதற்கு வசதிகள் இல்லாத போதும் குறிப்பிட்ட சில தினங்களில் இப் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Screening என்றவுடன் ஒரு பழைய சம்பவம் ஞாபகத்திற்கு வருகின்றது. குருநாகல் பகுதியிலுள்ள ஒரு பின் தங்கிய கிராமத்தைச் சேர்ந்த முதியவர் ஒருவருக்கு ஒரு விசித்திரமான ஆசை பிறந்தது. தனக்கு வயது போய்விட்டமையால்தனது உடம்பின்உள்உறுப்புக்களில் ஏதாவது நோய்கள் தொற்றிக்கொண் டுள்ளனவா என்று அறிய ஆவலாகி குருநாகல் வைத்தியசாலைக்குச் சென் றிருக்கின்றார்.

நோயில்லாத அவர் தனக்கு ஒரு X-ray எடுத்துப்பார்க்க வேண்டும் என அங்கு பலரிடம் கேட்டும் ஒருவரும் அவரின் கோரிக்கையை செவிமடுக்கவில்லை. இதனைக் கண்ணுற்ற ஒரு சிற்றூழியர் அவரை அணுகி X-rayஎடுப்பதற்குத் தான் உதவுகின்றேன் எனவும் அதற்குச் சற்றுப் பணம் கொடுக்க வேண்டும் எனவும் கூறியிருக்கின்றார். அந்தப் பெரியவரும் உண்மை என நம்பி அவர் கேட்ட பணத்தை கொடுத்திருக் கின்றார். அவரை X-ray எடுப்பதற்காக கூட்டிச் செல்வது போன்று அழைத்துச் சென்று யாரும் இல்லாத நேரம் பார்த்து Lift இல் ஏற்றி மேலும் கீழும் அசையச்செய்து விட்டு X-rayஎடுத்து விட்டேன் எனவும் படத்தை அடுத்த கிழமை பெற்றுக் கொள்ளமுடி யும் எனவும் கூறி அனுப்பி விட்டாராம். முதியவரும் மகிழ்ச்சியுடன் வீடு திரும்பி அடுத்த கிழமை ஆஸ்பத்திரிக்கு சென்ற போதுதான் தான் ஏமாற் றப்பட்டுவிட்ட விடயம் அவருக்குத் தெரிய வந்தது. ஒரு கிழமையாக தினமும் அந்த ஆஸ்பத்திரி வட்டாரத்திலேயே அந்த முதியவர் சுற்றித் திரிந்திருக்கின்றார்.

ஏமாற்றியவர் ஒரு நாள் வசமாக மாட்டிக்கொள்ள இரும்புப் பிடியில் அந்தப் பெரியவர் குறிப்பிட்ட ஊழியரை இழுத்து வந்து பணிப்பாளர் முன் நிறுத்தி விவரத்தைக் கூறியிருக்கின்றார். அந்த ஊழியரும் தனது தவறை ஒத்துக்கொண்டு மன்னிப்புக் கோரியமையுடன் அவரிடம் ஏமாற்றிப்பெற்ற பணத்தையும் மீளப் பெற்றுக்கொடுக்க ஆஸ்பத்திரி சமூகம் உதவி செய்ததாம்.

(10 ஆம் பக்கம் பார்க்க...)

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

X-ray என்றவுடன் இக்கதை எனக்கு ஞாபகத்திற்கு வந்தது. ஆனால் முல்லைத்தீவில் அப்படியான X-ray எதுவும் எடுக்கப்பட மாட்டாது என்பதனை நான் திடமாக நம்புகின்றேன்.

இந்த மார்பு நோய்ச் சிகிச்சை நிலையம் இப்பகுதி மக்களுக்கு கிடைக்கப்பெறுகின்ற ஒரு வரப்பிரசாதமாக கொள்ளப்படலாம். இந்த சிகிச்சை நிலையம் சகல வசதிகளும் கொண்ட ஒரு சிகிச்சை நிலையமாக செயற்பட எனது வாழ்த்துக்களை தெரிவிப்பதுடன் இன்னும் இரண்டு நிலையங்கள் திறக்கப்படவேண்டியுள்ள நிலையில் எனது உரையை இந்தளவில் நிறைவுசெய்து உங்கள் அனைவரையும் வாழ்த்தி வடக்குக் கிழக்கு பகுதிகளிலுள்ள தமிழ் மக்கள் தமக்குரிய அனைத்து உரித்துக்களையும் பெற்றுக்கொண்டு ஐக்கிய இலங்கைக்குள் ஏனைய இனங்களுக்கு ஒப்பானவர்களாக தமது விடயங்களைத் தாமே தீர்மானிப்பவர்களாக வாழக்கூடிய காலம் மலர இறைவனைப் பிரார்த்தித்து எனது உரையை நிறைவு செய்கின்றேன்.

# முல்லைத்தீவு பிராந்திய மருந்து வழங்கல் பிரிவு கட்டடத்தொகுதி திறப்புவிழாவில்...

முல்லைத்தீவு பிராந்தியத்திற்கு மருந்துகளை வழங்குவதற்கு தனியான ஒரு பிரிவு இல்லை என்ற குறையை நிவர்த்தி செய்யும் வகையில் முள்ளியவளைப் பகுதியில் GFATM -2016 திட்டத்தின் கீழ் சுமார் 3 கோடியே 30 லட்சம் ரூபா செலவில் புதிதாக அமைக் கப்பட்ட பிராந்திய மருந்து வழங்கல் பிரிவுக் கட்டடத்தைத் திறந்து வைத்து உங்கள் முன் உரை யாற்றுவதில் மகிழ்வடைகின்றேன்.

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள 01 பொது வைத்தியசாலை, மூன்று ஆதார வைத்தியசாலைகள், ஏழு பிரதேச வைத்தியசாலைகள், நான்கு ஆரம்ப சுகாதார கவனிப்பு பிரிவுகள் மற்றும் பிராந்திய சுகாதார அதிகாரி பணிமனை ஆகியவற்றிற்கான மருந்துகள், ஊசி மருந் துகள் மற்றும் இன்னோரன்ன மருந்து வகைகளை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைகளின் தேவைகளுக்கேற்ப தொகையாகப் பெற்று அவற்றை களஞ்சியப்படுத்தி அந்தந்த மருத்துவமனைகளுக்கு தேவைக்கேற்ப விநியோகிக்கின்ற ஒரு நிலையமாக இந்த நிலையம் அமைந்திருப்பது மகிழ்விற்குரியது.

இந்த நிலையத்தில் மருந்துகளை களஞ்சியப்படுத் துவதற்கு ஏற்ற வகையில் குளிரூட்டப்பட்ட ஒரு விசேட அறையும் அமைக்கப்பட்டுள்ளதால் இந்த மருந்துகள் கெட்டுப்போகாமல் பாதுகாப்பாக களஞ்சியப்படுத்துவதற்கு ஏற்ற வகையில் இந்த அறை அமைக்கப்பட்டுள்ளது.

**10 பேரின் கண்கள் கெட்டுப் போன நிகழ்வு**

அண்மையில் கண்சத்திர சிகிச்சையை புரிவதற் காக யாழ்ப்பாணத்தில் தனியார் மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்ட சுமார் 10 பேரின் கண்கள் கெட்டுப்போன மருந்துகளைப் பாவித்த காரணத்தால் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ பாதிப்பிற்கு உள்ளானமை பற்றி வெளிவந்த செய்திகளை அவதானித்திருப்பீர்கள். அது போன்று பிழையான மருந்துப் பாவனைகள் காரணமாக பல இன்னுயிர்கள் இழக்கப்படுவதும் வேதனையுடன் நோக்கற்பாலது.

எனவே மருந்துகள் வழங்கல் பிரிவில் கடமையாற்றுகின்ற பிராந்திய மருந்தாளர் தொடக்கம் அனைத்து உத்தியோகத்தர்கள், ஊழியர்களும் விநியோகிக்கப்படும் மருந்துகள் குறித்து மிக விழிப்பாக இருத்தல் அவசியமாகும். மருந்துகள் கிடைக்கப்பெறும் போது தருகைப்பட்டியலில் குறிக்கப்பட்டுள்ளவாறு சரியான மருந்துகள் குறிப்பிடப்பட்ட கம்பனிகளால் தரப்பட்டுள்ளனவா என்பதனை அவதானிப்பதுடன் அவற்றின் காலாவதித் தினம் பற்றியும் மிகக் கூடிய கவனம் செலுத்து தல் வேண்டும்.

# எம் இன மருத்துவர்கள் இங்கு பணிபுரிய ஏனோ தயக்கம்

அதே போன்று வழங்கப்பட்ட இந்த மருந்து வகைகள் நோயாளர்களுக்கு வழங்கப்படுவதற்கு முன்பதாக அவற்றின் தரம் மற்றும் கலாவதித்திகதி போன்றவை அவதானிக்கப்படுவதுடன் மருத்துவர்களின் சிபாரிசுகளுக்கேற்பவே வழங்கப்படுதல் வேண்டும்.

**எமது இன மருத்துவர்களின் விரும்பமின்மையால்...**

மருத்துவ சேவை என்பது இறைவனுக்கு அடுத்த படியாக மக்களால் போற்றப்படுகின்ற ஒரு சேவையாகும். எனவே மருத்துவ சேவையில் பணியாற்றுகின்ற மருத்துவர்கள் மட்டுமல்லாது அந்த சேவையுடன் இணைந்த அனைத்துத் தர உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயலாற்றப் பழகிக்கொள்ள வேண்டும். உங்கள் கவனமின்மை, சிரத்தையின்மை உயிர்களைக் காவிச் செல்ல வல்லன என்பதை மறக்காதீர்கள்.

தற்போது பின்தங்கிய பகுதிகளிலும் மருத்துவமனைகள் புதிதாக அமைக் கப்பட்டு மருத்துவ சேவைகளுக்காக திறந்து வைக்கப்பட்டு வருகின்றன. எனினும் இம் மருத்துவமனைகளில் கடமை புரிவதற்கு மருத்துவர்கள் இல்லாத குறை தொடர்ந்த வண்ணம் உள்ளது. எமது இன மருத்துவர்களின் விருப்பமின்மையால் அல்லது வேறு காரணங்களினால் தென்பகுதியிலிருந்து மருத்துவ சகோதர சகோதரிகள் இப்பகுதிகளில் கடமையாற்றுவதற்காக அனுப்பி வைக்கப்படுகின்றார்கள். அந்த மருத் துவர்கள் எங்கள் கிராமப் புறவைத்தியசாலைகளில் நியமிக்கப் படுகின்றபோது எமது கிராமத்து மக்களின் தமிழ்மொழி அவர்களுக்குப் புரிவதில்லை. அதேபோன்று அம் மருத்துவர் களின் தாய் மொழி எமது மக்களுக்குப் புரிவதில்லை. அதனால் முழுமையான மருத்துவ சேவைகளை வழங்க முடியாது சிரமப்படுவது பல சந்தர்ப்பங்களில் உணரப்பட்டுள்ளது.

**மொழிப் பிரச்சினையால் நோயாளர் படும்பாடு**

சில காலங்களுக்கு முன்பு ஒரு மருத்துவ மனையில் கடமைக்கு அனுப்பப்பட்ட நான்கு மருத்துவர்களும் புதிதாக இணைந்து கொண்ட தென்பகுதியைச் சேர்ந்த மருத்துவர்கள். அவர்களுக்கு தமிழ் ஒரு சொல் கூடத் தெரியாதிருந்தது. அவர்கள் கடமையாற்றிய மருத்துவ மனையோ மிகவும் பின் தங்கிய பகுதி. ஆனால் அந்த மருத்துவமனைக்கு ஒரு நோயாளர் காவு வண்டி வழங்கப்பட்டிருந்தது. அந்த மருத்துவர்கள் புதிய ஒரு யுக்தியைக் கையாண்டார்கள். எந்த நோயாளியாக இருந்தாலென்ன, காய்ச்சல் என்றாலும் சரி, வயிற்று நோவு என்றாலும் சரி, கைகால்களில் நோவு என்றாலும் சரி மருந்தெடுக்க வந்தவுடன் ஆஸ்பத்திரி நோயாளர் விடுதியில் மறித்து விடுவார்கள். இப்படி நான்கு பேர் சேர்ந்தவுடன் நோயாளர் காவு வண்டி மூலமாக மாவட்ட வைத்திய சாலைக்கு அனுப்பி விடுவார்கள்.

அங்கு இருந்த வைத்தியர்கள் சிரித்து விட்டு அவர்களுக்குரிய மருந்துகளை கொடுத்துதிரும்பவும் அதே காவு வண்டியில் திருப்பி அனுப்பி விடுவார்கள். இவ்வாறே மருத்துவர்கள் நிலைமையைச் சமாளித்தார்கள். இது யாரையும் குறைகூறவோ அல்லது எள்ளி நகையாடுவதற்காகவோ இங்கு தெரிவிக்கவில்லை. மாறாக மொழித்தேர்ச்சி இன்மையால் ஏற்படக்கூடிய சிரமங்கள் பற்றி எடுத்துக் கூறுவதற்காகவே இதனை குறிப்பிடுகின்றேன். – என்றார் முதலமைச்சர்.

(இ)




HND BUSINESS MANAGEMENT MARKETING | HRM — Leading to BA (Hons) from the UK Universities
HND QUANTITY SURVEYING — Leading to BSc (Hons) from the UK Universities
HND COMPUTING — Leading to BSc (Hons) from the UK Universities
UGC Recognized TVEC Approved
HND BIOMEDICAL SCIENCE BIOTECHNOLOGY — Leading to BSc (Hons) from the UK Universities
HND CIVIL ENGINEERING — Leading to BEng / BSc (Hons) from the UK Universities
LLB LAW — Leading to LLB (Hons) from the UK Universities

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

பதிவுகள் இப்பொழுது ஆரம்பம்
Sanchu 0777 102 131
Ragavan 0777 692 318
BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna

Platinum Partner No.1 BTEC Centre in Sri Lanka 2016
Best Employer Brand Award 2017
Asia's Training Excellence Award 2017

Mount Campus
54, Galle Road, Mt. Lavinia.
T : 011 272 8082

Kandy Campus
344, Peradeniya Road, Kandy.
T : 081 222 4731

Kalmunai Campus
392/1, Main Street, Kalmunai.
T : 067 222 6899

Corporate Office
32, Dharmarama Road, Colombo 6. T : 0112597217

021 221 9910 | 011 259 7217 | info@bcas.lk | www.bcas.lk

தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. 'உன்னைச் சரணடைந்தேன்' என்ற அவரது தொகுப்பில் 'யாழில் கம்பன்' பற்றிய தொடர் பதிவு இது.



## நல்லதோர் வீணை செய்து

(மறைந்த நாடக நடிகர் அருமைநாயகம் பற்றிச் சில எண்ண அலைகள்)

1980 ஆம் ஆண்டு கம்பன் கழகத்தை அப்போது தான் ஆரம்பித்திருந்தோம். எப்படியேனும், கழகத்தை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்த வேண்டும் எனும் விருப்பு, எம் மனதில் கூர்மையுற்றிருந்தது. யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகில், ஒரு வீட்டின் மேல் மாடியில், எங்கள் ஆசிரியர் வித்துவான் வேலன் குடியிருந்தார். இளைஞர்களின் எண்ணங்களை வளர்த்து, இலட்சியப் படுத்துவதில் விற்பன்னர் அவர். மாலையானால் நானும், நண்பன் குமாரதாசனும் அவர்களது மொட்டை மாடியில் தவறாது ஒன்று கூடுவோம்.

அன்றாடம் அவரைச் சந்திப்பது எங்கள் வழமையாகி இருந்தது. அறிவுப் பசியை அவர் தீர்ப்பார். வயிற்றுப் பசியை அவர் துணைவியார் தீர்ப்பார். அப்படி ஒரு நாள் நாம் பேசிக் கொண்டிருக்கிறோம். கம்பன் விழாவில் ஒரு நாடகம் போட்டால் என்ன? நாம் சிந்தித்துக் கொண்டிருந்த பொழுதே, அருமைநாயகம் அங்கு வந்து சேர்ந்தார்.

★ ★ ★

பரட்டைத் தலை. வீங்கிய கண்கள். அழுக்கான உடை. இது அவரது தோற்றம். இராமாயணக் குகனை நினைவுபடுத்தினார். அவரைக் கண்டதும் வேலன் மாஸ்டர் முகத்தில் ஆனந்தம். 'வா, வா அருமைநாயகம் நாடகத்தைப் பற்றி நினைக்க, நீ வருகிறாய். கம்பன் கழகத்துக்கு ஒரு நாடகம் போட வேணும் நீ தான் அதைச் செய்ய வேணும். என்ன சொல்லுறாய்?' என்றார் அவர். நாடகம் என்ற வார்த்தை கேட்டதுமே, அருமைநாயகத்தின் முகத்தில், ஆயிரம் இதழ் கொண்ட தாமரை மலர்ந்தது.

ஆனந்தமாய் சிரித்தபடி அப்போதே நாடக வேலைகளைத் தொடங்குபவர் போல் அமர்கிறார். '' என்ன நாடகம்? இராமாயணத்தில் எந்தப் பகுதி? எவ் வளவு நேரம்? எவ்வளவு காசு செலவழிப்பீங்கள்?'' அருமைநாயகத்திடம் இருந்து கேள்விக்கணைகள் பாய்கின்றன.

★ ★ ★

எங்கள் கையில் பணம் இருக்காத காலமது. கடைசிக் கேள்வி கலவரப்படுத்தியது. பணம் இருந்தால்தானே எவ்வளவு பணம் செலவழிக்கலாம் என்பது பற்றிச் சொல்ல. எங்கள் நிலை உணர்ந்த ஆசிரியர் குறுக்கிடுகிறார். 'அருமை நாயகம், காசு கனக்கச் செலவழிக்க முடியாது. நல்ல நாடகம் ஒன்று செய்ய வேணும் அவ்வளவுதான்.'' அவர் இதைச் சொன்னதும் அருமைநாயகத்தின் முகம் கறுக்கிறது. எங்கள் நிலையை ஆசிரியர் வெளிப்படுத்தியதில் எங்களுக்கு ஆனந்தம்.

அருமைநாயகத்தின் முடிவை அறிய ஆவலாய்ப் பார்க்கிறோம். கொஞ்ச நேரம் யோசித்துவிட்டு, ஆசிரியரைப் பார்த்து அருமைநாயகம் பேசத் தொடங்குகிறார். ''சேர், பேசாம நாடகத்தை விட்டிட்டு, இராமாயணத்தை நீங்களே பேசி விடுங்கோ. அதுதான் சுகம்.'' குத்தல் கலந்த அவரது பேச்சால் சற்று அதிர்ந்து, 'ஏண்டாப்பா அப்படிச் சொல்லுகிறாய்?' என்கிறார் ஆசிரியர். அருமைநாயகம் ஆசிரியரைப் பார்த்து, ''சேர், தசரதன் அத்தாணி மண்டபத்தில் இருந்தான் என்பதை, நாடகத்தில் காட்ட வேணும் எண்டால், அத்தாணி மண்டபம் செய்ய வேணும். சிம்மாசனம் செய்ய வேணும். அரசனுக்கு முடி, நகைகள் செய்ய வேணும். அதுக்கெல்லாம் காசு வேணும். நீங்கள் தரவளி பேசுறதெண்டால், அழகிய ஓவிய மயமான அத்தாணி மண்டபத்தில், தங்கச் சிம்மாசனத்தில், நவரத்தினமுடி சூடி, தசரதன் இருந்தான் என, வாயால அடிச்சு விட்டிடுவீங்கள். அதுக்குக் காசு தேவையில்லை. நாடகத்துக்கு காசு தேவையெண்டபடியால், காசில்லாமற் செய்ய உங்கட பேச்சுத்தான் சரி.'' 'சீரியஸாய்' சொல்லிவிட்டு, அலட்சியமாய் எழுந்து போகிறார் அருமைநாயகம். ஆசிரியரும் நாங்களும் அசடுவழிகிறோம். அம் முதற் சந்திப்பிலேயே தன் கிறுக்குத்தனமான உண்மை நிறைந்த பதிலால் என் மனம் நிறைந்தார் அருமைநாயகம். எங்கள் நட்புத் தொடர்ந்தது.

★ ★ ★

கம்பன் கழகத்துக்காக ஒரு சிறு அறையை வாடகைக்கு எடுத்து கந்தர்மடத்தில் நான் குடியிருந்தேன். அருமைநாயகத்துடன் பழகிய ஆரம்ப காலம் அது. அவர் கிறிஸ்தவர் என்பது அப்போது எனக்குத் தெரியாது. நல்லூர் திருவிழா நடந்து கொண்டிருந்தது. பகற் திருவிழாவுக்கு போக நான் ஆயத்தமாகிக் கொண்டு இருக்கிறேன். தன் பழைய சைக்கிளில் வந்து இறங்குகிறார் அருமைநாயகம். அவர் சைவர் என்று நினைத்து, 'அண்ணை கோயிலுக்குப் போவம் வாறீங்களே?' என நான் கேட்க, கொஞ்சம் யோசித்து விட்டு ''அதுக்கென்ன நான் வேட்டி உடுத்துக் கொண்டு வரயில்லை. என்ன செய்வம்?'' என்கிறார். நான் வேட்டி கொடுக்க வாங்கிச் சந்தோசமாய் உடுக்கிறார். 'கோயிலுக்குப் போக விபூதி பூசேலையோ?' - நான் கேட்க விபூதி வாங்கி நெற்றி நிறையப் பூசுகிறார். இரண்டு பேருமாய் நல்லூர் போகிறோம்.

★ ★ ★

நல்லூர் முருகனைக் கண்டு உருகி வணங்கும் அருமைநாயகத்தைக் கண்டு ஆச்சரியப்படுகிறேன். 'அடிக்கடி நீங்கள் கோயிலுக்குப் போகலாமே அண்ணா?' வீடு வந்ததும் நான் கேட்க, ''இடக்கிடை போறனான்'' பதில் வருகிறது. ' எந்தக் கோயிலுக்கு?' ''நவாலிச் சேர்ச்சுக்கு.'' 'என்ன, சேர்ச்சுக்கு போறனீங்களோ? சேர்ச்சுக்கு வேதக்காரர்க்கெல்லோ போறது'- என் கேள்வி இது. ''ஓம். உண்மைதான்''- இது அருமைநாயகம். 'அப்ப நீங்கள் ஏன் அங்க போறியள்?'- மீண்டும் நான். சிறிது நேர மௌனம். மௌனம் உண்மை உணர்த்தச் சற்றுக் குழப்பத்துடன், 'அப்ப நீங்கள் வேதக்காரரே?'- நான் கேட்கிறேன். ''ஓம் ஓம்'' என்கிறார் சாதாரணமாக. 'ஐயோ! அது தெரியாம உங்களைத் திருநீறு பூசிவிச்சு, கோயிலுக்குக் கூட்டிக் கொண்டு போயிட்டேன்.' என்று நான் பதற, சிரிக்கிறார் அருமைநாயகம். 'முருகனைப் பார்த்து நல்ல அழுது கும்பிட்டீங்களே அது எப்படி?' மீண்டும் நான் கேட்க, ''யேசு நாதரும் முருகனும் வேற வேறயோ?'' கேள்வியை அருமைநாயகம் பதிலாக்க, அதிர்ந்து போகிறேன் நான். எனக்குள் ஒரு ஞானக் கண் திறக்கிறது. சித்தன் போல் சிரித்து நிற்கிறார் அவர்.

**கம்பவாரிதி ஜெயராஜின் 116 இலக்கிய அனுபவப் பகிர்வு**

★ ★ ★

ஆண்டு ஞாபகம் இல்லை. மறைந்த கவிஞர் அரியாலையூர் ஐயாத்துரை, பாரிசவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தார். எங்கள் கழகத்துடன் தொடர்பு பட்டிருந்த அவரின் உடல் நலம் வேண்டி, அரியாலையில் அவர் அமைத்திருந்த சரஸ்வதி கோயிலில், ஒரு பிரார்த்தனைக் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தோம். அக் கூட்டத்துக்கு அருமைநாயகமும் வந்திருந்தார். வழமையை விடச் சற்று அதிகமான அழுக்கு உடை. கழுவாத முகம். மற்றவர்கள் சற்று அருவருக்கும் படியான தோற்றத்தோடு அவர் வர, எனக்குக் கோபம் வந்தது. சத்தம் போடத் தொடங்கினேன். 'ஏன் இப்படி உலகத்தை நிராகரிச்சுத் திரியிறீங்கள்? இப்படிக் குப்பையாய்த் திரிஞ்சால் ஆர் உங்களை மதிக்கப் போயினம்? வேணும் எண்டு மற்றவை பகிடி பண்ணுற மாதிரி ஏன் நடக்கிறீங்கள்?' நான் கோபிக்க, எந்தவிதமான தாக்கமும் இன்றிச் சிரிக்கிறார். 'சிரிக்கிறதை விட்டிட்டுப் பதில் சொல்லுங்கோ?'- நான் கேட்க, '' வேணும் எண்டுதான் நான் அப்படிச் செய்யிறன்'' பதில் பிறக்கிறது. அலட்சியமான பதிலால் என் கோபம் அதிகரிக்க, முறைக்கிறேன் நான்.

★ ★ ★

தொடர்கிறார் அருமைநாயகம். ''தம்பீ, ஒரு நாடகத்தில நடிக்க வருகிறவன், டைரக்ரர் தந்த வேஷத்தை வடிவாய்ச் செய்ய வேணும். டைரக்ரர் பிச்சைக்கார வேஷம் தந்தால், சரியாயப் பிச்சைக்காரன் போல இருந்து நடிக்கவேணும். கதாநாயகன் நல்ல உடுப்புப் போட்டிருக்கிறான். வடிவாய் இருக்கிறான். என்னையும் அப்படி நடிக்க விடு என்று கேட்டால், டைரக்ரருக்கு கோபம் தான் வரும். அடுத்த நாடகத்தில அதவிட மோசமான பாத்திரம் தான் தருவான். நான் சொல்லுறது உண்மையோ? பொய்யோ?'' என்னைக் கேட்க, 'உண்மை தான்'என்று நான் ஒத்துக் கொள்கிறேன்.

தம்பீ, இந்தப் பிறவி என்ற நாடகத்தில, கடவுள் என்ற டைரக்ரர் எனக்குப் பிச்சைக்கார வேஷம் தான் தந்திருக்கிறார். அந்த வேசத்தை வடிவாய்ச் செய்வமெண்டுதான், பிச்சைக்காரன் போலவே திரியிறன். அப்பதான் கடவுள் அடுத்த நாடகத்தில நல்ல வேஷமாய்த் தருவார். பிச்சைக்கார வேசம் தந்த இந்த நாடகத்தில கதாநாயகன் மாதிரி நான் நடிக்க வெளிக்கிட்டால், அடுத்த பிறவி என்ற நாடகத்தில, இதை விட மோசமான பாத்திரம் தான் எனக்குக் கிடைக்கும். அதனால தான் வேணும் எண்டு இப்பிடித் திரியிறன்.' என்று சொன்னதோடு நில்லாது பாரிச வாதத்தால் பாதிக்கப்பட்டு பக்கத்தில் படுத்திருந்த கவிஞரைப் பார்த்து, 'உங்களுக்கு இப்ப நோயாளி வேஷம். நீங்களும் இதை வடிவாய் நடியுங்கோ. உங்களுக்கும் பிறமோஷன் கெதியில கிடைக்கும்.' என்று சொல்ல, பக்கத்தில் நின்றவர்கள் யார் இந்தப் பைத்தியக்காரன்? என்பது போல் அவரைப் பார்க்கின்றனர். தான் மூழ்கிய நாடகத்தாலேயே ஆண்டவனை விளங்கி, தன் விதியை ஏற்று நிற்கும் அவர் தெளிவு கண்டு, நானோ ஆச்சரியப்பட்டுப் போனேன்.

★ ★ ★



# உன்னைச் சரணடைந்தேன்

(தொடரும்...)

# உள்நாட்டு கைத்தொழில் துறையில் தாக்கம் ஏற்படுத்தும் வெளிநாட்டு முதலீடுகளுக்கு இடமளிக்க முடியாது

## ஜனாதிபதி மைத்திரி வலியுறுத்தல்



கொழும்பு, மார்ச் 07

உள்நாட்டு கைத்தொழில் துறையில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய வெளிநாட்டு முதலீடுகளுக்கு இடமளிக்க முடியாது என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வலியுறுத்தினார்.

தேசிய கைத்தொழில் துறையில் எதிர்கால நடவடிக்கைகளில் தாக்கம் செலுத்தும் பிரச்சினைகள் தொடர்பாக நேற்றுமுன்தினம் முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய கைத்தொழில் துறையினர் பலரும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

இங்கு ஜனாதிபதி மைத்திரி மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்நாட்டு வர்த்தகம் மற்றும் தேசிய கைத்தொழில் துறை பலமடையும்போதே நாட்டில் சரியானதொரு பொருளாதாரக் கொள்கை கட்டியெழுப்பப்படும். தேசிய கைத்தொழிலை பாதுகாப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்கள் எடுக்கப்படும்.

அத்துடன், பொதுமக்களுக்கு சலுகைகள் வழங்கும்போது தேசிய கைத்தொழில்களை பலப்படுத்துதல் அவசியமாகும்.

வெளிநாட்டு சில்லறை வர்த்தக நிலைய வலையமைப்பிற்கு இலங்கையில் வர்த்தக நடவடிக்கைளில் ஈடுபட அனுமதியளிப்பதனால் உள்நாட்டு வியாபாரிகளுக்கு ஏற்பட்டுள்ள சவால்கள் தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டதுடன் தேசிய கைத்தொழில்களுக்கு சவால்களை ஏற்படுத்தக்கூடிய எந்தவொரு வெளிநாட்டு கைத்தொழிலுக்கும் இடமளிக்கக் கூடாது.

அதிகரித்த வங்கி வட்டி வீதத்தினால் தேசியக் கைத்தொழில்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட்டதுடன் அரச வங்கிகளினூடாக சலுகை வழங்கும் வேலைத் திட்டம் ஒன்றை எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவது தொடர்பாக தற்போது கலந்துரையாடல் இடம்பெற்று வருகிறது.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதில் அரச துறையின் பங்களிப்பினை போன்றே தனியார் துறையினரின் பங்களிப்பும் அத்தியாவசியமாகும்.

அதேபோல தேசிய கைத்தொழிலாளர்களினால் முன்வைக்கப்பட்ட சகல பிரச்சினைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தி அவற்றிற்கு பெற்றுக் கொடுக்கக் கூடிய தீர்வுகளை கண்டறிவதற்கு அது தொடர்பான சகல அரச நிறுவ னங்களினதும் பிரதிநிதிகளை யும் தேசிய வர்த்தகர்களையும் உள் ளடக்கிய குழுவொன்றினை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தேசிய கைத்தொழில்களை பாதுகாத்து அவற்றின் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ளப்பட வேண்டிய தீர்மானங்கள் குறித்து இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன் உள்நாட்டு பால்மா உற்பத்தி, தேசிய பிஸ்கட் உற்பத்தி மற்றும் வாகன உற்பத்தியை மேம்படுத்துவதற்கு பின்பற் றப்பட வேண்டிய முறைமைகள் தொடர்பாகவும் இதன்போது கவனம் செலுத்தப்பட் டது.

அத்துடன், தேசிய ஆயுள்வேத மருத்துவத்துறையில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மற்றும் அதன் முன்னேற்றத்திற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான மலிக் சமரவிக்கிரம, ரிஷாத் பதியுதீன், லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோரும் சட்டமா அதிபர் ஜயந்த ஜயசூரிய, நிதியமைச்சின் செயலாளர் கலாநிதி ஆர்.எச். எஸ்.சமரதுங்க, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித் குமாரசுவாமி, கைத்தொழில் வாணிப அலுவல்கள் அமைச்சின் செயலாளர் கே.டி.என்.ரஞ்சித் அசோக, அபிவிருத்தி உபாய மார்க்கங்கள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளர் சாந்தனி விஜேயவர்தன. அரச தொழில் முயற்சிகள் அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரவீந்திர ஹேவாவிதாரண உள்ளிட்ட அதிகாரிகள் பங்குபற்றினர்.

(கு)

## அதிபர்களுக்கு மேலதிகமாக முகாமையாளரும் நியமனம்



கொழும்பு, மார்ச் 07

ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளின் நிர்வாகப் பொறுப்புக்கள் பாடசாலை முகாமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட உள்ளன என கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் குருநாகல் மலியதேவ ஆண்கள் பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கல்வி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் முகாமையாளர் மற்றும் உதவி முகாமையாளர் என்ற இரண்டு பதவிகள் புதிதாக உருவாக்கப்படும்.

இந்த முகாமையாளர்கள் பாடசாலை நிர்வாகப் பணிகளில் நேரடியாகவே பங்களிப்பைச் செய்ய உள்ளனர்.

பாடசாலையின் பிரதானி என்ற வகையில் அதிபர், கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளித்து செயற்படுவார்.

குறிப்பிட்ட முகாமையாளர் பதவிகள் தொடர்பான யோசனைகள், அனுமதிக்காக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

## வெலிக்கடை சிறைக் கலவரம்: சாட்சியின் ரிட் மனு தள்ளுபடி

கொழும்பு, மார்ச் 07

வெலிக்கடை சிறைச்சா லைக்குள் கடந்த 2012 ஆம் ஆண்டு இடம்பெற்ற கலவரம் மற்றும் அதன்போது கொலை செய்யப்பட்ட 27 கைதிகள் தொடர்பிலான விசாரணைகள் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனக் கூறப்படும் நிலையில், அது தொடர்பில் விசாரணை செய்யக் கோரும் ரிட் மனுவை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தள்ளுபடி செய்தது.

வெலிக்கடை கலவரத்தின் பிரதான சாட்சியாளர் ஒருவரினால் தாக்கல் செய்யப்பட்ட மனுவே, தற்போது விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைக் காரணமாக கொண்டு, மேன்முறையீட்டு நீதிமன்ற தலைமை நீதிபதி ப்ரித்தி பத்மன் சுரசேன, சிரான் குணரத்ன ஆகியோரடங்கிய நீதிபதிகளால் தள்ளுபடி செய்யப்பட்டது.



கடந்த 2012 நவம்பர் மாதம் வெலிக்கடை சிறையில் இடம்பெற்ற கலவரம் மற்றும் அதில் கொல்லப்பட்ட 27 பேர் தொடர்பில் விவரமான விசாரணை ஒன்றினை முன்னெடுக்க பொலிஸ்மா அதிபருக்கும் குற்றப் புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளருக்கும் உத்தரவிடக் கோரும் ரிட் மனு நேற்று விசாரணைக்கு வந்த போதே, அம்மனு இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்டது.

நேற்றைய விசாரணைகளின் போது மன்றில் பிரசன்னமாகியிருந்த சிரேஷ்ட அரச சட் டவாதி மாதவ தென்னக்கோன், இந்த விவகாரத்தில் தற்போதும் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில் இந்த மனுவை முன்கொண்டு செல்லவேண்டிய தேவை இல்லை என்றார்.

இதனை ஆராய்ந்த மேன் முறையீட்டு நீதிமன்றம் அந்த வழக்கை தள்ளுபடி செய்தது.

## இடியுடன் கூடிய மழை பெய்யும் வளிமண்டலவியல் திணைக்களம்

கொழும்பு, மார்ச் 07

நாட்டின் சப்ரகமுவ மாகாணம் மற்றும் களுத்துறை, காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் பிற்பகல் 2.00 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஏனைய பகுதிகளில் சீரான காலநிலை நிலவும். நாட்டின் சில பகுதிகளில் காலைவேளையில் பனி மூட்டம் நிலவக்கூடும்.

அம்பாந்தோட்டையிலிருந்து காலி ஊடாக கொழும்பு வரையிலான கடற்கரையோர பிரதேசங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்.

இடியுடன் கூடிய மழையின் போது தற்காலிகமாக காற்று வீசக்கூடும். இடிமின்னலிலிருந்து பொதுமக்கள் அவதானமாக செயற்படுமாறு திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது.

04. A யிற்கும் B யிற்கும் பதிலாக மிகப் பொருத்தமான சொற்சோடியை தெரிவு செய்க.

1. பேனை, எழுத்து, ...A...
2. விதை, முளை, மரம்
3. நூல், ...B... , ஆடை

1. புத்தகம், பந்து  2. புத்தகம், துணி  3. விதை, துணி

05. வெற்றிடத்தில் வரவேண்டிய சொல்


கண் - காட்சி
காது - ஓசை
மூக்கு - ..............................


1. கடித்தல்  2. வாசனை  3. பார்த்தல்

06. நாளை மறுதினம் பாடசாலைக்கு வரும் போது சிறிய கதைகள், பாடல்கள், நகைச்சுவைத் துணுக்குகள் ஆகியவற்றைக் கொண்டு வாருங்கள் இக் கூற்று

1. அறிவுறுத்தல்  2. அறிவித்தல்  3. அறிவுரை

✧ 7 ஆம், 8 ஆம் வினாக்களில் அடுத்து வர வேண்டிய உருவைத் தெரிவு செய்க.

07.


08.


✧ ஆங்கில எழுத்துக்களுக்கு எதிரே இடப்பட்டுள்ள சொற்களுக்கேற்ப 9 ஆம், 10 ஆம் வினாக்களுக்குச் சரியான வாக்கியம் அமையும் ஆங்கில எழுத்து வரிசையைத் தெரிவு செய்க.

09.
A - முகவரி எழுதுதல்
B - தபாலகம் செல்லல்
C - கடதாசி எடுத்தல்
D - கடிதம் எழுதுதல்
E - பெட்டியில் இடுதல்

1. ADCBE  2. BCDAE  3. CDABE

10.
A - காலை ஆறு மணிக்கு
B - புத்தகப் பையை
C - பள்ளிக்குச் சென்றான்
D - எழுந்து தன்
E - தோளில் மாட்டிக் கொண்டு
F - கண்ணன்
G - காலைக் கடன்களை முடித்து

1. FADGBCE  2. FADGCEB  3. FADGBEC





21.


இக் குறியீடு குறிப்பது

1. பேருந்துத் தரிப்பிடம்.  2. வாகனம் நிறுத்துமிடம்.
3. நிறுத்துக.  4. பாரவூர்தி நிறுத்துமிடம்.

22. பலகையொன்றை மட்டமாகச் சீவுவதற்குப் பொருத்தமான உபகரணம்.

1. வாள்  2. உளி  3. சீவுளி  4. துறப்பணம்

23. உடல் வளர்ச்சிக்குப் பயன்படாத உணவு

1. இறைச்சி  2. கத்தரி  3. பால்  4. முட்டை

24. அண்மைக்காலத்தில் களனி கங்கையின் பெருக்கெடுப்பால் அதிகம் பாதிக்கப்பட்ட மாகாணம் எது?

1. வடக்கு மாகாணம்  2. மேல் மாகாணம்  3. வடமத்திய மாகாணம்  4. கிழக்கு மாகாணம்

25. இவ்வாண்டு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டையிலுள்ள இலக்கங்களின் எண்ணிக்கை.

1. 11  2. 10  3. 12  4. 15

26. எல்லே விளையாட்டின் ஓர் அணியில் விளையாடும் வீரர்களின் ஆகக் குறைந்த எண்ணிக்கை.

1. 10  2. 16  3. 07  4. 12

27. "சிலோன் நசனல் ரிவீவ்" (Ceylon National Review) எனும் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர்

1. ஆனந்த சமரக்கோன்  2. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி
3. வண.எஸ்.மஹிந்த  4. சேர்.டீ.பி.ஜயதிலக்க

28. கலாவாவியைக் கட்டுவித்த அரசன்

1. தாதுசேனன்  2. மகாசேனன்  3. பண்டுகாபயன்  4. பராக்கிரமபாகு

29. "ஏலந்தண்டு ராமனாதா ............ எவ்வகைப் பாடலாகும்?

1. அரிவி வெட்டும் பாடல்  2. தோணிப் பாடல்
3. மலையகப் பாடல்  4. கும்மிப் பாடல்

30.



இவ்வுபகரணம் எதனுடைய மாதிரி?

1. ஒளிச்சமிக்ஞை  2. மின்மானி
3. மின்சுருள்  4. மின்காந்தம்

31. பழைய கற்பாலம் அமைந்துள்ள மாவட்டம்
1. அநுராதபுரம் 2. பொலன்னறுவை 3. கண்டி 4. காலி

32. கத்தியொன்றைப் பரிமாறும் போது கொடுப்பவர் பிடிக்க வேண்டிய கத்தியின் பகுதி
1. முனைப்பகுதி 2. பிடிப்பகுதி 3. அடிப்பகுதி 4. நடுப்பகுதி

33. எமக்கு இலவச சேவையைத் தருகின்ற நிறுவனங்களில் ஒன்று.
1. வைத்தியசாலை 2. சதொச 3. ஒசுசல 4. மின்சார சபை

34. 
இக் குறியீடு உணர்த்தும் கருத்து.
1. மேலே பார்க்கவும் 2. நேராகச் செல்லவும்
3. இப்பக்கம் மேலே 4. கீழிருந்து மேல்

35. தொலைபேசிக் கட்டணத்தைச் செலுத்த முடியாத இடம்.
1. மக்கள் வங்கிக்கிளை 2. தபால் நிலையம்
3. சிறிலங்கா டெலிகொம் 4. பிரதேச சபை

36. பின்வரும் விளையாட்டுக்களில் கிராமிய விளையாட்டு எது?
1. கரப்பந்தாட்டம் 2. வலைப்பந்து 3. பல்லாங்குழி 4. உதைபந்து

37. முதன் முதல் அநுராதபுரத்தை தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த மன்னன்.
1. வசபன் 2. பண்டுகாபயன் 3. தேவநம்பியதீசன் 4. துட்டகைமுனு

38. திஸ்ஸ வாவியைக் கட்டுவித்த அரசன்
1. தேவநம்பியதீசன் 2. மகாசேனன் 3. பராக்கிரமபாகு 4. எல்லாளன்

39. ஜின் கங்கை கடலுடன் கலக்கும் நகரம் எது?
1. திருகோணமலை 2. மட்டக்களப்பு 3. கதிர்காமம் 4. காலி

40. 
உருவில் காணப்படும் உடுத்தொகுதியின் பெயர்
1. கார்த்திகை 2. வேட்டைக்காரன் 3. ஓராயன் 4. தேள்

41. கொல்லன் கம்மாலையில் நெருப்பை எரியச் செய்வதற்குப் பயன்படும் காற்றைப் பெற உதவும் பொருள்.
1. சுத்தியல் 2. பட்டறைக்கல் 3. துருத்தி 4. சாவணம்

42. வேரின் மூலம் தன் இனத்தைப் பெருக்கும் தாவரம்
1. கத்தரி 2. தென்னை 3. கறிவேப்பிலை 4. முருங்கை





43. “வுளு” சடங்குடன் தொடர்புடைய இனத்தவர்
1. முஸ்லிம்கள் 2. பறங்கியர் 3. தமிழர் 4. முட்டை

44. எமது உடலில் உள்ள நீர் வெளியேறும் சந்தர்ப்பம்.
1. உட்சுவாசம் 2. வெளிச்சுவாசம் 3. உறங்கும்போது 4. எழுதும்போது

45. தேசியக்கொடியின் பச்சைநிறக் கீலம் குறிப்பது.
1. தமிழர் 2. முஸ்லிம் 3. பறங்கியர் 4. சிங்களவர்

(1 x 3 = 30 புள்ளிகள்)







# கல்விக் கதிர் வெளியீடு




## புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

வினாத்தாள் 19




தரம்-5 பகுதி - I நேரம்- 45 நிமிடம்

❖ 1,2 ஆகிய வினாக்களின் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.

01. 
1. 
2. 
3. 

02. 
1. 
2. 
3. 

03. தரப்பட்டுள்ள உருக்களில் ஒன்று ஏனையவற்றிலிருந்து வேறுபட்டது. வேறுபட்ட உருவின் கீழ்க் கோடிடுக.

1. 
2. 
3. 

# அரிய வகை சுமத்ரா புலியை கொடூரமாகக் கொன்ற மக்கள்

ஜகார்த்தா,மார்ச் 07

இந்தோனேஷியாவைச் சேர்ந்த கிராம மக்கள் அரிய வகை சுமத்ரா இன புலியை கொடூரமாகக் கொன்று பொது இடத்தில் தொங்கவிட்ட சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தோனேஷியாவின்சுமத்ரா தீவில் உள்ள ஒரு கிராமத்தைச் சேர்ந்த மக்கள் கொடூரமான செயலில் ஈடுபட்டனர். அழிந்து வரும் இனமானசுமத்ராபுலியை கொன்றுள்ளனர்.



இந்த புலியானது பொது மக்களுக்கு தொந்தரவு கொடுத்தது எனக் கூறப்படுகிறது. இதனால் கோபமடைந்த மக்கள் புலி தூங்கிக்கொண்டிருக்கும் போது அதனை அடித்துகொன்று பொது இடத்தில் தொங்க விட்டுள்ளனர். பின்னர் ஒரு கூடாரத்தின் உள்ளே மறைத்து வைத்திருந்தனர். அதனை அறிந்த வனத்துறையினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை புலியின் உடலை மீட்டனர்.

இது தொடர்பாக விசாரணை செய்த அதிகாரிகள் கூறுகையில் -

புலியின் உடலில் சில பாகங்கள் திருடப்பட்டுள்ளன. அதன் தோல் மற்றும் பற்களை திருடிவிற்றுள்ளனர். தொடர்ந்து விசாரணை நடைபெற்று வருகிறது. கிராம மக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தனர்.

அழிந்து வரும் இனமான சுமத்ரா புலியானது பாதுகாக்க வேண்டிய உயிரினமாக கருதப்படுகிறது. சுமத்ரா தீவில் மொத்தம் 400-500 சுமத்ரா இன புலிகள் மட்டுமே உள்ளன. இந்த நிலையில், புலி கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவம் வன உயிரின ஆர்வலர்கள் இடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# தென்கொரியத் தூதருடன் கிம் ஜாங் உன் ஆலோசனை




சியோல்,மார்ச்07

இரு நாடுகளுக்கு இடையேயான பதற்றத்தை தணிப்பது தொடர்பாக தென் கொரிய தூதருடன் கிம் ஜாங் உன் ஆலோசனை நடத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரியப் போருக்குப் பிறகு வட - தென் கொரிய நாடுகளிடையே கடுமையான பதற்றம் நிலவி வருகிறது. சர்வதேச நாடுகளின் எதிர்ப்பையும் மீறி வட கொரியா ஏவுகணைச் சோதனைகளையும், அணு குண்டு சோதனைகளையும் தொடர்ந்து நடத்தி வருகின்றமையால் கொரிய தீபகற்பத்தில் கடும் போர்ப் பதற்றம் நிலவி வந்தது

இந்த நிலையில், தென் கொரியாவில் நடைபெறும் குளிர்கால ஒலிம்பிக்கில் தங்கள் நாட்டு வீரர்களை அனுப்புவது தொடர்பான பேச்சு நடத்தத் தயாராக உள்ளேன் என வட கொரிய அதிபர் கிம் ஜாங் உன் இந்த ஆண்டின் தொடக்கத்தில் அறிவித்தார். அந்தப் போட்டியின் தொடக்க விழாவில் பங்கேற்பதற்காக வட கொரிய அதிபர் கிம் ஜாங்-உன்னின் இளைய சகோதரி ஜிம் யோ-ஜாங் தென் கொரியா சென்றிருந்தார்.

மேலும், நேரடிப் பேச்சுக்கு வரும்படி தென் கொரிய அதிபருக்கு கிம் ஜாங்-உன் கடிதம் மூலம் அழைப்பு விடுத்திருந்தார். இந்தச் சூழலில், வட கொரியாவின் அணு ஆயுத திட்டத்தைக் கைவிடுவது உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக பேச்சு நடத்துவதற்காக நல்லெண்ணத் தூதுக் குழுவை வட கொரியாவுக்குத் தென்கொரிய அதிபர் மூன் ஜே-இன் அனுப்பினார்.

வடகொரியாவுக்கு வந்த தென்கொரிய குழு, வடகொரிய அதிபர் கிம் ஜாங் உன்னை சந்தித்து பேசியமை. இந்தச் சந்திப் பின்போது இருநாடுகளுக்கு இடையேயான பதற்றத்தை தணிப்பது தொடர்பாக ஆலோசனை நடத்தப்பட்டன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிரியாவில் அரசு படைகள் மூர்க்கம்:

# ஓயாத வான் தாக்குதலில் மேலும் 45 பேர் சாவு!

டமாஸ்கஸ்,மார்ச் 07

சிரியாவில் இடைக்கால போர்நிறுத்தத்தையும் மீறிக் கிழக்கு கூட்டா பகுதியில் அரசு படையினர் நடத்திய வான்வழி தாக்குதலில் மேலும் 45 பேர் உயிரிழந்தனர்.



சிரியாவில் அதிபர் பஷர் அல் ஆசாத் ஆட்சிக்கு எதிராக பல்வேறு கிளர்ச்சி குழுவினர் ஆயுதம் தாங்கிய போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் நாட்டின் பல்வேறு பகுதிகளை கைப்பற்றி தங்களது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளனர்.

அந்தப் பகுதிகளை மீட்கவும், போராளிகளின் ஆயுத கிடங்குகள் மற்றும் பதுங்குமிடங்களை அழிக்கவும் ரஷ்ய நாட்டுப் படைகளின் துணையுடன் சிரிய இராணுவம் ஆவேசத் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இதற்கிடையில், உள்நாட்டுப் போர் உச்சகட்டத்தை எட்டியுள்ள சிரியாவில் காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 2 மணிவரை ஒரு மாதத்துக்கு இடைக்கால போர்நிறுத்தம் செய்யும் சமரசத்தை ரஷ்யா உருவாக்கித் தந்தது. இந்தப் போர்நிறுத்த நேரம் தவிர மற்ற வேளைகளில் இருதரப்பினரும் சரமாரியான



தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், கிழக்கு கவுட்டா பகுதியில் போராளிகளின் பிடியில் உள்ள பகுதிகளை மீட்பதற்காக கடந்த இருநாள்களாக அரசுப் படைகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. அந்த வகையில் கிழக்கு கவுட்டா பகுதியில் சிரிய அரசு நடத்திய வான்வழி தாக்குதலில் சுமார் 45 அப்பாவி பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர் என சிரியா மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

மேலும் பலர் இந்த தாக்குதலில் படுகாயம் அடைந்துள்ளமையால் பலி எண்ணிக்கை உயரலாம் என அஞ்சப்படுகிறது.

முன்னதாக நேற்று முன்தினம் பின்னிரவில் இருந்து நேற்று அதிகாலை வரை ஹுமேரியயே உள்ளிட்ட பகுதிகளில் அரசு விமானப்படைகள் நடத்திய பரல் வெடிகுண்டுத் தாக்குதலில் 19 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

(பு)

# பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக துருக்கியில் அமெ. தூதரகம் மூடல்

அங்காரா,மார்ச் 07

பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக துருக்கி தலைநகர் அங்காராவில் உள்ள அமெரிக்க தூதரகம் மூடப்பட்டுள்ளது.

துருக்கி தலைநகர் அங்காராவில் அமெரிக்கத் தூதரகம் உள்ளது. இது நேற்றுமுன்தினம் பாதுகாப்பு காரணங்களுக்காக மூடப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். தூதரகம் மீது தாக்குதல் நடத்தப்படலாம் எனவும் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

அமெரிக்க மக்கள் அதிகம் கூடுவதை தவிர்க்க வேண்டும், தூதரகத்தை சுற்றியுள்ள பகுதிகள் மற்றும் சுற்றுலா தளங்களுக்கு செல்வதை தவிர்க்க வேண்டும். பாதுகாப்பாக இருக்க வேண்டும் என அமெரிக்கா அறிவுரை செய்துள்ளது. தூதரகத்திற்கு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

துருக்கியில் உள்ள அமெரிக்க தூதரகம் மற்றும் அமெரிக்கர்கள் மீது தாக்



குதல் நடத்தப்படும் என்று அமெரிக்க உளவுத்துறைக்கு வந்த தகவலின் அடிப்படையில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிரியாவில் தற்போது நடைபெற்று வரும் உக்கிரமான தாக்குதலைத் தொடர்ந்து துருக்கியில் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கர்ப்பப்பை வாய்புற்று நோயில்லாத முதல் நாடாகும் வாய்ப்பு ஆஸிக்கு

மெல்போர்ன்,மார்ச் 07

உலகம் முழுவதிலும் 2 லட்சத்து 50 ஆயிரம் பெண்கள் கர்ப்பப்பை வாய்புற்று நோயால் (cervical cancer) இறப்பதற்கான புள்ளிவிவரங்கள் தெரிவிக்கும் அதே நேரத்தில் கர்ப்பப்பை வாய்புற்று நோயில்லாத முதல் நாடாகும் வாய்ப்பு ஆஸ்திரேலியாவுக்குக் கிடைக்க இருப்பதாக வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

99 வீதம் Human Papilloma virus என்னும் வைரஸால் உருவாகும் இந்த நோய்க்கெதிராக ஆஸ்திரேலியாவில் 2007 ஆம் ஆண்டு ஆண், பெண் பிள்ளைகளுக்கும் தடுப்பூசி போடும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

இதனால் இந்நோய்த்தொற்றின் அளவு கணிசமாக குறைந்திருக்கின்றது எனப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. கடந்த பத்து ஆண்டுகளில் 18 முதல் 24 வயதுடைய ஆஸ்திரேலிய இளம்பெண்களில் இந்நோயின் விகிதம்



22.7 விகிதத்திலிருந்து 1.1 விகிதமாகக் குறைந்துள்ளது.

இந்தத் தடுப்பூசித் திட்டத்திற்கு முன் ஆஸ்திரேலியாவின் இளவயதினரில் பெரும்பாலானோர் இந்நோய்த்தொற்றிற்கு ஆளாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது இந்தத் தடுப்பூசியால் கிடைத்துள்ள மாபெரும் வெற்றியினால் உலகிலேயே கர்ப்பப்பை வாய்புற்று நோயில்லாத முதல் நாடாகும் வாய்ப்பு ஆஸ்திரேலியாவுக்கு கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திரிபுராவில் லெனின் சிலையை உடைத்து தலையை வைத்து உதைபந்தாடிய பா.ஜ.க.



அகர்தலா,மார்ச் 07

திரிபுராவில் சமீபத்தில் நடைபெற்ற மாநில சட்டப்பேரவைத் தேர்தலில் பா.ஜ.க. கூட்டணி வெற்றி பெற்ற நிலையில், மாநிலத்தில் ஆங்காங்கே வன்முறைச் சம்பவங்கள் வெடித்துள்ளன. இதன் உச்சக்கட்டமாக, கம்யூனிஸ்ட் தலைவர் லெனின் சிலை ஜே.சி.பி. கொண்டு இடிக்கப்பட்ட சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தெற்கு திரிபுரா மாநிலத்திலுள்ள பெலோனியா என்ற நகரில், கல்லூரி ஒன்றுக்கு மத்தியில் கம்யூனிஸ்ட் தலைவர் லெனினின் முழு உருவச்சிலை ஒன்று அமைந்துள்ளது. 2013ஆம் ஆண்டு சட்டப்பேரவை தேர்தல்களில் இடதுசாரிகள் வெற்றி பெற்றதை யடுத்து இந்த சிலை நிறுவப்பட்டது எனக் கூறப்படுகிறது.

இடதுசாரிகளின் தேர்தல் வெற்றியைக் குறிக்கும் லெனினின் சிலையைதான் பா.ஜ.கவினர் இடித்துத் தள்ளியுள்ளனர்.

இந்த சம்பவம் நடப்பதற்கு இரு தினங்களுக்கு முன்புதான் திரிபுரா மாநில சட்டப்பேரவை தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்பட்டிருந்தன. அதில், 25 ஆண்டுகளாக திரிபுராவில் அசைக்க முடியாத கட்சியாக விளங்கிய இடதுசாரிகள், மத்தியில் ஆளும் பாஜகவிடம் தோற்றுப்போனது.

மொத்தம் உள்ள 61 தொகுதிகளில் கம்யூனிஸ்ட் வெறும் 16 தொகுதிகளையும், பா.ஜ.க. கூட்டணி 43 தொகுதிகளையும் கைப்பற்றி வெற்றி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திரிபுராவின் முதல்வராக பிப்லாப் குமார் தேப்



அகர்தலா,மார்ச் 07

திரிபுராவில் ஆட்சியமைக்க உள்ள பா.ஜ.க சார்பில் மாநிலக் கட்சியின் தலைவர் பிப்லாப் குமார் தேப் முதல்வராகவும், ஜிஷ்னு தேப் பர்மன் துணை முதல்வராகவும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

திரிபுரா சட்டசபைத் தேர்தலில் பா.ஜ.க 35 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சிய மைக்க உள்ளது. முதல்வர் யார் என்பதை தேர்வு செய்ய இன்று எம்.எல்.ஏ.க்கள் கூட்டம் நடந்தது. இக்கூட்டத்தில், மாநில பா.ஜ.க தலைவராக உள்ள பிப்லாப் குமார் தேப் முதல்வராகத் தேர்வு செய்யப்பட்டார்.

துணை முதல்வராக ஜிஷ்னு தேப் பர்மன் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இன்று அல்லது நாளை ஆளுநரைச் சந்தித்து ஆட்சியமைப்பதற்கான உரிமையை பிப்லாப் குமார் தேப் கோருவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் இருந்த பிப்லாப் குமார் தேப் டில்லியில் உடற்தகுதி பயிற்சியாளராகப் பணியாற்றி வந்தார். பின்னர், தீவிர அரசியலில் இறங்கி தற்போது மாநில முதல்வராக பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சாக்கடைக் கால்வாயில் ‘டிரக்’ கவிழ்ந்து மூழ்கி 26 பேர் பலி




குஜராத்தில் துயரம்

அகமதாபாத்,மார்ச்.07

குஜராத்தில் நேற்று திருமண நிகழ்ச்சிக்கு சென்றவர்கள் பயணம் செய்த ட்ரக் விபத்துக்குள்ளானதில் 26 பேர் உயிரிழந்தனர்.

குஜராத் மாநிலம் ராஜ்கோட்- பாவ் நகர் நெடுஞ்சாலையில் நேற்று அதி காலை ஒரு டிரக் வேகமாக சென்று கொண்டிருந்தது. பாவ்நகர் பகுதியில் சென்றபோது திடீரென டிரக் ஓட்டுநரின் கட்டுப்பாட்டை இழந்து சாக்கடைக் கால்வாயில் விழுந்தது.

இந்த விபத்தில் டிரக்கில் பயணம் செய்தவர்களில் சுமார் 26 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது. காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். மேலும் சிலரின் நிலை கவலைக்கிடமாகவுள்ளமையால் சாவு எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## குழந்தைத் திருமணம் பாதியாக குறைந்தது

### யுனிசெப் தகவல்

இந்தியாவில் குழந்தைத் திருமணம் பாதியாக குறைந்துள்ளது என யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.

உலகம் முழுவதும் ஆண்டிற்கு 12 மில்லியன் சிறுமிகளுக்கு 18 வயது நிறைவு பெறும் முன்னரே திருமணம் செய்து வைக்கப்படுகிறது. இந்தியாவில் குழந்தை திருமணங்கள் அதிகமாக நடைபெறுகின்றன. கிட்டத்தட்ட 15லட்சம் பெண்களுக்கு 18 வயதுக்கு முன்பாகவே திருமணம் நடைபெறுகிறது.

பெண்களுக்கு கல்வி மற்றும் குழந்தைத் திருமணம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்துவதன் மூலம் குழந்தைத் திருமணங்களை தடுக்கலாம். இது தொடர்பாக அரசு பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

யுனிசெப் அளித்த அறிக்கையின் அடிப்படையில், இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில் குழந்தைத் திருமணங்கள் பாதியாக குறைந்திருக்கின்றன. 47 வீதத்திலிருந்து 27 வீதமாகக் குறைந்துள்ளது. இது வரவேற்கத்தக்கதாகும். இருப்பினும் குழந்தைத் திருமணத்தை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும். 2030ஆம் ஆண்டிற்குள் குழந்தைத் திருமணங்களை முற்றிலுமாக ஒழிப்பதற்கான பணிகளை தீவிரப்படுத்த வேண்டும் என யுனிசெப் அமைப்பு தெரிவித்துள்ளது.

## ஊர்க்குருவி என்றும் பருந்தாகாது ரஜனியை விமர்சித்த அமைச்சர்

சென்னை,மார்ச் 07

நடிகர் ரஜனிகாந்த், எம்.ஜி.ஆரைப் போல மக்களுக்கு நல்ல ஆட்சி தருவேன் என்று கூறியமை தொடர்பாக மீன் வளத் துறை அமைச்சர் ஜெயக்குமார் விமர்சனம் செய்துள்ளார்.

மாணவர்கள் அரசியலுக்கு வரக்கூடாது என்று நடிகர் ரஜனி மாணவர்கள் மத்தியில் கூறி இருக்கின்றமை முரண்பாடாக உள்ளது. ரஜனி ஆங்கிலத்தைப் படிக்கச் சொல்கிறார். எம்.ஜி.ஆர். கொண்டு வந்த இந்த இயக்கத்திற்கும் இரட்டை இலைக்கும் தான் மக்கள் வாக்களிப்பார்கள்.

எவ்வளவுதான் உயர உயரப் பறந்தாலும்



குருவி குருவிதான். ஊர்க்குருவி பருந்தாகாது. அது போலத்தான் ரஜனியும். இதேபோல் நடிகர் பாக்யராஜ் கட்சி தொடங்கி என்ன ஆனார் என்பது மக்களுக்குத் தெரியும்.

மு.க.ஸ்டாலினுக்கு எப்போதுமே இந்த ஆட்சியைக் கலைப்பது பற்றிய நினைவுதான். அது ஒரு நாளும் நடக்காது. இந்த ஆட்சி 5 ஆண்டுகள் பூர்த்தி அடைந்து அடுத்த சட்டசபைத் தேர்தலிலும் அ.தி.மு.க.தான் வெற்றி பெறும் என்று தெரிவித்துள்ளார்.

(ப)

# சக்தி வாய்ந்த ராணுவ வல்லமை நாடுகள் பட்டியலில் இந்தியாவுக்கு 4ஆவது இடம்



உலகின் சக்தி வாய்ந்த இராணுவ வல்லமை கொண்ட நாடுகள் பட்டியலில் இந்திய இராணுவம் நான்காம் இடம் பிடித்துள்ளது.

லண்டனைத் தளமாகக் கொண்ட சர்வதேச நிறுவனம் நடத்திய மூலோபாய ஆய்வுகள் ஒன்று, இரு நாடுகளுக்கும் இடையே இராணுவ சமநிலையில் ஒரு முக்கிய மாற்றத்தை சுட்டிகாட்டுவதாக குறிப்பிட்டு உள்ளது.

உலகில் உள்ள 133 நாடுகளின், இராணுவத்தின் வல்லமை அடிப்படையில் குளோபல் பயர்பவர் - 2017 என்ற பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. இராணுவ வளங்கள், இயற்கை வளங்கள், தொழில் மற்றும் புவியியல் அம்சங்கள் மற்றும் மனிதசக்தி உள்ளிட்ட 50 முக்கிய அம்சங்களைக்கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த பட்டியலில், அமெரிக்கா இராணுவம் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. இரண்டாம் இடத்தில் ரஷ்யாவும், மூன்றாம் இடத்தில் சீனாவும் இடம்பிடித்துள்ளன.

இந்த நாடுகளைத் தொடர்ந்து இந்தியா நான்காம் இடத்தைப் பிடித்துள்ளது. மேலும், பிரான்ஸ், பிரிட்டன், ஜப்பான், துருக்கி, ஜேர்மனி, எகிப்து ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன. உலகளவில் பாகிஸ்தான் ராணுவம் 13ஆம் இடத்தைப் பிடித்துள்ளது.

காலைக்கதிர்
Kalaikkathir





சென்ஜோன்ஸ், மத்திய கல்லூரி அணிகளின் வீரர்களுடன் அதிபர்கள், பயிற்றுவிப்பாளர்கள்

# வடக்கின் பெரும் சமர்

## நாளை ஆரம்பம்

## ஆவலுடன் ரசிகர் கூட்டம்



வடக்கின் முன்னணிப் பாடசாலைகளான யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற் றும் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையில் இடம்பெறும் நூற்றாண்டு தாண்டிய வரலாற்றினைக் கொண்டுள்ள வடக்கின் பெரும் சமர் என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் தொடரில், 112ஆவது போட்டியானது எதிர்வரும் 8ஆம், 9ஆம் மற்றும் 10ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

கடந்த 1904ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட வடக்கின் பெரும் சமரில் இதுவரை இடம்பெற்றுள்ள 111 சமர்களில் 36 போட்டிகளில் சென்.ஜோன்ஸ் கல்லூரியும், 27 போட்டிகளில் மத்திய கல்லூரியும் வெற்றிபெற்றுள்ளன. 40 போட்டிகள் சமநிலையில் நிறைவடைந்துள்ளன. ஒரு போட்டியானது(1967) கைவிடப்பட்ட அதேவேளை, 7 போட்டிகளின் (1905, 1911-1914, 1925, 1927) முடிவுகள் கிடைக்கப்பெறவில்லை.



கடந்த வருடம் இடம்பெற்ற 111ஆவது சமரில் சென் ஜோன்ஸ் கல்லூரி அணியானது இன்னிங்ஸ் வெற்றி ஒன்றைப் பதிவுசெய்து கிண்ணத்தைத் தக்கவைத்துள்ளது. மத்திய கல்லூரி அணி இறுதியாக 2011ஆம் ஆண்டிலேயே வெற்றி ஒன்றைப் பதிவு செய்துள்ளது.

**சென். ஜோன்ஸ் கல்லூரி அணி**

இந்தப் பருவகாலத்தில் இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் போட்டித்தொடரில் பிரிவு 2 இல் ஆடிவரும் சென் ஜோன்ஸ் கல்லூரி அணி, கொழும்பு றோயல் கல்லூரி அணியுடனான வெற்றியுடன் தொடரை ஆரம்பித்திருந்தாலும் இறுதி நேரத்தில் அடைந்த பின்னடைவின் காரணமாக, தமது குழுவில் 3ஆவது இடத்தையே அவர்களால் பெற முடிந்தது.

இரண்டாவது சுற்றுப்போட்டியில் தேவபத்திராஜா அணியுடனான முதல் இன்னிங்ஸ் தோல்வி காரணமாக தொடரிலிருந்து விலகியிருக்கின்றனர். 50 ஓவர்கள் கொண்ட போட்டித்தொடரில் கட்டுனேரிய சென் செபஸ்டியன்ஸ் கல்லூரியை எதிர்கொள்ளவுள்ளனர்.

தமது பாரம்பரியமான போட்டிகளில் கல்கிசை புனித தோமையர் கல்லூரியுடனான போட்டியில் மட்டும் இன்னிங்ஸால் தோல்வியடைந்துள்ளனர். ஏனைய 6 போட்டிகளில் 5இல் இன்னிங்ஸ் வெற்றியையும், ஒன்றில் (**Out right**) வெற்றியையும் பதிவு செய்துள்ளனர்.

இக்கல்லூரி வீரர்கள் தமது இந்த பருவகாலத்தைச் சிறப்பாக ஆரம்பித்தாலும் துடுப்பாட்ட தளம்பல் காரணமாக சில போட்டிகளில்பின்னடைவைச் சந்தித் துள்ளனர். அதே வேளை, அநேக போட்டிகளில் பலம்மிக்க பந்து வீச்சானது இவர்களுக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்துள்ளது.

**யாழ் மத்திய கல்லூரி**

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் போட்டித்தொடரில் பிரிவு 3 இல் ஆடிவரும் யாழ் மத்திய கல்லூரி அணி, தமது முதலாவது சுற்றுபோட்டிக் காக தாம் சந்தித்த 6 போட்டிகளில் 5 இல் வெற்றிபெற்றுள்ளது (2 இன்னிங்ஸ் வெற்றி உள்ளடங்கலாக). ஒரேயொரு போட்டியில் மட்டும் இன்னிங்ஸால் தோல்வியைத் தழுவியுள்ளனர். தமது குழுவினுடைய சம்பியன்களாக திகழும் யாழ் மத்திய கல்லூரி அணியினர் இவ்வருடம் பிரிவு இரண் டிற்கு முன்னேறுவதிலும் தமது கவனத்தைச் செலுத்தி வருகின்றனர்.

இந்த பருவகாலத்தில் மத்திய கல்லூரி பங்கெடுத்திருக்கின்ற 5 நட்பு ரீதியிலான போட்டிகளில், ஒன்றில் வெற்றி பெற்றுள்ளதுடன், 2 போட்டிகளை சமநிலையில் நிறைவுசெய்துள்ள அதேவேளை, 2 போட்டிகள் மழை காரணமாக முடிவின்றியும் நிறைவு பெற்றுள்ளன. புற்தரை ஆடுகளத்தில் (**turf pitch**) இடம்பெற்ற கண்டி புனித அந்தோனியார் கல்லூரியுடனான போட்டியைச் சமநிலையில்நிறைவு செய்துள்ளனர்.

இரண்டாவது சுற்றுப் போட்டிகள் 50 ஓவர்கள் கொண்ட போட்டிகளாக இருப்பதால், அதற்கான தயார் படுத்தலிற்காக 3 போட்டிகளில் பங்கெடுத்திருக்கின்ற இவ்வணியினர் அவற்றில் இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளதுடன் centralites கழக அணியுடனான போட்டியில் மட்டும் தோல்வியடைந்துள்ளனர்.

பருவ காலத்தின் ஆரம்பம் முதல் தொடர்ச்சியாக துடுப்பாட்டம், பந்துவீச்சு என இரு துறைகளிலும் சமமான பெறுதியை வெளிப்படுத்தி வருகின்றனர் யாழ் மத்திய கல்லூரி அணியினர். இவ்வருடம் பெரும் சமரை மாத்திரமின்றி, பிரிவு 3 கிண்ணத்தையும் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர் மத்தியின் மைந்தர்கள்.

இரு அணிகளினதும் பந்து வீச்சு பலமான நிலையில் இருக்கின்ற அதே வேளை, துடுப்பாட்டம் தளம்பல் நிலையிலேயே இருக்கின்றது. ஒரு புறம் அனுபவ வீரர்களினை முதுகெலும்பாகக்கொண்ட அதிக எண்ணிக்கையிலான புதுமுக வீரர்களை உள்ளடக்கிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணியினரும், மறுபுறம் அதிக எண்ணிக்கையிலான இறுதிவருட வீரர்களை உள்ளடக்கி இருக்கின்ற அணியாக மத்திய கல்லூரி அணியினரும் திகழ்கின்றனர்.

இரு அணிகளினதும் பந்துவீச்சாளர்கள் சிறப்பாக செயற்படுவார்கள் என எதிர்பார்க்கலாம். அதனால், போட்டியின் போக்கைத் தீர்மானிப்பவர்களாக இரு அணிகளின் துடுப்பாட்ட வீரர்களே திகழப் போகின்றனர்.

புதுமுக வீரர்கள் அதிகளவாக காணப்படுகின்றமையால், அவர்கள் பெரும்திரளான ரசிகர்கள் மத்தியிலான போட்டியை எதிர்கொள்ளப்போகின்றவிதம் அணியின் சாதக பாதகங்களைத் தீர்மானிக்கும்.

# எந்த அணி வெல்லும் என்று சொல்ல முடியாது



இங்கிலீஷ் பிரிமியர் லீக் போட்டி போல் 20 ஓவர் போட்டியில் எந்த அணி வெற்றி பெறும் என்று சொல்ல முடியாது என இந்திய அணிக் கப்டன் ரோகித் சர்மா கூறியுள்ளார்.

இந்திய அணி கப்டன் ரோகித் சர்மா நேற்று அளித்த பேட்டியில், இலங்கை போட்டி தொடரில் வெற்றி வாய்ப்பு எங்களுக்கு அதிகமா?, இல்லையா? என்பது குறித்து நான் சிந்திக்கவில்லை.

20 ஓவர் போட்டியில் குறிப்பிட்ட நாளில் சிறப்பாக செயல்படும் எந்த அணியும் வெற்றி பெறலாம். ஒரு ஓவரில் கூட ஆட்டத்தின் போக்கு மாறலாம். இந்தப் போட்டியில் குறிப்பிட்ட நாளில் எந்த அணியும், மற்றொரு அணியை வீழ்த்த முடியும்.

இங் கிலீஷ் பிரிமியர் லீக் போட்டி போல் 20 ஓவர் போட்டியில் எந்த அணி வெற்றி பெறும் என்று சொல்ல முடியாது. அணியை வழிநடத்தும் வாய்ப்புக் கிடைத்ததை அதிர்ஷ்டமாகக் கருதுகிறேன்.

தற்போதைய போட்டி அட்டவணையை பொறுத்தவரையில் வீரர்களுக்கு போதிய ஓய்வு அளிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

அணியில் விளையாட வாய்ப்புத் கிடைக்காமல் வெளியில் இருக்கும் வீரர்களின் பலத்தை பரிசோதிக்க இந்தப் போட்டித் தொடர் நல்ல வாய்ப்பாகும் என்று தெரிவித்தார்.

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெடிகளைப் பார்த்து வியந்த ஐ.நா. சிறப்புத் தூதுவர் இளவரசர் மிரெட் ராட் செயிட் அல் ஹுசைன்,அந்தக்கண்ணிவெடிகள் தொடர்பான விளக்கத்தையும் கேட்டறிந்தார்.

மூன்று நாள் பயணம் மேற்கொண்டு இலங்கை வந்துள்ள தூதுவர் நேற்று வடக்குக்கு வருகை தந்தார். இதன்போது கண்ணிவெடியகற்றும்பணிகள் இடம்பெற்றுவரும் முகமாலை மற்றும்கிளாலிப்பகுதிகளுக்கும் அவர் சென்றார்.

அங்கு மீட்கப்பட்டதாகக் கூறப்படும் ஒரு தொகை வெடி பொருள்கள் அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றை ஐ.நா. தூதுவர் பார்வையிட்டார்.

அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த வெடிபொருள்களில் பெரும்பாலானவை புலிகளால் தயாரிக்கப்பட்டவை. ஒரு சில மட்டுமே இராணுவத்தின் வெடி பொருள்களாகும்.

இதன்போது புலிகளால் தயாரிக்கப்பட்ட வெடிபொருள்களைப் பார்த்து வியப்படைந்த தூதுவர், அவை தொடர்பாகதன் அருகில் நின்றிருந்த அமைச்சர் சுவாமிநாதன், இராணுவ அதிகாரிகள் மற்றும் கண்ணிவெடியகற்றும் பிரிவினர் ஆகியோரிடம் விளக்கங்களையும் கேட்டறிந்தார். (ஐ-7)

## அமைச்சர்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாக முக்கிய கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுக்கும் நோக்கில் இந்தக் குழு கண்டி நோக்கி விரைந்துள்ளது.

தெல்தெனிய பிரதேசத்தில் இரு குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலில் இளைஞன் ஒருவர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, கண்டி மாவட்டத்தின்பலபகுதிகளில்வன்முறைச் சம்பவங்கள் வெடித்துள்ளன.

இது தொடர்பாக நேற்று இடம்பெற்ற நாடாளுமன்ற அமர்வில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்தே அமைச்சர்கள் குழு கண்டிக்கு புறப்பட்டுச் சென்றுள்ளது.

இதேவேளை, தெல்தெனிய சம்பவம் தொடர்பாக, முன்னாள் ஜனாதிபதிமஹிந்தகொழும்பில் சிவில் அமைப்புக்களோடு பேச்சில் ஈடுபட்டுள்ளார் எனக் கூறப்பட்டது. (ஐ)

## கண்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லர் கலகொட அத்தே ஞானசார தேரரும், மட்டக்களப்பு மங்களராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரருமே உள்ளனர் எனக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

இவர்கள் இருவரும், கடந்த ஞாயிற்றுக்கிழமை தெல்தெனியவுக்குச் சென்றதை அடுத்தே, அங்கு அமைதியற்ற நிலை தோன்றியதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, திகண, தெல்தெனிய உள்ளிட்ட கண்டி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வன்முறைகள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடந்த பகுதிகளில் பௌத்த பிக்குகள் பலரையும் காண முடிந்தது.

முஸ்லிம் இளைஞர்களின் தாக்குதலினால் காயமடைந்து மரணமான சிங்களச் சாரதியின் வீட்டுக்கு கடந்த ஞாயிறு இரவு பொது பலசேனாவின் பொதுச் செயலர் கலகொட அத்தே ஞானசாரதேரர்சென்றிருந்தார். இதற்குப் பின்னரே, திகணவில் முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் தீவிரமடைந்தன.

அதேவேளை, இந்த வன்முறைகளில் ஈடுபட்டனர் எனக் கைது செய்யப்பட்ட 24 சிங்களவர்களை விடுவிக்கக் கோரி, தெல்தெனிய பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டு நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு மட்டக்களப்பு மங்களாராமய விகாரையின் விகாராதிபதி அம்பிட்டிய சுமணரத்ன தேரரே தலைமை தாங்கியிருந்தார்.

அதேவேளை,வன்முறையில் ஈடுபட்ட குழுவினரைப் பௌத்த பிக்குகள் சிலர் வழிநடத்தும் காட்சிகளும் ஊடகங்களில் வெளியாகியுள்ளன.

வன்முறைகள் இடம்பெற்ற பகுதிகளில் காவியுடையுடன் பௌத்த பிக்குகள் காணப்படும் நிலையில், இந்தச் சம்பவங்களைப் பௌத்த பிக்குகள் சிலரே தூண்டிவிட்டுள்ளனர் எனச் சந்தேகங்கள் எழுந்துள்ளன.

அதேவேளை, வன்முறைகளைத் தூண்டி விட்ட பௌத்த பிக்குகளை கைது செய்யுமாறு அமைச்சர் ரிசாத் பதியுதீன் கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## இன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியுள்ளார்.

இலங்கையர் அனைவருக்கும் அண்மையில் நடந்த இனவாத வன்முறை கவலைக்குரிய விடயம் ஆகவேண்டும்.

அனைத்து இலங்கையரும், அவநம்பிக்கையையும், வெறுப்பையும் பரப்புவதைச் சமய, சமூக மற்றும் அரசியல் தலைவர்கள் எதிர்த்து நிற்கவேண்டும் என எதிர்பார்க்கின்றனர் என்று நான் நம்புகின்றேன் என்று இலங்கைக்கான பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டாரீஸ் தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார்.

அம்பாறை மற்றும் கண்டியில் ஏற்பட்ட சிங்கள – முஸ்லிம் மக்களுக்கு இடையேயான மோதல்களையடுத்தே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். (ஐ)

## 2 உடல்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று எரியுண்ட நிலையில் மீட்கப்பட்டமையால் அங்கு மீண்டும் பதற்ற நிலை தோன்றியுள்ளது.

நேற்றுமுன்தினம்இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து பிறப்பிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் நேற்றுக் காலை தளர்த்தப்பட்ட போதிலும், சடலங்கள் மீட்கப்பட்டதை அடுத்து ஏற்பட்ட பதற்றத்தால் தெல்தெனிய, பல்லேகல பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு மீண்டும் உடனடியாக நடைமுறைக்கு வந்தது.

முஸ்லிம்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளை அடுத்து, நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணிக்கு கண்டி முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.

எனினும், நேற்று முன் தினம் இரவும் சில இடங்களில் பள்ளிவாசல்கள் முஸ்லிம்களின் வாணிப நிலையங்கள் மீது தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த நிலையில் நேற்றுக் காலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டபோதும், கண்டி மாவட்டத்தில் பதற்ற நிலை நீடிக்கிறது.

நேற்று முன் தினம் இடம்பெற்ற வன்முறைகளின்போது கொல்லப்பட்ட இரண்டு ஆண்களின் சடலங்கள் நேற்று மீட்கப்பட்டதைஅடுத்துபதற்றநிலை மேலும் அதிகரித்துள்ளது.

திகண, கென்கல்லவில் நேற்றுத் தீக்கிரையாக்கப்பட்ட கடை ஒன்றுக்குள் இருந்து 27 வயதுடைய இளைஞன் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது. மற்றொரு ஆணின்சடலமும்நேற்று மீட்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில் மீண்டும் பதற்றநிலைஏற்பட்டதைஅடுத்து, நேற்று முற்பகல் தெல்தெனிய, பல்லேகலபொலிஸ்பிரிவுகளில் உடனடியாக ஊரடங்குச் சட்டம் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டது.நேற்றுமாலை6மணி வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில்இருக்கும்என்றுபொலிஸார் அறிவித்துள்ளனர். (ஐ)

## வன்முறைகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தெல்தெனிய தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளுக்கு விசேட குழுக்களை அமைப்பதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பொலிஸ் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது. அம்பாறை மற்றும் தெல்தெனியபிரதேசத்தில்நிலைமைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு விசேட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

அத்துடன் பொலிஸார் தமது கடமைகளை நிறைவேற்றவில்லை என்பது தவறான கருத்து. அனைத்துப் பொலிஸாரும் பொறுப்புடனேயே தமது கடமைகளை முன்னெடுத்திருக்கின்றார்கள்.

அனைத்து மதத்தினரும் அமைதியான முறையில் வாழ்வதற்கான வழிவகைகள் ஏற்படுத்தப்படும் – என்றார். (ஐ)

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இன வன்முறைகளைத் தடுக்கவே இந்தத்தீர்மானம் எடுக்கப்பட்டதாக அது மேலும் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் இரண்டாம் பிரிவைச் செயல்வலுப்படுத்தி மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளுடன் ஒரு வார காலத்துக்கு நாடு முழுவதும் அவசரகால நிலை ஜனாதிபதியால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

பாதுகாப்பான சூழலை மீண்டும் உறுதிசெய்தல், பொதுமக்களின் வாழ்க்கையை இயல்பு நிலைக்கு கொண்டுவருவதுடன் அத்தியாவசியதேவைகளையும் சேவைகளையும் வழங்குதல் மற்றும் அமைதி நிலையை ஏற்படுத்தல் போன்ற காரணங்களுக்காக மட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளுடன் ஒரு வார காலத்துக்கு அவசரகால ஒழுங்கு விதியை அமுல்படுத்த அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வாறு அவசரகால நிலை அமுல்படுத்தப்படுவதனால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளின் மூலம் தற்போதுள்ள நிலைமைகளைச் சீர்ப்படுத்தத் தேவையான சட்ட அதிகாரங்கள் இலங்கைப்பொலிஸுக்கும்முப்படையினருக்கும் வழங்கப்பட்டுள்ளன.

ஏதேனும் சட்டவிரோத நடவடிக்கைகளோ அல்லது இன மற்றும் சமய ரீதியான அமைதியற்ற சூழ்நிலைகளோ அல்லது அவற்றை ஏற்படுத்தும் நபர்களோ இனங்காணப்படுவாராயின் அவர்களது இன, மத அடையாளங்களையோ அல்லது கட்சி, நிற அரசியல் தொடர்புகளையோ கருத்திற் கொள்ளாது பக்கச்சார்பற்ற துரித நடவடிக்கைகளை அவர்களுக்கு எதிராக நடைமுறைப் படுத்துமாறு ஜனாதிபதி பாதுகாப்புத் துறையினருக்கு அறிவுறுத்தல் வழங்கியுள்ளார்.

இந்த ஒழுங்கு விதிகளைச் செயற்படுத்தும்போது அமைதியாகவும் நேர்மையாகவும் மக்களின் நலனுக்கும் அவர்களது அன்றாடவாழ்க்கைக்கும் இடையூறுகள் ஏற்படாதவண்ணம் செயலாற்றுமாறும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறாத வகையில் செயற்படுமாறும் பொலிஸாருக்கும்முப்படையினருக்கும் ஜனாதிபதி விசேட அறிவுறுத்தலை வழங்கியுள்ளார் –என்றுள்ளது.

போர்க் காலத்தில் நீடித்த அவசரகாலச் சட்டம் 2011ஆம் ஆண்டு ஓகஸ்ட் 25ஆம் திகதி முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நீக்கப்பட்டது.

இதேவேளை, கண்டியில் பள்ளிவாசல்கள், முஸ்லிம்கள் அதிகம் வசிக்கும் பகுதிகள், வாணிப நிலையங்களுக்கு அருகில் இராணுவத்தினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரிடம் நேற்று கையளிக்கப்படவில்லை எனக் கூட்டு எதிரணி அறிவித்துள்ளது.

பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை தொடர்பில் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்றுக் கூடி ஆராய்ந்தனர். அதன் பின்னரே அவர்கள் இந்தத்தீர்மானத்தை அறிவித்தனர்.

இதேவேளை, கூட்டு எதிரணியின்ஏற்பாட்டில்நுகேகொடவில் இன்று நடத்தப்படவிருந்த அரசுக்கு எதிரான மக்கள் சக்திப் பேரணியும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

நாட்டில்தற்போதுஏற்பட்டுள்ள குழப்பநிலையை அடுத்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தனது கீச்சகத்தில் பதிவிட்டுள்ளார். (ஐ)

## சட்டம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டமும் ஒழுங்கும் உரிய முறையில் செயற்படுத்தப்படவில்லை. சட்டம்தன்கடமையைச்செய்யத் தவறிவிட்டது.

இவ்வாறு குற்றம்சாட்டியுள்ளார் எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா.சம்பந்தன்.

சட்டத்தை உரிய முறையில் செயற்படுத்தி நீதியை நிலைநாட்டாவிட்டால், அந்தச் செய்தி குற்றவாளிகளுக்குச் சென்று அவர்களுக்குச் சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திவிடும் எனவும் அவர் எச்சரித்தார்.

கண்டி மற்றும் அம்பாறை ஆகிய பிரதேசங்களில் அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் அமைதியற்ற சம்பவங்களுக்கு எதிராக, ஜே.வி.பியின் தலைவரும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவுமான அநுர குமார திஸாநாயக்க, நேற்றுச் சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை ஒன்றை நாடாளுமன்றில் கொண்டுவந்தார்.

அதன் மீதான விவாதத்தில் பங்கேற்று உரையாற்றிய போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாட்டில் அண்மைய காலமாகச் சிறுபான்மை மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்டுள்ள வன்முறைச் சம்பவங்களை ஏற்றுக்கொள்ள முடியாது. உணவில் மருந்து கலந்திருப்பதாக அம்பாறையில் குழப்பம் விளைவிக்கப்பட்டது. அதே போல் விபத்துச் சம்பவமொன்றைப்பின்னணியாகக் கொண்டு கண்டியில் வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

இந்தச் சம்பவங்களின்போது சட்டம் ஒழுங்கு உரிய முறையில் செயற்படுத்தப்படவில்லை. அதற்கு என்ன காரணமென உயரிய சபையில் கேள்வியெழுப்ப விரும்புகிறேன். மதத்தலங்களுக்கும் வீடுகளுக்கும் சேதம் விளைவித்து, இவ்வாறு இனவாதச் செயற்பாடுகளில் ஈடுபடுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

நாட்டில் குறிப்பிட்ட ஒரு தரப்பினர் மாத்திரம் தங்களை உயர்ந்தவர்கள் என நினைத்துக்கொண்டு இவ்வாறான சம்பவங்களில்ஈடுபடுகின்றனர். இவற்றைத் தடுத்து மக்களைக் காக்க அரச கட்டமைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டும்.

நாட்டின் அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் இவ்வாறான சம்பவங்களின்போது, சட்டம் தன் கடமையைச் செய்யவேண்டும். நீதிநிலைநாட்டப்படவேண்டும். அவ்வாறில்லாவிட்டால், குற்றச்செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு அது சாதகமாக அமைந்துவிடும்–என்றார். (ஐ)

## திகண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறப்புக்குழுஒன்றைப்பொலிஸ்மா அதிபர் அனுப்பி வைத்துள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தக் குழு நேற்று செவ்வாய்க்கிழமை காலை திகண பகுதிக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, முஸ்லிம் மக்களின் வணிக நிலையங்கள், வீடுகள்மற்றும்பள்ளிவாசல்என்பனவை மீது தாக்குதல் நடத்திய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட சிங்களவர்கள் 24 பேரையும் வரும் 19ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (ஐ)

## கண்ணிவெடி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மொன்றை மேற்கொண்டார். அவர்அங்குகண்ணிவெடி அகற்றும் பணிகளைப் பார்வையிட்டார். அத்துடன்அந்தப்பணியில் ஈடுபட்டுள்ள பணியாளர்களையும் அவர் சந்தித்துப் பேசினார்.

இலங்கைக்கு மூன்று நாள் பயணம் மேற்கொண்டு கடந்த 5 ஆம் திகதி கொழும்பில் வந்தடைந்த தூதுவர் கொழும்பில் பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடினார். இதனையடுத்து நேற்றுக் கிளிநொச்சி, முகமாலை மற்றும் கிளாலி பகுதிகளுக்கு வருகை தந்தார்.

முகமாலைப் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட தூதுவர் தலைமையிலான குழுவினரைக் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகமும், இராணுவத்தினரும் வரவேற்றனர். இதனைத்தொடர்ந்து இராணுவத்தினரின் ஏற்பாட்டில் நடைபெற்ற கண்ணிவெடி அகற்றும் செயற்பாடுகள் குறித்து கலந்துரையாடலொன்றிலும் அவர் ஈடுபட்டார்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர் அங்கு கண்ணிவெடியகற்றும் பிரதேசத்துக்கு நேரடியாகச் சென்று கண்ணிவெடியகற்றும் பணிகளைப் பார்வையிட்டார்.

இதனைத் தொடர்ந்து அந்தப் பிரதேசங்களில்கண்ணிவெடியகற்றும் பணியாளர்களைச் சந்தித்துப் பல விடயங்கள் தொடர்பிலும் நீண்டதொரு கலந்துரையாடலில் ஈடுபட்டார். கண்ணிவெடியகற்றும்போது மீட்கப்பட்டுக் காட்சிப்படுத்தப்பட்டிருந்த கண்ணிவெடிகள் மற்றும் குண்டுகள் ஆகியவற்றையும் அவர் பார்வையிட்டார்.

இதன்பின்னர்கண்ணிவெடித் தாக்குதல்களுக்கு இலக்காகி அவயவங்களை இழந்துள்ள பலரையும் தூதுவர் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் அவர்களுக்குத்தனது ஆறுதல்களையும் தெரிவித்தார்.

கடும் வெயிலின் மத்தியில் நடந்து சென்று பணிகளைப் பார்வையிட்ட தூதுவருக்கு இராணுவத்தால் இளநீர் வழங்கப்பட்டது.

தூதுவரின் இந்தச் சந்திப்புக்களின்போது மீள்குடியேற்ற அமைச்சர்டி.எம்.சுவாமிநாதன், யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி மேஜர்ஜெனரல் தர்சன ஹெட்டியாராச்சி, கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பளைப் பிரதேச செயலர் உள்ளிட்ட அரச அதிகாரிகள் மற்றும் இராணுவத்தினர், கண்ணிவெடியகற்றும் பிரிவினர் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-7)

# எம்மையும் ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளிவிடாதீர்!

## சபையில் ரிஷாத் ஆவேசம்

கொழும்பு, மார்ச் 07

இந்த நாட்டில் அனைவரும் ஒன்றிணைந்து வாழ வேண்டும் என்பதே அனைவரதும் ஆசையாகும். தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி தமிழ் அரசியல் தலைவர்களைச் சுட்டுத்தள்ளியதைப் போன்று எம்மையும் ஆயுதம் ஏந்த வைத்து விட வேண்டாம்.

இவ்வாறு கோரிக்கை விடுத்தார் அமைச்சர் ரிஷாத் பதியுதீன்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

இதுவரை உலகத்திலேயே கண்டுபிடிக்கப்படாத ஒரு மருந்தை கொத்து ரொட்டியில் கலந்திருப்பதாகக் கூறி, அந்தக் கடையை உடைத்து, பள்ளிவாசல்களை உடைத்து இந்த நாட்டில் வாழும் அனைத்து முஸ்லிம் சமூகத்தினரையும் வேதனைப்படுத்தினார்கள்.

இந்தச் சம்பவம் நடைபெற்று ஒரு மணிநேரத்திலேயே அந்தப் பெரும்பான்மையினத்தவர் கைது செய்யப்பட்டிருந்தார். அதனையடுத்துப் பள்ளிவாசல்கள் சேதமாக்கப்பட்டன. எமது மக்கள் தாக்கப்பட்டார்கள். ஆனால் பொலிஸார் இதைக் கவனத்தில் எடுக்கவில்லை.

சிறுபான்மையின மக்கள் இந்த நாட்டில் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காகவே மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக தேர்ந்தெடுத்து அவரை வெற்றி பெறச் செய்தோம்.

ஆகவே அந்தச் சிறுபான்மையினரைக் காப்பாற்ற வேண்டியது இந்த அரசின் கடமை.

குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கப்பட்டால் தான் இன்று நாட்டில் இடம்பெறும் அசம்பாவிதம் கட்டுப்பாட்டுக்குள் வரும்.

தெனியாய சம்பவத்தில் 4 பேர் செய்த தவறுக்காக ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்தினரையும் காயப்படுத்தினார்கள். முஸ்லிம் இளைஞர் ஒருவரின் வீட்டுக்கு தீ வைத்ததில் அப்பாவி இளைஞன் உயிரிழந்தார். அவருடைய வீட்டுக்கு அருகில் இருந்த பள்ளிவாசலும் அடித்து உடைக்கப்பட்டுள்ளது.

மகேசன் பலகாய என்ற நபரும், மட்டக்களப்பிலிருந்து வந்த விகாராதிபதியுமே இந்தப் போராட்டத்துக்குக் காரணம்.

இந்த அரசில் இருக்க வெட்கம் இல்லையா? எங்களைப் பாதுகாக்க உங்களுக்கு அதிகாரம் இல்லையா?

நேரில் சென்று பார்த்த போது தான் எனக்கு உண்மையான நிலை தெரிந்தது.

பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு எம்மை ஏமாற்றி விட்டார்கள். மீண்டும் இந்த நாட்டில் இரத்த ஆறு ஓடவிடுவதற்காகவா இந்தச் சம்பவம்?

ஜனாதிபதி அமைச்சரவையில் வாக்குறுதி தந்துள்ளார். பிரதமர் இந்த சபையில் வாக்குறுதி தந்துள்ளார். ஆகவே இரு தலைவர்களும் தாம் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவேண்டும்.

அவ்வாறு இல்லை என்றால் அன்று தமிழ் இளைஞர்கள் ஆயுதம் ஏந்தி தமிழ் அரசியல் தலைவர்களை சுட்டுத்தள்ளியதைப் போன்று எம்மையும் ஆயுதம் ஏந்த வைத்து விட வேண்டாம் – என்றார். (ஐ)

# மேலதிக இராணுவம் கண்டிக்கு விரைந்தது

கொழும்பு, மார்ச் 07

கண்டிக்கு மேலதிகமாக இராணுவத்தினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரியவருகிறது.

ஜனாதிபதியின் உத்தரவுக்கமைய கண்டியின் பாதுகாப்பை உறுதி செய்ய இராணுவம் குவிக்கப்பட்டுள்ளது.

கண்டியில் கடந்த சில மணித்தியாலங்களாகவுள்ள நிலைமை தொடர்பாகப் புலனாய்வாளர்கள் வழங்கிய அறிக்கையை அடுத்தே அங்கு மேலதிக இராணுவம் அனுப்பிவைக்கப்படுகிறது என அறிய முடிகிறது. (ஐ)

# முஸ்லிம்களிடம் பௌத்தர்கள் மன்னிப்புக் கேட்கவேண்டும்!

## கூறுகிறார் அமைச்சர் கிரியெல்ல

கொழும்பு, மார்ச் 07

தெல்தெனிய, திகண பகுதிகளில் நடந்த வன்முறைகள் தொடர்பாக முஸ்லிம்களிடம் பௌத்தர்கள் மன்னிப்புக் கோரவேண்டும் என்று நாடாளுமன்றத்தில் தீர்மானம் கொண்டு வர வேண்டும் என அமைச்சரும் நாடாளுமன்ற அவைத் தலைவருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர், திகண, தெல்தெனிய சம்பவங்களின் விளைவாக அரச புலனாய்வுச் சேவைகள் வீழ்ந்து விட்டன.

சில வெளிநபர்களால்தான் இந்தநிலை உருவாக்கப்பட்டது. அவர்கள் எந்தப் பகுதியில் இருந்து வந்தார்கள் என்பது காவல்துறையினருக்குத் தெரியும். அதுபற்றி எமக்கும் கூடத் தெரியும்.

ஆனால் ஏற்படவிருந்த வன்முறைகள் பற்றிப் பொலிஸ் உயர் அதிகாரிகள் இருட்டில் இருந்தனர்.

மதத் தலைவர்கள் இந்த விவகாரம் குறித்துப் பேச்சு நடத்தி இணக்கப்பாட்டை ஏற்படுத்தியிருந்தனர். சில வர்த்தகர்கள், பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தினருக்கு இழப்பீடு வழங்கவும் முன்வந்தனர்.

ஆனால் வெளியில் இருந்து வந்த சிலர் அந்த முயற்சிகளை குழப்பி வன்முறைகளைத் தூண்டி விட்டனர் என்றும் தெரிவித்துள்ளார். (ஐ)

# கண்டிப் பாடசாலைகளுக்கு இன்றும் விடுமுறை

கண்டி மாவட்டத்திலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று புதன்கிழமை விடுமுறை வழங்கப்படுவதாக மத்திய மாகாண முதலமைச்சர் அறிவித்துள்ளார். கண்டி திகணவில் ஏற்பட்ட அசம்பாவிதங்களால் கண்டி மாவட்டம் முழுவதும் இன்று புதன்கிழமை காலை 6 மணிவரை பொலிஸ் ஊடரங்கு போடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, கண்டி மாவட்ட பாடசாலைகள் நேற்றும் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# திகண – அம்பாறைச் சம்பவங்களை ஆராய ஜனாதிபதி ஆணைக்குழு

## அமைச்சர் ஹக்கீம் வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 07

அம்பாறை மற்றும் திகண உள்ளிட்ட பிரதேசங்களில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு, ஜனாதிபதி ஆணைக்குழுவொன்று அமைக்கப்படவேண்டுமென ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் வலியுறுத்தியுள்ளார்.

அத்தோடு, குறிப்பிட்ட பிரதேசங்களில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டுமெனவும் ஹக்கீம் கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற சபை ஒத்திவைப்புவேளை பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே இந்த விடயங்களை முன்வைத்தார்.

அமைச்சர் தொடர்ந்து குறிப்பிடுகையில் –

உள்ளூராட்சித் தேர்தல் முடிவடைந்தவுடன் குறிப்பாக அம்பாறை மற்றும் கண்டி மாவட்டம் உட்பட நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இனவாத வன்செயல்கள், சமய ஸ்தலங்கள் மீதான தாக்குதல்கள் பொது மக்களின் உடைமைகளுக்குச் சேதம் விளைவித்தல் போன்றவை நடைபெற்று வருகின்றன. இந்தச் சம்பவங்கள் திடீரென ஏற்படுவன அல்ல. நாட்டையும், அரசையும் ஸ்திரமற்ற நிலைமைக்கு உள்ளாக்கும் நோக்கத்துடன் ஒரு இனத்தவருக்கு எதிராகத் திட்டமிட்டு முன்னெடுக்கப்படும் சூழ்ச்சியாகும்.

குறிப்பிட்ட பிரதேசங்களின் பாதுகாப்பு தொடர்ந்தும் ஸ்திரமற்ற நிலையிலேயே காணப்படுகிறது. அம்பாறை மற்றும் கண்டியில் ஒரே கும்பலே வன்முறையை தோற்றுவித்துள்ளது. ஆகவே இவ்விடயம் தொடர்பாக எம்முன் பல கேள்விகள் எழுகின்றன.

சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுதல், நீதியை நிலைநாட்டுதல் என்பவற்றுக்குப் பொறுப்பான பொலிஸ் திணைக்களம் நடந்து கொண்ட விதம், இந்தச் சம்பவத்தில் மிகவும் பாரதூரமான விடயமாக கணிக்கப்படுகின்றது. அம்பாறைப் பொலிஸார் பக்கச்சார்பாக நடந்துகொண்டுள்ளனர். எல்லா மக்களுக்கும் பாதுகாப்பு வழங்க வேண்டிய பொலிஸ் திணைக்களம் பக்கச்சார்பாகவே நடந்து கொண்டிருக்கின்றது. இந்தப் பக்கச்சார்பானது, வன்செயலை கட்டுப்படுத்துவதற்கும், வழக்குத் தாக்கல் செய்வதற்கும், அமைதியை பேணுவதற்கும் தவறியுள்ளது.

மக்கள் மத்தியில் நல்லிணக்கத்தையும், சமாதானத்தையும் ஏற்படுத்துவதற்கு அரசாங்கம் பொறுப்புணர்ச்சியுடன் செயற்படுகின்ற வேளையில், நிறைவேற்று அதிகாரத்தின்கீழ் வரும் ஒரு சாரார் இவ்வாறு நடந்து கொள்வதை எவ்விதத்திலும் அனுமதிக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் அமைப்பும், சர்வதேச சமூகமும் தற்போது எங்கள் நாட்டின் மீது கொண்டுள்ள நல்லெண்ணத்தைச் சீர்குலைக்கும் விதத்திலும் அதனூடாக மக்களின் பொருளாதார நிலைமையை பாழாக்குவதற்கும் இவ்வாறான செயல்களில் சிலர் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில், நாட்டின் ஜனநாயகத்தையும், அமைதியையும் இனங்களின் உரிமைகளையும் நிலைநாட்ட சகல விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும். அதற்கு ஜனாதிபதி ஆணைக்குழுவொன்றை அமைக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மக்களுக்கு இழப்பீடுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் – என்றார். (ஐ)

# யாழ்.பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 07

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் 33 ஆவது பட்டமளிப்பு விழா பிற்போடப்பட்டுள்ளது. இந்தத் தகவலை யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஆர்.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 23 ஆம் திகதி பட்டமளிப்பு விழா நடைபெறவிருந்த நிலையில் தவிர்க்க முடியாத காரணத்தால் அது பிற்போடப்பட்டுள்ளது.

பட்டமளிப்பு விழாவுக்கான புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# அரசின் மீதே சந்தேகம்!

## அவசரகாலச் சட்டம் தேவையில்லை என்கிறார் அநுரகுமார எம்.பி.

கொழும்பு, மார்ச் 07

அண்மைய காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள இன முரண்பாடுகள் அரசுக்குத் தெரிந்தே இடம்பெற்றிருக்கலாம் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று இடம்பெற்ற அமர்வில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கண்டியில் இடம்பெற்ற மோதல் திட்டமிட்ட ஒரு நாசகாரச் சதியாக இருக்கலாம். கண்டியில் இடம்பெற்ற சம்பவங்களின் தொடர்ச்சியை அவதானித்ததில் இவ்வாறான சந்தேகங்கள் எழுகின்றன.

கண்டி – திகண பகுதியில் இடம்பெற்ற மோதலின் போது ஒருவர் கொல்லப்பட்டார். இதனைத் தொடர்ந்து இரு தரப்பினருக்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்தது.

அண்மை காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள இனமுரண்பாடுகள் அரசுக்குத் தெரிந்தே இடம்பெற்றிருக்கலாம் எனச் சந்தேகம் எழுகின்றது.

இந்நிலையில், நாட்டின் சாதாரண சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்க முடியும். இதற்காக அவசரகால சட்டங்கள் அவசியமில்லை – என்றார். (ஐ)

# சிறைக்குள் கஞ்சா கடத்திய உத்தியோகத்தர் மறியலில்

யாழ்ப்பாணம், மார்ச் 07

சிறைச்சாலைக்குள் கஞ்சா கடத்திய குற்றச்சாட்டில் சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றால் நேற்றுச் செவ்வாய்க்கிழமை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த சிறைச்சாலை உத்தியோகத்தர், நேற்று முன்தினம் கைதியொருவருக்குக் கஞ்சாவைக் கடத்த முற்பட்டவேளையில் ஏனைய உத்தியோகத்தர்களால் கைது செய்யப்பட்டார்.

பின்னர் அவர் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

அவரிடமிருந்து 9 கிராம் கஞ்சாவை மீட்டுள்ளதாகப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

சந்தேகநபரை 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்ப்பாணம் நீதிவான் சி.சதீஸ்தரன் உத்தரவிட்டார். (ஐ)

காலைக்கதிர் Kalaikkathir



# ஜெய்ப்பூர் பணிகளையும் பார்வையிட்ட ஐ.நா. தூதர்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மார்ச் 07

வடக்குக்கு நேற்றுப் பயணம் மேற்கொண்ட ஐ.நா. சிறப்புத் தூதுவர் இளவரசர் மிரெட் ராட் செயின் அல் ஹுசைன் நேற்றுயாழ்.ஜெய்ப்பூர்வலு விழந்தோர் புனர்வாழ்வு நிலையத்துக்கும் சென்று அங்கு நடக்கும் பணி களைப் பார்வையிட்டார்.

மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன், வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரே, யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் மற்றும் அரச அதிகாரிகள் பலரும் இதில் கலந்துகொண்டனர்.

அங்கு கண்ணிவெடி களால் அவயவங்களை இழந்தவர்களுடன் ஐ.நா. தூதுவர் கலந்துரையாடி அவர்களது குறைகளைக் கேட்டறிந்தார். அத்துடன் செயற்கை அவயவங் களை உற்பத்தி செய்வதற் காக ஒரு கோடி 33 இலட்சம் ரூபா பெறுமதியான மூலப் பொருள்களையும் அவர் வழங்கினார். (ஐ-7)






# கண்ணிவெடி அகற்றும் பணியை 2 வருடங்களுக்குள் முடியுங்கள்!

## அரசிடம் ஐ.நா. தூதுவர் வலியுறுத்தல்

(எஸ்.நிதர்ஷன்)
யாழ்ப்பாணம், மார்ச் 07

இலங்கையில்கண்ணி வெடியகற்றும் பணிகள் இரண்டு வருட காலத்துக் குள்முடிவுறுத்தப்படவேண் டும்.அதற்குத்தேவையான அனைத்துஉதவிகளையும் வழங்குவோம் எனக் கண்ணிவெடிகளைத்தடை செய்யும் பிரகடனத்தின் ஐ.நா. சிறப்புத் தூதுவர் இளவரசர் மிரெட் ராட் செயிட் அல் ஹுசைன் தன்னிடம் கூறினார் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரி வித்தார்.

நேற்று வடக்குக்குவந்த ஐ.நா. தூதுவர் முகமா லைப் பகுதிக்கு நேரடிவிஜய மொன்றை மேற்கொண் டார். இதன்போதே அவர் இவ்வாறு கூறினார் என மீள்குடியேற்ற அமைச் சர் ஊடகங்களிடம் குறிப் பிட்டார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில்,

போர்க்காலத்தில் புதைக் கப்பட்ட கண்ணிவெடிகளை அகற்றும் இலங்கையின் செயற்பாடுகள் பெருமை யாக இருப்பதாக ஐ.நா. தூதுவர் கூறினார். கண்ணி வெடியகற்றும் செயற் பாட்டை இரண்டு வருடங் களுக்குள் அதாவது எதிர் வரும்2020ஆம்ஆண்டுக் குள் நிறைவுக்கு கொண்டு வரவேண்டுமென்றும் தூதுவர் கூறியுள்ளார்.

இந்தச் செயற்பாடு களைத் தொடர்ந்து விரை வாக முன்னெடுப்பதற் கான சலுகைகள் மற்றும் பண ரீதியான உதவிகளை வழங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார். அவர் சென்று வந்துள்ள நாடுகளுக்குள் இலங்கை நாடு மிகவும் கவர்ச்சிகரமானதாக உள்ளதாகவும் கூறினார்.

கண்ணிவெடிகளா லும் குண்டுத் தாக்குதல் களாலும் பாதிக்கப்பட்ட மக் களுக்கு அத்தியாவசிய மற்றும்அடிப்படைத்தேவை களைஏற்படுத்திக்கொடுக்க வேண்டும் என்றும் ஐ.நா. தூதுவர் மேலும் தெரிவித் தார்.

அவர்களுக்கான வீட் டுத் திட்ட வசதிகள் உட்பட அபிவிருத்தி நடவடிக்கை கள், பொருளாதார முன் னேற்ற ரீதியிலான செயற் பாடுகளை முன்னெடுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்டவர் களுக்கு இத்தகைய வசதி கள் ஏற்படுத்திக் கொடுக் கப்பட்டுள்ளதா என்றும் அங்கு நின்றிருந்த அரச அதிபரிடம் அமைச்சர் கேள்வி எழுப்பினார். அதற்கு அரச அதிபர், சில வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள் ளன என்று கூறினார்.

அவ்வாறு ஒரு சில வசதி கள் செய்து கொடுக்கப்பட் டிருந்தால் போதாது. அவர் களுக்கு அனைத்து வசதி களையும்செய்துகொடுக்க நடவடிக்கை எடுக்கவேண் டுமென்று தூதுவர் அரச அதிபரிடம்வலியுறுத்தினார் - என்றார் அமைச்சர் சுவாமிநாதன். (ஐ-7)

# சட்டம் ஒழுங்கை நிலைநாட்ட வேண்டும் அரசு

## மஹிந்த கோரிக்கை

கொழும்பு, மார்ச் 07

கண்டி-திகணபகுதியில்சட்டம்ஒழுங்கை நிலை நாட்டுவது இலங்கை அரசின் கடமையாகும் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தனது உத்தியோகப்பூர்வ 'டுவிட்டர்' தளத்திலேயே அவர் இதைக் குறிப்பிட் டுள்ளார்.

திகணபகுதியில்சட்டம்மற்றும்ஒழுங்கை நிலை நாட்டுவது இலங்கை அரசின் கட மையாகும். மோதல்களைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படலாம்.

ஆகவே அப்பகுதியில் இருப்பவர்களி டம் அமைதியாக இருக்குமாறு நான் கோரிக்கை விடுக்கின்றேன் என அவர் பதிவிட்டுள்ளார். (ஐ)














இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள நியூ சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.03.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.